بسم الله الرحمن الرحيم

“

அவர்கள்
அல்லாஹ்வின்
ஒளியைத் தம்
வாய்களைக் கொண்டு
(ஊதி) அணைத்து
விட நாடுகின்றனர்;
ஆனால் காஃபிர்கள்
வெறுத்த போதிலும்,
அல்லாஹ்
தன் ஒளியைப்
பூரணமாக்கியே
வைப்பான்.
(அல்குர்ஆன் : 61:8

”


பாபரி மஸ்ஜித் சதி அம்பலம் - 6

ரோஹிங்யா முஸ்லிம்களின் பிரச்சனைக்கு தீர்வு? - 14

ஐரோப்பிய பெண்கள் அணி அணியாக இஸ்லாத்தில் இணைகிறார்கள் ஏன்? - 19

பசுவின் பெயரால் அரசியல் - மாற்றத்திற்கு உள்ளாகும் சூழியலும், நலிவடையும் விவசாயிகளும் - 25

பசுக் கொலைகள் ஏன்? - 28

சொராபுதீன் வழக்கில் அமித்ஷாவை விடுவிக்க ரூ 100 கோடி பேரம் அம்பலம் - 30

பண மதிப்பு நீக்கம் மிகப்பெரிய ஊழல் பொருளாதார நிபுணர்கள் சாடல் - 34

நிலக்கரி என்னும் பேராபத்து - 35

பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சி - 41

தொடரும் தலீத்கள் மீதான வன்முறைகள் - 42

மீனாட்சிபுரம் தலித்கள் மத மாற்றத்திற்கு பின் நல்ல நிலையில் இருக்கின்றார்கள் - 45

பி.ஜே.பி-யின் வெற்று தேர்தல் அறிக்கைகள் - 47

இந்தியாவின் வரலாற்று திரிபுவாதத்துக்கு எதிராக கலிபோர்னியாவில் தொடர்ந்து போராடிவரும் மதச்சார்பற்ற சக்திகள் - 51

NIA-வின் அராஜகம் - 52

எது முதலில் ? - 54

அண்ணா போலிட் கோவ்ஸ்கயா விருது கவுரி லங்கேஷ் தேர்வு - 59

கோவையில் அரசு அச்சகத்தை தொடர்ந்து பாஸ்போர்ட் அலுவலகத்தையும் மூட பாஜக அரசு முடிவாம் - 60

திருவாளபுத்தூர் தாவா நிகழ்ச்சி - 61

காலம் தரும் பாடங்கள் - 62

மாற்றத்தை நோக்கி - 65



டிசம்பர்-2017 ரபியுல்லவ்வல்-1439

# வைகறை
## வெளிச்சம்

தனி இதழ் : ரூ. 20 /-
ஆண்டுச் சந்தா
உள் நாடு : ரூ. 240 /-
வெளி நாடு : ரூ. 3000 /-
பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
**DARUL ISLAM FOUNDATION TRUST**
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

ஆசிரியர்
**மு. குலாம் முஹம்மது**, M.A.,
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்
**கே.எம். இலியாஸ் ரியாஜி**, M.A.,

விளம்பரங்களுக்கு 81481 29887



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of Chennai courts.



**VAIGARAI VELICHAM**
52/1, Mannady Street, Room No. 7, Mannady,
Chennai - 600 001. Tel : 81481 29887
Email : darultrust@yahoo.com
Web : www.darulislam.in

http:/www.facebook.com/vaigarivelicham

# தேவை வாழ்க்கைக்கு ஓர் இலட்சியம்!

புளூவேல் Blue Whale, என்றொரு சமூக வலைத்தள ஆட்டம். Social Network Phenomenon. இந்த ஆட்டம் 50 நாட்களுக்கு நீளும் ஆட்டம். பல படித் தரங்கள். ஒவ்வொரு படித்தரமும் ஆட்டத்தில் கலந்து கொள்பவர்கள் முன் ஒரு சவாலாக வைக்கப்படும். கடைசி கட்டத்தில் அந்த சவால்கள் தற்கொலைக்குத் தள்ளும் அளவில்அமையும்.

இனம் புரியாமல் இந்த ஆட்டத்தில் கலந்துகொள்ளும் இளைஞர்கள் தற்கொலைக்குத் தள்ளப்படுகின்றார்கள். பெற்றோர்கள். பேதலித்துப் போகின்றார்கள்.

2016 ஆம் ஆண்டு ரஷ்யாவில் தொடங்கி உலக நாடெங்கும் தொற்று நோய் போல் தொற்றிக் கெண்டது.

2017 இல் நம் நாட்டிலும் வந்து இளைஞர்களைக் காவு கொள்ளத் தொடங்கியது. உச்ச நீதிமன்றம் வரை பாதிக்கப் பட்டவர்கள் சென்றார்கள். இப்படியொரு அடாத ஆட்டத்தைக் கண்டு பிடித்து வாழும் தலைமுறையைத் தற்கொலை செய்யும் பாதகத்தைச் செய்யலாமா? - என்றொரு வினாவை, இந்த ஆட்டத்தை கண்டுபிடித்த பிலிப் படிகின் Philip Budiekin என்ற ரஷ்ய நாட்டு இளைஞனைக் கேட்டால் அவன் இப்படிப் பதில் சொல்லி இருக்கின்றான்.

> "நான் எந்த அருகதையும் அற்றவர்கள் எனக் கருதுபவர்களை உலகை விட்டு அப்புறப்படுத்த விரும்புகின்றேன்" என்றான்.

இது அவனுடைய ஆணவமான பதில். ஆனால் வாழ்க்கையில் பலர் நாம் ஏன் வாழுகின்றோம் என்பதைப் பற்றிய தெளிவு இல்லாமல் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருக்கின்றார்கள் என்பது உண்மை.

ஒரு கட்டத்தில் இவர்கள் தாங்கள் இனிமேல் ஏன் வாழ்ந்திட வேண்டும் என எண்ணிடத் தலைப்பட்டு விடுகின்றார்கள். தற்கொலை செய்து கொள்கின்றார்கள்.

இவர்கள் தங்களுக்குள் தாங்களே கேட்டுக் கொள்ளும் கேள்வி?

இனியும் ஏன் வாழ்ந்திட வேண்டும்?

இவர்கள் கடன் சுமையால் தங்களை மாய்த்துக் கொள்ளும், விவசாயிகளைப் போன்றவர்கள் அல்ல.

அதேபோல் வறுமையின் வாட்டம் தாளாமல் தங்களைத் தாங்களே கொலை செய்து கொள்கிறார்களே அவர்களைப் போன்றவர்களும் அல்ல.

மாறாக எல்லா வளமும், நல் வாழ்வும் வாய்க்கப் பெற்றவர்கள்.

எடுத்துக்காட்டாக, கவா பாட்டா என்றொரு எழுத்தாளர். இவர் ஓய்வின்றி எழுதிக் கொண்டிருந்தவர். 1970களில் பர பரப்பை ஏற்படுத்தியவர். வளமான வாழ்க்கை வாய்க்கப் பெற்றவர்.

இவரிடம் ஒருமுறை உங்கள் வாழ்க்கையின் இலட்சியம், என்ன என்றொரு கேள்வியைக் கேட்டார்கள்.

என் வாழ்வின் இலட்சியம், நோபல் பரிசைப் பெறுவது என்றார்.

பின்னர் இலக்கியத்திற்கான நோபல் பரிசைப் பெற்றார். பத்திரிகையாளர்கள் இவரைப் பாராட்டிட ஓடோடி வந்தார்கள்.

ஆனால் அவர் தன் தனியறையில் பிணமாகக் கிடந்தார். அங்கிருந்த கடிதம், நான்

இலக்கை அடைந்தவிட்டேன். இனி ஏன் வாழ்ந்திட வேண்டும்? எனக் கேட்டிருந்தார்.

அமெரிக்காவில் *1970-80* களில் ஒரு புதிய மதம் தோன்றியது. அதன் பெயர் People's Temple "மக்களின் கோயில்" என்பதாகும். ஜிம்ஜோன்ஸ் "JIM JONES" என்பவர்தான் இந்த மதத்தைத் தோற்றுவித்தார்.

இவர் மக்களை சந்தோஷமாக சாகலாம் வாருங்கள், இந்த உலகில் இருந்தென்ன இலாபம் என்றார். வசதியானவர்கள் ஆனால் ஏன் வாழ்ந்திட வேண்டும் என்பதற்கான விடை தெரியாதவர்கள் நிரம்பவே இதில் இணைந் தார்கள்.

*906* பேர் ஒரே நேரத்தில் தற்கொலை செய்து கொண்டார்கள். அத்தனைபோரும் Grape Flavour எனும் பானத்தில் விஷத்தைத் கலந்து குடித்தனர், மாண்டனர். என்னே வெறுமை!

இறைவன் படைப்புகளிலெல்லாம் உயர்வாகப் படைத்தான் மனிதனை.

இறைவன் கூறுகின்றான்.

"திடமாக நாம் மனிதனை மிகவும் அழகான படைப்பாகப் படைத்தோம்" (அல்குர்ஆன் *-95:4* ) இறைவன் இந்த உலகைப் படைத்தான் மனிதனுக்காக ; அந்த மனிதனை படைத்தான் அந்த அல்லாஹ்வை மாட்சிமைப் படுத்த இறைவன் கூறுகின்றான்

**இன்னும், ஜின்களையும்,**
**மனிதர்களையும்**
**அவர்கள் என்னை**
**வணங்குவதற்காகவே அன்றி**
**நான் படைக்கவில்லை.**

அந்த படைத்தவனை வணங்குவது என்பது, அவனுக்கு முற்றாக கீழ்ப்படிந்து வாழ்வது, நன்மையை ஏவுவது, தீமையைத் தடுப்பது, அநியாயங்களுக்கு எதிராக சமருக்கு நிற்பது, பூமியில் குழப்பங்களை அகற்றி நீதியை எல்லா நிலையிலும் நிலை நிறுத்துவது, அதன்மூலம் நிம்மதியையும், அமைதியையும் பூமியில் நிலவவும் நிலைக்கவும் செய்வது. இப்படிப்பட்ட உயர்ந்த இலட்சியங்களுக்காக வாழ்வது, இறுதியில் அந்த இறைவனிடமே நாம் மீண்டும் செல்வோம் அப்போதுதான் அவனுடைய திருப்தியை பெறுவோம், மகிழ்ச்சியைப் பெறுவோம். காரணம் அவன் காட்டிய வழியில் வாழ்ந்து நீதியை நிலை நாட்டிட உழைத்தோம்.

மனித இனத்தின் நிம்மதிக்காக உழைத் தோம். இதனால் அல்லாஹ் நம்மை சுவர்க்கத்தில் நுழையச் செய்வான். அங்கே அனைத்து சுகங்களையும் பெறுவோம். இதுவே முறையான நிறைவான இலட்சியம்.

அந்த நாளுக்காக இந்த உலக நாட்களில் உழைப்போம். இந்த இலட்சியம் காப்போம், உழைப்போம், இந்த வாழ்க்கை வீணுக்காக என நினைப்பதை தவிர்ப்போம்.

இறைவன் கேட்கின்றான்

"நாம் உங்களைப் படைத்ததெல்லாம், விணுக்காக என்றும், நீங்கள் நம்மிடத்தில் நிச்சயமாக மீட்கப் பட மாட்டீர்கள் என்றும், எண்ணிக் கொண்டீர்களா?" - அல்குர்ஆன் *23:115*

ஆக நாம் ஓர் இலட்சியத்திற்காகப் படைக்கப் பட்டிருக்கின்றோம் என்பதை உணர்ந்து, அதற்காக வாழ்ந்திடுவோம்.

இந்த இலட்சியத்தை இளம் வயதிலேயே இளைஞர்களின் மனதில் பதிய வைப்போம். தற்கொலைகளை தவிர்ப்போம் இன்ஷா அல்லாஹ். மேலும் பார்க்க திருக்குர்ஆன் வசனங்கள் *(4:29) (21:16) (3:135) (7:172-72) (67:2)*


# வைகறை வெளிச்சம்
இதழில்
## விளம்பரம் செய்து
## பயனடையுங்கள்



# பாபரி மஸ்ஜித் சதி அம்பலம்

பாபரி மஸ்ஜித் வழக்கு உலகிலேயே மிகவும் அதிகமான அண்டுகள் நடந்துவரும் வழக்கு இத்தனைக் காலம், இந்த வழக்கு நீண்டு கொண்டே செல்வதற்கான காரணம், நமது நீதி மன்றங்களுக்கு, இதில் நீதி வழங்க மனமில்லை.

அதற்குக் காரணம், நீதி முஸ்லிம்களுக்கு சாதகமானது. ஒருமுறை நீதி வழங்கிவிட்டால், பாரதீய ஜனதா கட்சிக்கும், அதன் அடிநாத மாக விளங்கும் ஆர்.எஸ்.எஸ். முதலாய சங்கப்பரி வாரங்களுக்கும் அது பேரிடியாக விழும்.

பாரதீய ஜனதா அதன் அடிநாதமாக அமையும் சங்கப்பரிவாரம் இவை சுமார் 150 ஆண்டுகள் இந்தப் பாபரி மஸ்ஜித், காசி, மதுரா விலுள்ள மஸ்ஜித்கள் இவற்றை மையமாகக் கொண்டே தங்கள் அமைப்புகளை வளர்த்து வருகின்றார்கள்.

இதில் இவர்களின் மகத்தான வெற்றி என்னவெனில் இதைக்காட்டியே ஒருபோலி ஒற்றுமையை ஏற்படுத்தி விட்டார்கள். அதில் முஸ்லிம்களை அந்நியப்படுத்திவிட்டார்கள்.

பாபரி மஸ்ஜித்க்காக இயக்கம் கட்டித்தான் தொடக்க நாட்களில் சங்கப்பரிவாரத்தையும், பாரதீய ஜனதா கட்சியையும் வெகு ஜனப்படுத் தினார்கள். சுமார் 150 ஆண்டுகளாக நடந்து வரும் இந்த வழக்கில் இவர்களின் - சங்கப் பரிவாரத்தின் வெறுப்புப் பிரச்சாரத்தில் வீழ்ந்த பலர் வழக்கறிஞர்களாகவும், நீதிபதிகளாகவும் அமர்ந்து விட்டார்கள்.

இப்போது நாட்டின் பல்வேறு நீதி மன்றங்களும், மோடியின் பேரவையாக மாறிப் போயின, சங்கப் பரிவாரத்திற்கு வேண்டியவர் களும், சங்கப்பரிவாரத்தில் அங்கம் வகித்தவர் களும் நீதிபதிகளாக அமர்ந்திருக்கின்றார்கள். இதனால் நிச்சயமாக பாபரி மஸ்ஜித் வழக்கில் நீதிக்குவாய்ப்பில்லைஎன்பதேஅரசியல்பார்வை யாளர்கள், சமூக சிந்தனையாளர்கள் இவர்களின் கருத்து.

**மத சார்பின்மை**

எப்படி நீதிமன்றங்களும், ஊடகங்களும் சங்கப் பரிவாரத்திற்கு சாதகமாக சிந்திக்கின்ற னவோ அதேபோல்தான், தேர்தல் ஆணையமும் சிந்திக்கின்றது செயல்படுகின்றது.

தேர்தல் சட்ட விதிகளின்படி பார்த்தால் பாரதீய ஜனதா கட்சியை ஓர் கட்சியாகவே தேர்தல் ஆணையம் பதிவு செய்திருக்கக் கூடாது. ஆனால் இந்திய ஜனநாயகம் ஓர் விபரீதத்தின் விளைவு இங்கே நடப்பவை. இந்துத்துவாவிற்கு சாதகமாகவே நடக்கும் என்பதையே எப்போதும் நமது தேர்தல் ஆணையம் காட்டி வருகின்றது.

இப்போது பாபரி மஸ்ஜித் இருந்த இடத்தில் கோயில் கட்டுவோம் என தங்கள் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்கள். பாரதீய ஜனதா கட்சியைச் சார்ந்தவர்கள் எதுவும் செய்ய வில்லை தேர்தல் ஆணையம், நாடாளுமன்ற தேர்தலின்போது சாமி படங்களைப் போட்டு ஓட்டுக் கேட்டார் நரேந்திர மோடி. அணியணி யாக புகார்கள் பாய்ந்தன தேர்தல் ஆணையத்தை நோக்கி. லேசாக ஓர் எச்சரிக்கையை மட்டுமே அனுப்பியது தேர்தல் ஆணையம். அதை அந்தக் கட்சியினர் கண்டுகொள்ளவே இல்லை.

உண்மையைச் சொன்னால் அதன்பின் தான் மோடி வாரணாசி தொகுதியில் மதத்தின் பெயரால் மிகவும் அக்ரோஷமாக ஓட்டுக் கேட்டார். ஆக தேர்தல் ஆணையம் ஒர் செல்லாக் காசு. அதேபோல் - இவர்கள் நாட்டிலுள்ள நீதி மன்றங்களை வளைத்துக் கொண்டிருக்கின் றார்கள்.

இப்போது உச்சநீதிமன்றம் நீதி வழங்க தயங்கி, தயங்கி, பாபரி மஸ்ஜித் இருந்த இடத்தில் கோயில் கட்டிடும் விதத்தில்தான் தீர்ப்பு வழங்கும் நாளை கணக்குப் பார்த்துக் கொண்டி ருக்கின்றது.



**உச்ச நீதி மன்றம்**

பாபரி மஸ்ஜித் வழக்கை உச்ச நீதிமன்றந்தான் இத்தனை நாள் இழுத்து அடித்தது. உச்ச நீதி மன்றம் மனது வைத்திருந்தால் நீதியை வழங்கி இருக்கலாம். நீதி வழங்கி இருந்தால் 470 ஆண்டு காலபுராதனச்சின்னம்காப்பாற்றப்பட்டிருக்கும்.

அந்த இடத்திற்கும் மஸ்ஜித்-க்கும் உரியவர் களான முஸ்லிம்கள் தொழுகையை நடத்திக் கொண்டிருப்பார்கள். நாடு இந்துக்கள் என்றும், முஸ்லிம்கள் என்றும் பிளவு பட்டிருக்கும்.

**உச்ச நீதிமன்றத்தில் தந்த வாக்குறுதி**

அடுத்து பாபரி மஸ்ஜித் இடிக்கப்பட்ட அதாவது ஷஹீத் ஆக்கப்பட்ட நாளில் பாபரி மஸ்ஜித்-ஐ பாதுகாக்கும் பொறுப்பையும், அதிகாரத்தையும் உச்ச நீதிமன்றம் பெற்றிருந் தது. காரணம் அன்றைய நாட்களில் பாபரி மஸ்ஜித் வீற்றிருக்கும் அயோத்யா இடம்பெற்ற உத்திர பிரதேச மாநிலத்தின் முதலமைச்சராக இருந்த கல்யாண் சிங் உச்ச நீதிமன்றத் தில், நான் பாபரி மஸ்ஜித்-ஐ சேதாரமில்லாமல் பாதுகாப்பேன் என வாக்குறுதி வழங்கி இருந்தார்.



கல்யாண் சிங்

அவர் வாக்குறுதியை அதாவது உச்ச நீதிமன்றத்திற்கு தந்த வாக் குறுதியைக் காப்பாற்றிடவில்லை. மாறாக, அவர் பாபாரி மஸ்ஜித்.ஐ இடிப்பதற்கு தேவையான வசதி களைச் செய்து தந்தார். இதுதான் நடந்து கொண்டிருக்கின்றது என்பதை மத்திய அரசின் பார்வை யாளர்களும், உச்ச நீதி மன்றத்தின் பார்வையாளர்களும் சொல்லிக் கொண்டே இருந்தார்கள். ஆனால் அனைத்தும் முடிவும் வரை மத்திய அரசும் உச்ச நீதிமன்றமும் கனைத்துக் கூட காட்டியதில்லை.

**அரசும் அன்றைய பிரதமர் நரசிம்மராவ்...?**

கரசேவர்கள், மதியம் இரண்டு மணிவரை தான் அங்கே நின்றார்கள். அவர்களால் முழு மஸ்ஜித்-ஐ யும் இடித்திட இயலவில்லை. மீதி உள்ள பகுதிகளை பிரதமர் நரசிம்மராவ் அவர்களின் ஏற்பாட்டில் அரசின் இயந்திரங்கள் தாம் இடித்தன.

பிரதமர் நரசிம்மராவ் இன் கரசேவை அத்தோடு நின்றிடவில்லை. மூன்று நாட்கள் கரசேவர்களை தங்கவைத்து தற்காலிக கோயிலைக் கட்டி முடிக்கவும் புனஸ்காரங்கள் செய்யவும் ஏற்பாடுகள் செய்தார்.

அதன்பின் மத்திய அரசின் செலவு ஏற்பாடுகள் இவற்றின் கீழ் 300 ரெயில்கள் ஏற்பாடு செய்யப்பட்டு அவற்றின் வழி இலவசமாகக் கரசேவர்கள் அவரவர்கள் இல்லங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள்.

இத்தனையும் முடிந்த பின் மஸ்ஜித் இடிக்கப்பட்டு விட்டது. இடிக்கப்பட்டது மீண்டும் கட்டப்படும் என்றார்.




மஸ்ஜிதை சேதாரமில்லாமல் பாதுகாப்பேன் என உச்ச நீதிமன்றத்தில் வாக்குறுதி தந்தார்.

கல்யாண் சிங் தன் கடமையில் தவறினார். இந்த மாபெரும் குற்றத்திற்கு, உச்ச நீதிமன்றம் தந்த தண்டனை என்னவெனில் அவர் உச்ச நீதிமன்றம் வர வேண்டும் என உத்தரவு வந்தார். நீதிமன்றம் பிரியும் வரை நீதி மன்றத்திலேயே இருக்க வேண்டும் எனத் தண்டனை. மதியம் மூன்று மணிக்கு நீதிமன்றம் கலைந்தது. ஒய்யார மாக அவர் உத்திரப் பிரதேசம் திரும்பினார்.

இதில் உச்ச நீதிமன்றம் நடந்துகொண்ட விதம் தான் தவறிழைத்தவரை தட்டித் தந்தது போல் அமைந்தது.

உச்ச நீதிமன்றம் பாபரி மஸ்ஜித் வழக்கில் எப்படி நடந்துகொள்ளும் என்பதற்கான பல எடுத்துக் காட்டுகளில் இதுவும் ஒன்று.

**வழிபாட்டு உரிமையைப் பற்றிய வழக்கு...! பாபரி மஸ்ஜித்**

மஸ்ஜித் இடிக்கப்பட்ட பின் உச்ச நீதி மன்றத்தில், முஸ்லிம்கள் ஒரு மனுவைத் தந்தார்கள். அந்த மனுவில் மஸ்ஜித் இருந்த இடத்தில் அதனை இடித்தவர்களுக்கு வழிபட அனுமதி வழங்கப் பட்டிருக்கின்றது. அதில் பல ஆண்டு காலமாக தொழுகை நடத்திக் கொண்டிருந்த எங்களுக்கும் அங்கே தொழுகை நடத்திட அதாவது எங்களுடைய வழிபாடு களை நடத்திட அனுமதி வேண்டும் எனக் கேட்டார்கள் முஸ்லிம்கள்.

இதற்கு உச்ச நீதிமன்றம் தந்த பதில், உச்ச நீதிமன்றம் எத்தகையதொரு போக்கை கொண்டது என்பதைத் தெளிவு படுத்தும்.

முஸ்லிம்களுடைய மனுவுக்குப் பதில் தந்த உச்ச நீதிமன்றம் "பாபரி மஸ்ஜித்-ஐ இடித்த தால் வழிபாட்டு உரிமையை இழந்தது முஸ்லிம் களல்ல. இந்துக்கள் தாம் இதன்பின் அந்த மனுவிலோ வேறு எந்த மனுவிலோ கேட்காத ஒருவிஷயத்தைப் பற்றிய பேசியது. அது இப்போது ராம்லல்லா சிலைகளுக்காக அமைக் கப்பட்டிருக்கும் கூடாரம் எதிர்வரும் பருவ மழை காற்று இவற்றைத் தாங்கிடுமா என்பதை கண்டறிந்து, அந்தக் கூடாரத்தை வலுவாக அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பரிந்துரைத்தது. இப்படியொரு கோரிக் கையை எதிர் தரப்பார் கூட கேட்க வில்லை.

ஆக உச்ச நீதிமன்றம் என்ன சொல்கின்றது என்றால் முஸ்லிம்கள் வழிபாட்டு உரிமை தொழும் உரிமையை என்றெல்லாம் இங்கே வந்தால், சம்மட்டி அடி கிடைக்கும். கோயில் எழுப்பப்படும்.

**இதைத்தான் மூத்த வழக்கறிஞர் இராஜீவ் தாவன் இப்படிக் குறிப்பிட்டார்.**

"முஸ்லிம்கள், பெண்கள், தலித்கள் இவர்களுக்கு இந்தியா வில் நீதி கிடைக்காது. முஸ்லிம்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு நீதி கிடைக்காது என்பது மட்டுமல்ல, நீதியின் பெயரால் அவர்கள் கொடுமைப்படுத்தப் படுவும் படுவார்கள்" The Hindu. 29-3-2003




ஆக, நாம் மேலேக் குறிப்பிட்டவை உச்ச நீதிமன்றம் எப்படி நடந்துகொள்ளும் என்பதை எடுத்துக்காட்டும்.

**அலஹாபாத் உயர்நீதிமன்றத் தீர்ப்பிற்கு பின் உச்சநீதிமன்றம்**

அலஹபாத் உயர் நீதிமன்றம், நீதி கேட்கப் போன முஸ்லிம்களுக்குத் தந்த நீதி என்ன வெனில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான இடத்தை மூன்றாகப் பிரித்தது. கண்ணைப் பொத்திக் கொண்டு அநீதியை முஸ்லிம்களின் முகத்தில் தூக்கியெறிந்தது. முஸ்லிம்களுக்கு இனி நீதி கிடைக்காது என்பதை உரக்க முழங்கிற்று செப்.30, 2010 ஆம் நாளில்.

அலஹாபாத் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு பின்னணியில் அரசு-மட்டுமல்ல, மத்திய உளவுத் துறையின் கையுமிருந்தது.

நீதிபதி சிபத்துல்லாகான், கொச்சையாக மிரட்டப்பட்டார். மத்திய உளவுத் துறையில் (இந்தியா டுடே 11-10-2010)

(இவற்றையெல்லாம் நாம் பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள் என்ற நூலில் விபரமாகத் தந்துள்ளோம்) வாசகர்கள் அதனை வாங்கிப் படிக்கவும்.

அலஹாபாத் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை உலகமே எள்ளி நகையாடியது.

பாபரி மஸ்ஜித் இருந்த இடத்தைப் பங்கு வைத்து அல்லது கூறு போட்டுத் தாருங்கள் என அலஹாபாத் உயர் நீதி மன்றத்தை அணுகிய எவரும் கேட்கவில்லை. எவரும் கேட்காததை யெல்லாம் கொடுக்கும் இந்திய நீதிமன்றங்கள், அப்படி பிளந்து, பிரித்துக் கொடுக்கு மிடம் முஸ்லிம்களுக்குடையதாக இருந்தால் போதும்.

பின்னர் இந்தத் தீர்ப்பை எதிர்த்து முஸ்லிம்கள் உச்ச நீதிமன்றம் சென்றார்கள். மே 9,2011-இல் உச்ச நீதிமன்றத்தில் இந்த முஸ்லிம்களின் மேல் முறையீடு விசாரணைக்கும், அனுமதிக்கும் வந்தது.

நீதிபதிகள் அப்தாஃப் ஆலம் R.M.லோடி ஆகியோர் நீதிமன்றத்தில் ஓர் அறிவிப்பை பகிரங்கமாக வைத்தார்கள். அந்த அறிவிப்பு இந்த நீதிமன்றத்தில் யாராவது அலஹாபாத் நீதிமன்றத்தின் தீர்ப்பை ஆதரிக்கின்றீர்களா என்பதே.

நீதிமன்றத்தில் யாரும் “ஆமாம்“ எனச் சொல்லிடவில்லை. எல்லோரும் அலஹாபாத் உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பு செயல்படக்கூடாது. அதன் செயல்பாட்டை நிறுத்தி வைத்திட வேண்டும் என்றார்கள். இதனை ஓர் ஆணை யாக உச்ச நீதிமன்றம் பிரப்பித்தது (Source : DNA-May 10, 2010 Front Line April 28. 2017)

அத்தோடு உச்ச நீதிமன்ற நீதிபதிகள் “அலஹாபாத் உயர் நீதிமன்றம் இந்த வழக்கின் ஒரு புதுப் பிரச்சனையை கிளப்பி உள்ளது. யாரும் கேட்காததையெல்லாம் எல்லாம் கொடுத்திருக் கின்றது” எனச் சாடினார்.

ஆனால் அப்போதும் கூட உச்ச நீதிமன்றம் அங்கே நடந்துகொண்டிருக்கும் புஜா புனஸ் காரங்களை நிறுத்தவுமில்லை. முஸ்லிம்களின் வழிபாட்டு உரிமையை மீட்டுத் தந்திடவு மில்லை. (1994-இல் ஒரு Constitution Bench அரசமைப்பு அமர்வுதான். இந்தப் பூஜா புனஸ் காரங்களை அனுமதித்தது)





ஆக ஒரு கண்ணுக்கு மையும், மறு கண்ணுக்கு சுண்ணாம்பும் என்பது நமது உச்ச நீதிமன்றத்தின் வரலாற்றுப்போக்கு, அணுகு முறை,.

**மோடியின் ஆட்சி**

நாம் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல் பாரதீய ஜனதா கட்சி, பாபரி மஸ்ஜித் இருந்த இடத்தில் கோயில் கட்டுவோம் என தனது தேர்தல் அறிக்கையில் பிரகடனப்படுத்தியது. அதன்மூலம் தீவிரவாதிகளை இந்துத்துவா உற்சாகப்படுத்தியது, ஆட்சிக்கு வந்தது.

பின்னர் தன் வாக்குறுதியை நிறைவேற்றிட அதாவது பாபரி மஸ்ஜித நின்றிருந்த இடத்தில் கோயில் கட்டிட, வகை செய்யும் விதத்தில் தீர்ப்பு வழங்கிட உச்ச நீதிமன்றத்திற்கு அழுத்தங்களைத் தந்தது.

இதனால் முதலில் பாபரி மஸ்ஜித் சம்மந்தப்பட்ட எல்லா ஆவணங்களையும் தமிழில் மொழிப் பெயர்த்த பின்னரே வழக்கை விசாரணைக்கு எடுப்போம் என அடம் பிடித்த உச்ச நீதிமன்றம் வழக்கை விரைந்து விசாரிக்கப் போவதாக அறிவித்தது. இதனடிப் படையில் வழக்கு மார்ச்சு *21, 2017* அன்று விசாரணைக்கு எடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அன்று அப்போதைய உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஒரு கட்டப்பஞ்சாயத்தை பரிந்துரைத் தார். அதில் நானும் வேண்டுமானால் கலந்து கொள்கிறேன் என்றால் இதைவிடக் கேவலமாக இன்னொரு அறிவிப்பையும் செய்தார் “Take a bit give a bit” என்றார். அதாவது கொஞ்சம் கொடுத்து, கொஞ்சம் எடுத்துக்கொள்ளுங்கள் என்றார். (Front Line April 28, 2017)

நாம் அப்போது வைகறை வெளிச்சத்தில் விரிவாக விளக்கிச் சொன்னோம். அது அன்றைய தலைமை நீதிபதி J.S. கேகர், பாபரி மஸ்ஜித் தொடர்பான எல்லா ஆவணங்களையும், சாட்சியங்களையும் முற்றாகப் படித்துவிட்டார். அதில் முழுக்க முழுக்க நியாயம், முஸ்லிம்களின் பக்கம்தான் இருக்கின்றது என்பதைக் கண்டு கொண்டார்.

ஆனால் முஸ்லிம்களுக்கு நிச்சயமாக முடியாது என முடிவு செய்தார். அதனால் கட்டப்பஞ்சாயத்தைப் பரிந்துரைத்தார். இப்போது வழக்கை விசாரிக்காமலேயே தீர்ப்பு வழங்காமலே ஓய்வு பெற்று விட்டார்.

இந்நிலையில் வழக்கறிஞர்களும் சமூக ஆர்வலர்களும் நீதிபதி கேஹரிடம் சிலபல கேள்விகளைக் கேட்டார்கள்.

*தலைமை நீதிபதி அவர்களே!*

*1949 டிசம்பர் 22/23 ஆம் நாள் இரவு சிலைகளை பாபரி மஸ்ஜித்க்குள் வைத்தது கிரிமினல் குற்றம்., முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப் பட்டுள்ளது., வழக்கும் நடந்து கொண்டிருக் கின்றது. சிலையை வைப்பது குற்றம். இப்போது இந்தக் குற்றத்தைச் செய்தவர்களுக்கு அந்த இடத்தில் ஒரு பகுதியை அவர்களுக்கு விட்டுத் தாருங்கள் என்பது அவர்கள் தரும் குற்றத்திற்கு வழங்கப்படும் சன்மானந்தானே?*

அடுத்து டிசம்பர் *6 1992*-இல் பாபரி

மஸ்ஜித்-ஐ இடித்த குற்றத்தில் "Criminal Conspiracy" கிரிமினல் சட்டங்களின் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய சதி நடந்திருக்கின்றது எனக் குற்றப் பத்திரிகையை CBI/Central Beureu of Investigation மத்திய புலனாய்வுத் துறை தாக்கல் செய்துள்ளது. இதில் மே 30, 31, 2017 -இல் அத்வானி முதலானோர மீது விசாரணை தொடங்குகின்றது.

இந்நிலையில் அந்தப் பள்ளிவாசலின் ஒரு பகுதியை இந்தக் கிரிமினல் குற்றவாளிகளுக்கு, சதிகாரர்களுக்குப் பிரித்துத் தந்திட வேண்டுமா?

உங்கள் வீட்டை முழுமையாகக் கொள்ளை அடித்த ஒருவருடமிருந்து அதைமீட்க காவல் துறை, நீதித்துறை இவற்றை அணுகினால் அதில் நீதித்துறை கொள்ளைக் காரனுக்கும் ஒரு பகுதியை கொடுங்கள், கொஞ்சத்தை உங்களுக்கும் வைத்துக் கொள்ளுங்கள் என்பதுபோல் இல்லையா?

எப்போது கொள்ளையர்களுக்கும் கிரிமினல் குற்றவாளிகளுக்கும் பங்கு தந்து நீதி வழங்கிடும் நெறிமுறையை நீங்கள் ஏற்படுத்தினீர்கள்?

தலைமை நீதிபதி அவர்களே!

பாபரி மஸ்ஜித் விவகாரத்தில் இப்படியெல்லாம் நீங்கள் தகிடுத் தத்தங்களை செய்து முஸ்லிம்களுக்கு அநீதி இழைத்துவிடலாம். அவர்கள் ஏற்கெனவே நீதித்துறை மேல் நம்பிக்கை இழந்துவிட்டார்கள். ஆனால் இதே நீதியை இதர சொத்துச் சண்டைகளுக்கும், முரட்டு தனமான மூட நம்பிக்கை, மத நம்பிக்கை என ஏனைய வழக்குகளிலும் பயன்படுத்தலாமா? உண்மையில் தேவைப்படும போது நீதி மன்றங்கள் உச்ச நீதி மன்றத்தைக் காட்டி இவற்றையெல்லாம் செய்யும்.

அந்நிலையில் நீதிமன்றங்களே கட்டப்பஞ்சாயத்துக்களாக மாறிவிடாதா? - இந்தக் கேள்விகளுக்கு அகப்பட்டதை அள்ளிச் சுருட்டிக் கொண்டு ஓடிவிட்டார், விடைச் சொல்லாமலே.

**ஷியாக்களின் குளறுபடி = மாறும் சதி**

பாபரி மஸ்ஜித் வழக்கில இன்னொரு சிக்கலை ஏற்படுத்தி இருக்கின்றார்கள். அதாவது அது ஷியாக்களின் பள்ளிவாசல் என்றும், அதை ஷியாக்கள் இராமர் கோயில் கட்ட விட்டுத் தந்திட தயாராக இருக்கின்றார்கள் என்றும் கதைக் கட்டி விடுகின்றார்கள். இதற்காக சில கைக்கூலிகளை ஏவி உச்ச நீதிமன்றத்தில் ஒரு மனுவைத் தாக்கல் செய்ய செய்தார்கள். அந்த மனுவை உடனேயே உச்ச நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டுள்ளது.

நீதி நெறியின்படி இந்த மனுவை உச்ச நீதிமன்றம், ஏற்றிருக்கக் கூடாது. காரணம், உச்ச நீதிமன்றம் ஏற்கெனவே சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் - சாட்சியங்கள் தொல்லியல் அய்வுகள், வரலாற்று ஆய்வாளர்களின் அறிக்கைகள், வாதங்கள், எதிர்வாதங்கள் இவற்றைத்தான் பரிசீலித்து தீர்ப்பு வழங்கிட வேண்டும்.

ஆனால் உச்ச நீதிமன்றத்தின் நோக்குப் போக்கும், அங்கே கோயில் கட்டிட ஏற்பாடு செய்வதே. அதனால் கோயிலுக்குச் சாதகமாக கிடைப்பதையெல்லாம் ஏற்றுக் கொள்கின்றது. ஆனால் ஆகஸ்ட் 11, 2017-இல் இந்த ஷியாக்களின் சார்பில் சுப்ரமணியசுவாமி கொண்டு வந்த சிறப்பு முறையீட்டை வைத்தபோது இதே உச்ச நீதிமன்றம் மறுத்தது. அப்போது உச்ச நீதிமன்றம், இந்த வழக்கில் தலையிடவோ அதை நீதிமன்றத்தின் சிறப்புப் பார்வைக்குக் கொண்டு வந்திடவோ சுப்ரமணிய சுவாமிக்கு எந்த அருகதையும் (Locus Standi) இல்லை. எனக் கூறியது. ஆனால் இப்போது உச்ச நீதிமன்றம் அதை ஏற்றுக் கொண்டுள்ளது. இது உச்ச நீதிமன்றத்தின் நோக்கத்தைத் தெளிவுப்படுத்துகின்றது. அதாவது ஒரு புது சதியை தொடங்கியுள்ளது.

**ஷியாக்கள்**

ஷியாக்களில் ஒரு சிறு கூட்டம் எப்போதும் விலை போகின்றது. இவர்கள் இந்த விவாகரத்தை அதாவது பாபரி மஸ்ஜித் ஷியாக்களுக்குச் சொந்தம் என்பதை இப்போதுதான் எழுப்புகின்றார்கள் என்றில்லை.

1946-களிலே அதாவது 72 ஆண்டுகளுக்கு முன்னரே எழுப்பினார்கள். அப்போது இந்த வழக்கு பைஜாபாத் மாவட்ட தலைமை நீதிபதியின் நீதிமன்றத்தில்தான் வந்தது. ஷியாக்களின் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியங்கள் சுன்னி முஸ்லிம்களின் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியங்கள் இவற்றை ஆய்வு செய்த நீதிமன்றம் பாபரி பள்ளிவாசல் சுன்னி முஸ்லிம்களுக்குச் சொந்தமானதே என தீர்ப்பு வழங்கிற்று,

**தீர்ப்பு மார்ச்சு 30, 1946-இல் வந்தது. அந்தத் தீர்ப்பில்**



7) காலா காலமாக "தராவிஹ்" என்ற ரமழான் மாதத்தில் தொழப்படும் இரவு தொழுகை பாபரி மஸ்ஜித்-இல் தொடர்ந்து நடந்து வருகின்றது. இது சுன்னி சிந்தனை சார்புடையவர்கள் நடத்தும் தொழுகை. ஷியா சிந்தனைப் பிரிவினருக்கு இது சொந்தமானதல்ல. அவர்கள் இந்தத் தொழுகையை தொழுவதில்லை. அவர்களுக்கு இது தடை செய்யப்பட்டது. இதுவும் பாபரி மஸ்ஜித் சுன்னி வக்ஃபுக்குச் சொந்தம் என்பதை நிரூபிக்கும்.

1) பாபரி மஸ்ஜித்-ஐ கட்டியவரின் சிந்தனை சார்பு, அந்தப் மஸ்ஜித் யாருக்குச் சொந்தம் என்பதை நிரூபிக்கும்.

2) மஸ்ஜித் கட்டுவதற்கான ஆணை பாபர் அவர்களிடமிருந்துதான் வந்தது. அவர் சுன்னி சிந்தனை சார்புடையவர். ஆகவே அது சுன்னிகளுக்கு சுன்னத்துல் ஜமாஅத்திற்கு சொந்தமானது.

3) இந்த பாபரி மஸ்ஜித்-ஐ பாபருடைய தளபதி மிர்பக்கி என்பவர் கட்டினார். அவரும் சுன்னி சிந்தனை சார்புடையவர்தான். தொடர்ந்து இவர்கள் தம் பாபரி மஸ்ஜித்-இன் நிர்வாகத்தைக் கவனித்து வந்தார்கள்.

4) பிற்றை நாட்களில் அயோத்தியா வீற்றிருக்கும் அவர் பகுதியின் ஆட்சியாளர்கள் பாபரி மஸ்ஜித்-இன் பராமரிப்பிறகு உதவிகள் வழங்கினார். இவர்கள் ஷியா சிந்தனை சார்புடையவர்கள். ஆனாலும் நிர்வாகம் சுன்னி சிந்தனை சார்புடையவர்களிடம்தான் இருந்தது.

5) மஸ்ஜித்-ஐ நிர்வகித்த சிலர், பிற்றை நாட்களில் ஷியா சிந்தனை சார்புடையவர்களாக மாறினார்கள். காரணம் ஷியா சிந்தனை சார்புடைய ஆட்சியாளர்களிடம் உதவிகளைப் பெறுவதே.

6) வரலாறு முழுவதும் பாபரி மஸ்ஜித்-இல் தொழுகை நடத்திய இமாம், முஅத்தின் ஆகியோர் சுன்னி சிந்தனை சார்புடையவர்களாகவே இருந்திருக்கின்றார்கள். ஆகவே பாபரி மஸ்ஜித் சுன்னி சிந்தனை சார்புடையவர்களுக்கே சொந்தம் என்பது தெளிவு.

8) இந்த மஸ்ஜித்-ஐ ஷியாக்களும் பயன்படுத்தி இருக்கின்றார்கள் என்பதற்கான அத்தாட்சிகள் இருக்கின்றன. ஆனால் அது ஒன்றே இந்தப் பள்ளிவாசல் ஷியா வக்ஃபுக்கு சொந்தம் என்பதை நிரூபித்துவிட முடியாது.

**இப்போது ஷியக்கள் உச்ச நீதிமன்றத்தில் தொடுத்துள்ள வழக்கில் தொக்கி நிற்கும் சதி**

இப்போது ஷியா வக்ஃப் போர்டின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கில் அவர்கள் ஒரு இமாலய தவறை செய்கின்றார்கள். அந்தத் தவறு. அவர்கள் அலகாபாத் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஏற்றுக் கொள்வதாகக் கூறுகின்றார்கள். அதில் முஸ்லிம்களுக்கென கூறுபோட்டுத் தரப்பட்ட இடத்தைத் தான் கேட்கின்றார்கள். சுன்னி முஸ்லிம்களுக்குத் தரப்பட்ட இடம் எங்களுக்குத்தான் என்பதே இவர்கள் இப்போது உச்ச நீதிமன்றத்தில் வைத்துள்ள வாதம்.

இவர்கள் இதில் செய்யும் துரோகம் மிகப்பெரியது. அது பாபரி மஸ்ஜித் இருந்த இடத்தை அலகாபாத் உயர்நீதிமன்றம் மூன்றாகப் பிரித்ததை ஏற்றுக் கொள்கின்றார்கள். அதில் இரண்டு பங்கை எதிர்த் தரப்பாருக்குத் தந்ததையும் (நிர்மோகி அஹாரா என்ற அறக் கட்டளைக்கும், இந்துக்கள் எனக் குறிப்பிடப் படுபவர்களுக்கும் தந்ததை) ஏற்றுக் கொள்கின்றார்கள்.

இப்படியொரு துரோகத்தைச் செய்யும் போது இவர்கள் இன்னொரு முட்டாள்

தனத்தையும் செய்கின்றார்கள். அது அலகாபாத் உயர் நீதிமன்றத்தின் செப்டம்பர் 30, 2010 தீர்ப்பை உச்ச நீதிமன்றம் மே 9, 2011 -இல் முழுமையாக நிராகரித்து விட்டது.

அத்தோடு நில்லாமல் அதை ஏக மனதாக சம்மந்தப்பட்ட அனைவரின் ஒப்புதலோடும் நிராகரித்தது. இதனை இந்த ஷியா வக்ஃபு போர்டு என பீற்றிக்கொள்ளும் துரோகக் கூட்டம் ஏனோ கண்டுகொள்ளவில்லை.

இவர்களின் இந்தத் துரோகங்களை ஆமோதிக்கும் அளவிலும், இவர்களின் முட்டாள் தனத்திற்கு முத்திரைப் பதிக்கும் விதத்திலும் அந்த மனுவை விசாரிக்க ஒத்துக் கொண்டுள்ளது உச்ச நீதிமன்றம்.

இது உச்ச நீதிமன்றம் பாபரி மஸ்ஜித் வழக்கில் துரோகம் ஒன்றைத்தான் தீர்வாகத் தரும் என்ற எண்ணத்தைத் தான் சிறுபான்மையினர், நீக்கப் போராடும் நீதிமான்கள், சமூக ஆர்வலர்கள் ஆகியோரின் உள்ளங்களில் ஏற்படுத்தி இருக்கின்றது.

**ஜாஃபர்யாப் ஜீலானி**

பாபரி மஸ்ஜித் வழக்கை தொடக்கக் காலந் தொட்டே அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் நடத்தி வந்த ஜாஃபர்யாப் ஜீலானி அவர்களிடம் இதுபற்றி தொலைபேசியில் பேட்டிக் கண்டோம். அவர்கள் சில தகவல்களைத் தந்தார்கள். அவை

*1)* யாருடைய பேச்சு வார்த்தையும் நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

*2)* உச்ச நீதிமன்றம், ஏற்கெனவே சமர்ப்பிக் கப்பட்டுள்ள ஆவணங்கள் அத்தாட்சிகள் இவற்றின் மேல் தீர்ப்பு வழங்கிட வேண்டும். அல்லது புதியவர்களையோ, புது இடைச் செருகல்களையோ அது ஏற்றுக் கொள்ளக் கூடாது, முடியாது.

மேலும் அவர் கூறுகையில் ஷியா வஃக்பு போர்டை சார்ந்தவர்கள் தங்களுடைய வாதங்களையெல்லாம் அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் எடுத்து வைத்தார்கள். அவற்றையெல்லாம் அறிக்கையாகவும் சமர்பித்தார்கள். அப்போது பாபரி மஸ்ஜித் சுன்னி வகஃபு போர்ட்டுக்குச் சொந்தமானது. அது அப்பழுக்கற்ற மஸ்ஜித்தான் என்றெல்லாம் வாதிட்டார்கள். இப்போது அரசியல் காரணங்களாலும் நெருக்கடிகளுக்குப் பயந்தும் பலவற்றைச் சொல்கின்றார்கள். இவை யெல்லாம் நீதிமன்றத்தில் நிற்கமாட்டாது என்றும் கூறினார். - (பேட்டி MGM)

ஷியாக்களின் மார்க்க அறிஞர்கள் : ஷியாக்களின் தலைமை இமாம் யாகூப் அப்பாசி தான இந்த ஷியா வக்ஃப் போர்டின் கருத்துக்களை ஏற்றிடவில்லை என்றும் சுன்னி வக்ஃப் போர்டின் நிலைப்பாடே ஷியா இமாம்களின் நிலைப்பாடு என்றும் கூறியுள்ளார்.

ஆக மோடி, யோகிஆதித்யநாத், உச்ச நீதி மன்றம் இவர்களின் கட்டப் பஞ்சாயத்து நிற்காது, நிலைக்காது. இன்ஷா அல்லாஹ் பொறுத்திருந்து பார்ப்போம். -MGM

மேலும் விபரங்களுக்கு....

*1.* பாபரி மஸ்ஜித் வழக்கு அரசின் இன்னொரு சதி! வைகறை வெளிச்சம் செப்டம்பர் *2017*

*2.* பாபரி மஸ்ஜித் : உச்ச நீதிமன்றத்தின் கட்டப்பஞ்சாயத்து வைகறை வெளிச்சம் ஏப்ரல் *2017* ●





# ரோஹிங்யா முஸ்லிம்களின் பிரச்சனைக்கு தீர்வு?

இன்றளவும் *50* இலட்சம் (ஐம்பது லட்சம்) ரோஹிங்யா முஸ்லிம்கள் தாங்கள் ஆண்டாண்டு காலமாக வாழ்ந்து வந்த மியான்மரின் தங்கள் பூர்வீக ரக்கைன் பகுதியை விட்டு வெளியேறி இருக்கின்றார்கள்.

இவர்களை மீண்டும் தங்கள் இல்லங்களுக்குக் கொண்டுவந்து குடியமர்த்துவதே அதற்கான அறுதித் தீர்வு. இதனை அங்குள்ள ஆட்சியாளர்களின் உதவியோடு மட்டுமே செய்திட இயலும்.

ஆனாலும் ஆட்சி செய்யும் "சுகி" Suky என்ற பெண்மணி இதைச் செய்வார் என எதிர்பார்ப்பதற்கில்லை.

**சுகியின் பூர்வீகம்**

பிறப்பு ஜூலை *19, 1945.*

முதலில் இப்போது ஆட்சி செய்யும் "சுகி" முழுமையான ஆட்சியாளர் அல்ல. அவர் அண்மையில் நடந்த தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியாளர்தான் என்றாலும் அதிகாரம் அதாவது நாட்டை நடத்திடும் அதிகாரம் அவருக்கு பாதி. அங்கு இதுவரை ஆட்சி நடத்தி வந்த இராணுவத்திற்குப் பாதி என்றே இருந்து வருகின்றது.

ரோஹிங்யாவில் இனப்படுகொலைகளை நடத்திக் கொண்டிருப்பவர்கள், புத்த மதத்தைச் சார்ந்தவர்களும் இராணவமும்தான். ரோஹிங்யாவின் இன்றைய ஆட்சியாளர் "சுகி"யும் புத்த மதத்தைச் சார்ந்தவரே, அதிலும் தெரவாதா என்ற புத்த மதப்பிரிவைச் சார்ந்தவர்.

புத்த மதத்தின் இந்தப் பிரிவைச் சார்ந்தவர்கள் "நாங்கள்தாம் புத்தரின் அசல் போதனைகளின் சொந்தக்காரர்கள் "Original Cannons" எனக் கூறிக்கொண்டிருப்பவர்கள்.

இவருடைய தந்தை (அதாவது இப்போது மியான்மரில் ஆட்சியாளராக வீற்றிருக்கும் சுகி-யின் தந்தை) ஆங்சான் Aungsan தான். ஆங்கிலேயர்களுக்கு எதிராக மக்களை அணி திரட்டி மியான்மரை *1947*-இல் ஆங்கிலேயர்களிடமிருந்து மீட்டெடுத்தவர். பின்னர் அவருடைய எதிரிகளால் கொலை செய்யப்பட்டவர். ஆனால் இன்றளவும் அவரை மியான்மரின் தந்தை என அழைத்து வருகின்றார்கள்.

சுகி தன்னுடைய பள்ளிப் படிப்பை மியான்மரில் தான் முடித்தார். ஆனால் கல்லூரி படிப்பை *(1964-1968)* ஆண்டுகள் டெல்லி ஆகஸ்போர்டு, ஹாவார்டு ஆகிய மிகப்பெரிய பல்கலைக் கழகங்களில் முடித்தார். இவர் வெளிநாட்டவரான மர்கல் ஆரிஸ் என்பவரை மணந்தார். 2 மகன்களைப் பெற்றார். இவர்களை மியான்மர் நாடு ஏற்றுக்கொள்ளவில்லை. தொடக்கநாள் தொட்டே அவர் தன்னை ஒரு மனித உரிமை ஆர்வலராக ஆக்கிக் கொண்டார்.

**இராணுவ ஆட்சி**

ஆங்கிலேயர்களின் கைகளிலிருந்து விடுதலை அடைந்த நாள் முதலே (1937) இராணுவ ஆட்சிதான் மியான்மரில் தலையெடுத்தது.

இந்த இராணுவத்திடமிருந்து ஆட்சியை மீட்டு, மக்களாட்சியாக்கிட பல்வேறு முயற்சி களையும் மேற்கொண்டார். சுகி 1990 இல் தேர்தலில் வென்றார். இவர் மியான்மர் இராணு வத்தால் கைது செய்யப்பட்டார். 20 ஆண்டுகள் சிறை யிலிருந்தார். (1990 முதல் 2010 வரை)

**வரலாற்று மனுஷி**

தென் ஆப்பிரிக்காவில் வெள்ளை நிற வெறியர்களுக்கெதிராகப் போராடிய நெல்சன் மண்டேலா வெள்ளை நிற வெறியர்களால் 28 ஆண்டுகள் சிறையில் வாடினார். அவருக்கு அடுத்த படியாக சிறையில் நீண்ட நாட்கள் இருந்தவர் இவர்தான் என்பதால் இவரை மியான்மரின் நெல்சன் மண்டேலா என அழைப்பார்கள். இந்த பின்னணியில் இவருக்கு அமைதிக்கான நோபல் பரிசும் வழங்கப்பட்டது.

சிறையிலிருந்து இவரை விடுவித்த மியான்மர் இராணுவம் தேர்தலையும் 2015-இல் நடத்தியது. இவர் அமோகமாக வென்றார். ஆனால் தேர்தலில் வெற்றி பெறுபவர்கள், இராணுவத்தின் மேற்பார்வையில்தான் ஆட்சி நடத்திட வேண்டும். இராணுவம் முக்கிய இலா காக்களையும் கையில் வைத்துக் கொள்ளும். தேர்ந்தெடுக்கப்படும் அரசு சில இலாகாக்களை வைத்துக் கொள்ளும் என முடிவு செய்யப் பட்டது.

இந்நிலையில் நடந்த தேர்தல்களில் அம்மை யார் "சுகி" நாட்டின் முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியாளரானார்.

ஆக இந்த அம்மணி மனித உரிமை ஆர்வலர், ஜனநாயகத்திற்கான போராளி. பின்னர் ஆட்சி யாளர் என்றெல்லாம் பாராட்டப்பட்டவர். ஆனால் ரோஹிங்யா முஸ்லிம்கள் இனப்படு கொலை செய்யப்பட்டதை கண்டுகொள்ளவு மில்லை, கண்டிக்கவு மில்லை.

எதிர்க் கட்சியாக இருந்த நாட்களில் உலக நாடுகள் ரோஹிங்யா முஸ்லிம்களின் படு கொலையை இரண்டாவது உலகப் போருககுப் பின் நடந்த மிகப்பெரிய படுகொலை என்றார் கள். ஆனால் இந்த அம்மணி அதை கண்டிட வில்லை.

மிகப்பெரிய மனிதநேய ஆர்வலராகவும், ஜனநாயக வாதியாகவும் காட்டிக்கொண்ட இந்த பெண்மணி தன் நாட்டில் தன் கண் முன்னே முஸ்லிம்கள் கொலை செய்யப்படு வதைக் கண்டுகொள்ளவில்லை என்பது மட்டு மல்ல. இராணுவத்தின் அடாத செயல்களுக்கு ஆதரவும் தந்தார்.

2012 ஆம் ஆண்டில் நடந்த படுகொலை களின் போது ஐக்கிய நாடுகளின் அவை மியான்



மரில் நடப்பவை "Crime Againts Humanity" மனித இனத்திற்கு எதிரான பெருங்குற்றம் என அழைத்தபோது அதை எதிர்த்தார். ஐக்கிய நாடுகள் சபையைச் சாடினார்.

உலக நாடுகள் அனைத்தும் இவரது போக்கைக் கண்டித்தப் பின்னரும் இவர் அசைந்து கொடுக்கவில்லை. மோடியை விஞ்சிய மதவெறியர் என்பதை நிரூபித்தார்.




**நோபல் பரிசு!**

உலகிலுள்ள மனித உரிமை ஆர்வலர்கள் இவருக்கு வழங்கப்பெற்ற அமைதிக்கான நோபல் பரிசை திரும்பப் பெற வேண்டும் என வலியுறுத்தின. அப்போதும் அவர் விட்டுக் கொடுக்கவில்லை. நோபல் பரிசை வழங்கும் Nobel Foundation வழங்கப்பெற்ற பரிசை திரும்பப் பெறும் விதி ஏதும் எங்களிடமில்லை எனக்கூறி விட்டது. அவர் 20 வருடம் சிறையிலிருந்ததை பாராட்டி வழங்கப்பெற்ற பல்வேறு விருதுகளும் திரும்பப் பெறப்பட்டன.

சர்வதேச கண்டனங்களும் அவமானங்களும் அலையலையாய் தாக்கியபோதும் அவர்தான் ஒரு புத்தமத வெறியர் என்பதை நிரூபித்தாரே அல்லாமல் தான் மனித ஜென்மத்தைச் சார்ந்தவர் என நிரூபிக்க தலைபடவில்லை.

**ரக்கையின் பகுதியில் - தீர்வு**

உலக நாடுகள் தொடர்ந்து இவரை அவமானப்படுத்திய பின் ரோஹிங்யா முஸ்லிம்கள் வாழும் ரக்கைன் பகுதிக்கு "சுகி" சென்றார். எந்த அனுதாபத்தையும் வெளிக்காட்டிடவில்லை. அங்கே குன்றெனக் குவிந்துகிடந்த முஸ்லிம்களின் பிணங்கள் அவரது கல்நெஞ்சைக் கரைக்கவில்லை.

இந்த மக்களுக்கு என்னத்தான் தீர்வு என கேட்டபோது இவர்கள் இந்நாட்டு குடிமக்கள் என்பதை நிரூபித்தால் அவர்களைக் குடி அமர்த்துவேன் எனக் கூறியுள்ளார்.

பர்மா அவர்கள் வாழ்ந்த ரக்கைன் பகுதியை 1785-இல் தான் தனது ஆட்சியின் கீழ் கொண்டு வந்தது. அதற்கு முன் பல ஆயிரம் ஆண்டுகளாக அவர் கள் பூர்வ குடிகள் என்பனவற்றை மறந்தார்.

அவர்கள் தங்கள் சொந்த இடங்கள் குறித்து வைத்திருந்த ஆவணங்கள், அடையாள அட்டைகள் இவற்றையெல்லாம் உங்கள் இராணுவம் தீயிட்டுக் கொளுத்திவிட்டது ஏன்? அவர்கள் கடைசியாக ஒட்டுக் குடித்தனம் நடத்திக் கொண்டிருந்த குடிசைகளையும் கொளுத்தி விட்டது உங்கள் இராணுவம், இந்நிலையில் அவர் எங்ஙனம் தாங்கள் இந்நாட்டவர்கள்தாம் என்பதை நிரூபிப்பார்கள் எனக் கேட்டபோது வாயடைத்துப் போனார். வந்த வழியே திரும்பிப் பயணமானார்.

இந்நிலையில் அதாவது ரோஹிங்யா முஸ்லிம்களின் ஆட்சியாளர்களே அவர்களைக் கொலை செய்கின்றார்கள். சொந்த பூமியை விட்டு விரட்டியடிக்கின்றார்கள். இந்நிலையில் அவர்கள் வீடு திரும்ப வேண்டும் என்றால் சர்வதேச கண்காணிப்புகளின் கீழ் அவர்களின் சொந்த இடத்தில் குடியேற்றப்பட வேண்டும். இதுவே ஒரே வழி.

**ரோஹிங்யா முஸ்லிம்களின் பட்டினிச்சாவுகள், ஐக்கிய நாடுகள் சபையின் துரோகம்**

ஜூலை 2017 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள்

சபையின் துணை அமைப்பொன்று ஆய்வறிக்கை ஒன்றைத் தயார் செய்தது. இந்தத் துணை அமைப்பின் பெயர் World Food Programme (WEP) உலக உணவு பகிர்வுத் திட்டம். இந்த அறிக்கை மியான்மர் (பர்மா) நாட்டில் முஸ்லிம் கள் அதிகமாக வாழும் பகுதிகளில் 80,000 குழந் தைகள், இவர்கள் ஐந்து வயதுக்குட்பட்டவர்கள், உணவின்றிச் சாகும் நிலையில் துடித்துக் கொண்டிருக்கிறார்கள் எனக் கூறியது.

ஆனால், இந்த அறிக்கையை ஐக்கிய நாடுகள் சபை வெளியிடவில்லை. காரணம் பர்மாவின் ஆட்சியாளர் 'ஆங்சான்சுகி' அம்மையார் ஒரு கூட்டு கலந்தாய்வுக்குப் பின்னர் அந்த அறிக் கையை வெளியிட வேண்டும். இப்போது அதை வெளியிடக் கூடாது எனக் கூறி விட்டாராம்.

இன்று வரை அந்த கூட்டு ஆய்வு அறிக்கை நடைபெறவுமில்லை. 80,000 குழந்தைகளின் பட்டினிச் சாவு செய்தி வெளியே வரவுமில்லை.

ஆகஸ்ட் திங்கள் 25, 2017 இல் தொடங்கிய இனப்படுகொலைகள் அதை முற்றாகத் தடுத்து விட்டன. ஆதாம் The Guardian 17th Oct, 2017

### ஆங்கில நாடும் மியான்மர் முஸ்லிம்களின் காலை வாரியது

பிரிட்டன் அல்லது United Kindom என்ற ஆங்கில நாடு ஒரு செய்தியைக் கேட்டு அறிந்தது. அது, மியான்மர் இராணுவம் முஸ்லிம் பெண் களைக் கற்பழிப்பதை ஒர் ஆயுதமாகப் பயன் படுத்துகின்றது என்பதே அந்த செய்தி.

இதனை ஆய்வு செய்திடவும் அறிக்கை தந்திடவும் குழு ஒன்றுக்கு ஏற்பாடு செய்தது. இதனை அறிந்த 'ஆங்சான்சுகி' (மியான்மரின் ஆட்சியாளர்) அப்படி ஒரு குழுவை அனுப்பக் கூடாது என அடம் பிடித்தார். இதனால் அந்தக் குழுவை, அனுப்பாமல் விட்டுவிட்டது ஆங்கில நாடு.

இப்படி தொடர்ந்து உண்மைகள் வெளி வராமல் தடுத்து விடுகின்றார் மியான்மரின் ஆட்சியாளர் ஆங்சான் சுகி. இதற்கு உலக நாடுகள் எல்லா விதத்திலேயும் ஒத்துழைத்து வருகின்றன. (ஆதாரம் The Guardian 5th Nov. 2017)

தீர்வு - சீனா மியான்மரில் குறிப்பாக முஸ்லிம்கள் பெரும்பான்மையாகவும், அடர்த்தி யாகவும் வாழும் ; ரக்கைன் பகுதியில் ஒரு பெரும் தொழில் நிறுவனத்தை 7.3 மில்லியன் டாலரின் தொடங்கவுள்ளது. இதற்கு Deep Waters Port. ஆழ்கடல் நீர் துறைமுகம் எனப் பெயர். இதில் 2.45 பில்லியன் டாலரை செலவு செய்துள்ளது.

2012 ஆம் ஆண்டு இந்த நிறுவனத்திற்கான நிலப்பரப்பைக் கையகப்படுத்திட ரக்கைன் பகுதியில் கலவரங்களைத் தூண்டிவிட்டது. புத் தர்களை ஏவிவிட்டு முஸ்லிம்களை படுகொலை செய்தது. அதில் குறிப்பாக முஸ்லிம்களை அவர் களின் வீடுகளிலிருந்து வெளியேற்றிட எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டது. வீடுகளை நெருப்பிட்டுக் கொளுத்தி அத்தோடு நிறுத்தா மல் வீடுகள் சொத்துக்கள் இவற்றின் ஆவணங் களை கண்டறிந்து அழிப்பதில் குறியாக இருந்தது.

இந்த ஈனச் செயல்களுக்கு புத்தர்களுக்குப் பணம், ஆயுதங்கள், போதைப் பொருள்கள் இவற்றைத் தாராளமாகத் தந்தது.

இப்போது நடக்கும் கலவரங்கள் அந்தத் தொழில் நிறுவனத்தை தொடங்க தடையாக இருக்கின்றன, தாமதப்படுத்துகின்றன. இதனால் சீனாவே சில முயற்சிகளை மேற்கொண்டு சிலபல சமாதான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இந்த அடிப்படையில் மியான்மர் நாட்டுக்கும், அகதிகளாக வந்த மியான்மர் மக்களுக்கும் இடம் தந்த வங்காள தேசத்திற்கும் ஒர் உடன்பாடு ஏற்பட்டிருக்கின்றது. இந்த உடன்படிக்கை 23.11.2017 இல் மியான்மரின் தலை நகரில் கையெழுத்தானது.

இதில் ரோஹிங்யாவை விட்டு வெளியேறிய முஸ்லிம்கள் மீண்டும் குடியேற்றப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அறுபது நாட் களுக்குள் அது நடக்கலாம் அல்லது நடக்கத் தொடங்கலாம். ஆனால் வேறு விளக்கங்கள், செயல்முறை இவற்றைப் பற்றி தகவல் எதுவும் தெரியவில்லை.

இதனிடையே அமெரிக்கா, மியான்மரில் நடந்தது இனப்படுகொலையே எனக் கூறி அதற் காக மியான்மர் இராணுவ அதிகாரிகளை நீதியின் முன் நிறுத்திட வேண்டும் எனக் கூறியுள்ளது.●

(Source : The Hindu 24/11/2017)

- MGM

# வேர்கள் வெளியீட்டகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | சிறையில் எனது நாட்கள் - ஜெய்னப் அல் கஸ்ஸாலி - பக்கம் : 212 | ரூ. 90.00 |
| 2. | ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு - மு. குலாம் முஹம்மது | ரூ. 100.00 |
| 3. | சாதி ஒழிந்தது - டி.எம். மணி, ஐந்தாம் பதிப்பு - பக்கம் 132 | ரூ. 50.00 |
| 4. | End of Casteism T.M. Mani பக்கம் -134 | ரூ. 50.00 |
| 5. | அஹமதாபாத் குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் -48 | ரூ. 10.00 |
| 6. | டெல்லி குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் - 48 | ரூ. 10.00 |
| 7. | நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள், மு. குலாம் முஹம்மத் | ரூ. 25.00 |
| 8. | மால்கம் எக்ஸ் - மு. குலாம் முஹம்மது, பக்கம் -231 | ரூ. 80.00 |
| 9. | தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம், டி.எம். மணி, பக்கம் -31 | ரூ. 20.00 |
| 10. | செந்தமிழ்நாட்டுச் சேரிகள்- டி.எம். மணி, பக்கம்:94 | ரூ. 40.00 |
| 11. | கர்கரேயை கொலை செய்தது யார்? பக்கம் 453 | ரூ. 250.00 |
| 12. | சிந்திப்பீர் செயல்படுவீர், நா. கோதண்டபாணி, பக்கம் 47 | ரூ. 15.00 |
| 13. | ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம், ப. கோபால கிருஷ்ணன், பக்கம்-84 | ரூ. 40.00 |
| 14. | சாதி ஒழிந்தது- ஹிந்தி - டி.எம். மணி, பக்கம் - 148 | ரூ. 50.00 |
| 15. | நாம் பிரிந்து விடவேண்டாம், பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி, பக்கம்-292 | ரூ. 175.00 |
| 16. | தாலிபானின் பிடியில், மு. குலாம் முஹம்மது, பக்கம் - 202 | ரூ. 90.00 |
| 17. | பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு, மு. குலாம் முஹம்மது பக்கம்-163 | ரூ. 110.00 |
| 18. | பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள், மு. குலாம்மது, பக்கம் -143 | ரூ. 90.00 |
| 19. | இஸ்லாமிய நாகரிகம் - முஸ்தஃபா அல் சிபாய், பக்கம் - 206 | ரூ. 130.00 |
| 20. | கஷ்மீரின் பாதி விதவைகள், மு. குலாம் முஹம்மது, பக்கம் - 140 | ரூ. 70.00 |
| 21. | எது முதலில்? டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 50.00 |
| 22. | சாதி ஒழிந்தது - கன்னடம், | ரூ. 50.00 |
| 23. | அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி? டி.எம். உமர் ஃபாரூக் | ரூ. 20.00 |
| 24. | கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்? மு. குலாம் முஹம்மது பக்கம்:48 | ரூ. 30.00 |
| 25. | முஹம்மத் (ஸல்) அவர்கள் ஓர் சகாப்தம், பக்கம் 30 | ரூ. 15.00 |
| 26. | இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும், பக்கம் - 120 | ரூ. 50.00 |
| 27. | இஸ்லாம் வழங்கும் தண்டனைகள் | ரூ. 40.00 |
| 28. | இஸ்லாமும் விஞ்ஞானமும் | ரூ. 70.00 |
| 29. | இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா? | ரூ. 60.00 |
| 30. | இஸ்லாமும் பெண்களும் | ரூ. 70.00 |
| 31. | இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா? | ரூ. 70.00 |
| 32. | தேசப்பிரிவினைக்கு யார் காரணம்? | ரூ. 30.00 |
| 33. | 26/11 -நீதித்துறையும் மயங்கியது ஏன்? | ரூ. 220.00 |
| 34. | ஒரு தலித் போராளியின் வாழ்வும், அவர் காட்டிய வழியும் | ரூ. 20.00 |

**வேர்கள் பதிப்பகம்,** 52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001.

தொடர்ப்புக்கு : 8148129887

களஆய்வு....



# ஐரோப்பிய பெண்கள் அணி அணியாக இஸ்லாத்தில் இணைகிறார்கள் ஏன்?

நிச்சயமாக இஸ்லாம் பெண்களை எப்படி நடத்துகின்றது என்பதைப் பற்றிய அச்சங்கள் அர்த்தமற்றவை. ஆமாம் ஐரோப்பியாவில் வாழும் பெண்கள், குறிப்பாக வெள்ளை (பிரிட்டிஷ்) ஆங்கிலேயே பெண்கள், இஸ்லாத்தின் மேல் அதிகமாக மையல் கொள்கின்றார்கள். அதனால் அதிகம், அதிகமான ஆங்கிலேய பெண்கள் இஸ்லாத்தில் இணைகின்றார்கள்.

வருடந்தோறும் 50 ஆயிரம் வெள்ளையர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்கின்றார்கள். இதில் அதிகமானவர்கள் பெண்கள். அதாவது இப்படி இஸ்லாத்தை ஏற்றுக் கொள்பவர்களில் 3/2 பேர் பெண்கள். இவர்களில் பெரும்பாலானோர் தங்களுக்கென ஒரு ஒரு தொழிலைச் செய்து கொண்டிருப்பவர்கள். அவர்கள் மருத்துவர்கள், பத்திரிகையாளர்கள், (தொலைக்காட்சிகளில்) செய்திகளை வாசிப்பவர்கள்.

இவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் போது தாங்கள் என்ன செய்கின்றோம் என்பதை நன்றாக அறிகின்றார்கள். பல நேரங்களில் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளும் பெண்கள் தங்கள் குடும்பங்கள் இதர சொந்த பந்தங்கள், இவர்களின் எதிர்ப்பினூடே இஸ்லாத்தை ஏற்றுக் கொள்கின்றார்கள். சில நேரங்களில் இவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதற்குத் தடையாக இருப்பவர்கள் இவர்களின் நண்பர் களே! அனைத்தையும் கடந்து அல்லாஹ்வை ஏற்றுக் கொள்கின்றார்கள்.

அண்மையில் இப்படி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள் ஆங்கில நாட்டில் மிகவும் பிரபலமானவர்கள். இவர்கள்

*1)* லாறாபூத்-இவர் முன்னாள் ஆங்கில நாட்டு பிரதமர் டோனி பிளையரின் மைத்துனி.

*2)* மிகவும் பிரபல்யமான பத்திரிகையாளர் யுவான்னி ரிட்லி.

*3)* எம் டி.வி.யில் நிகழ்ச்சிகளை நடத்தும் கிரிஸ்டைன் பெக்கர்.

பிரிட்டீஸ் நாட்டில் அதாவது ஆங்கில நாட்டில் இருக்கும் மஸ்ஜித்களில் எத்தனை பேர் இஸ்லாத்திற்கு வந்தார்கள் என்பதைச் சொல்லிட துல்லியமான கணக்கொன்றுமில்லை. ஆனால் அவர்களால் ஒன்றை மட்டும் சொல்லிட முடிகின்றது. அதிகமான மக்கள் இஸ்லாத்தைப் பற்றிய தெளிவுகளைப் பெற்றிடவும், இஸ்லாத்தை ஏற்றிடவும், மஸ்ஜித்களுக்கு வந்து செல்கின்றார்கள். குறிப்பாக பெண்கள் அதிகமாக வருகின்றார்கள் என்பதை உறுதி செய்தார்கள்.

லைஸ்டர் என்ற இடத்திலிருக்கும் மஸ்ஜித்-இல் இமாமாக-தலைவராக இருப்பவர்

ஷேஹ் இப்ராஹிம் மோக்ரா இப்படிக் கூறுகின்றார்.

என்னிடம் பல பெண்கள் இஸ்லாம் பெண்களை எப்படி நடத்துகின்றது என்பதைப் பற்றிக் கேட்கின்றார்கள். இது எனக்கு ஆச்சரியமாக இருக்கின்றது. இஸ்லாம் பெண்களை மிகவும் இழிவாக நடத்துகின்றது என்ற பிரச்சாரங்கள் மிகவும் அதிகமாக நடந்து கொண்டிருக்கும் ஒரு காலக் கட்டத்தில், இப்படி அதிகமான பெண்கள் தகவல் கேட்டு வருவது எனக்கு ஆச்சரியமாக இருக்கின்றது. இஸ்லாத்தை எதிர்த்துப் பிரச்சாரம் செய்பவர்களே, பெண்களிடம் இவ்வளவு பெரிய ஆர்வத்தை உருவாக்கி இருக்கின்றார்கள் என்பது மட்டும் உண்மை.

இப்போது சில கேள்விகள்...

"தொழில் துறையில், தாங்கள் செய்யும் கண்ணியமிக்க பணிகளில் வெற்றிகளைக் குவித்துக் கொண்டிருக்கும் பெண்கள் முற்றாக தாங்கள்விடுதலையடைந்துவிட்டதாகஎண்ணிக் கொண்டிருக்கும் மேலைநாட்டு பெண்கள் ஏன் அணி அணியாக இஸ்லாத்தை ஏற்றுக் கொள்கின்றார்கள்? அதுவும் இவர்களின் காலத்தில் இஸ்லாம் என்பது அடக்குமுறை என்பதன் மறுபதம் என்று கணிக்கப்படும், காலத்தில்! அதைப்பற்றி ஏன் இந்த புதிய முல்லாக்களிடம் வந்து விசாரிக்கின்றார்கள்?

பெண்களின் மதமாற்றம் விவாதமானபோது, ஆங்கில நாட்டின் தலைநகர் கேம்பிரிஜ் பல்கலைக் கழகத்தின் இஸ்லாமிய ஆய்வு மையமும் (Centre for Islamic Studies ; CIS) and Leicester Based New Muslims Project : அதாவது லைஸ்டர் என்னுமிடத்தில் உள்ள புதியதாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களைப் பற்றிய ஆய்வு செய்யும் மையமும் இணைந்து ஒர் ஆய்வை மேற்கொண்டார்கள்.

ஆய்வின் முடிவில் 129 பக்கங்களைக் கொண்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டார்கள். அந்த ஆய்வறிக்கைக்கு புதியதாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களின் விளக்கங்கள் எனப் பெயரிட்டார்கள். (Narratives of Conversions to Islams)

இந்த ஆய்வு மத மாற்றங்களின் சோஷியல் சமுதாயக் கூறுகள், உணர்வுப்பூர்வமான ஈடுபாடுகள் அதன் பொருளாதார கூறுகள் ஆகியவற்றை விளக்கிக் கூறியது.

இவற்றோடு பெண்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கான காரணத்தையும் கோடிட்டுக் காட்டியது. பெண்கள், உண்மையிலேயே இஸ்லாத்தின் வழிகாட்டுதல்களால் உந்தப்பட்டுத் தான், இஸ்லாத்தை ஏற்றுக் கொள்கின்றார்கள் என்பதை தெளிவுபடுத்தியது. குறிப்பாக 9/11 என அடையாளப்படுத்தப்படும், அமெரிக்காவின் இரட்டைக் கோபுர தாக்குதலுக்குப் பின்னர் பெண்களிடையே மத நம்பிக்கைக்கும் ஆன்மீகத்



தேட்டங்களுக்கும் ஒரு பெரும் உள்ளுணர்வு ஏற்பட்டிருக்கிறது.

"நான், என் வாழ்க்கை, எனது, என்னால்" என்ற தனி மனித வழிபாட்டிற்கு எதிராக பெண்கள் தேடிக் கொண்டிருந்தவைக்கு இஸ்லாம் ஒரு பதிலாக இருந்திருக்கின்றது. அதனால் அதை அப்பிப் பிடித்துக் கொண்டார்கள்.

மேலை நாட்டுக் கலாச்சாரத்தின் இரு பெரும் கூறுகள். அந்த பெண்களைப் பெரிதும் பாதித்திருக்கின்றன.

ஒன்று, அளவுகடந்த உரிமைகள் எதை வேண்டுமானாலும் செய்யலாம். எப்படி வேண்டு மானாலும் வாழ்ந்திடலாம் என்ற வாழ்க்கை போக்கு இதில் எங்கேயும் எந்தக் கட்டுப்பாடு மில்லை என்ற மனநிலை (Excessive permissiveness)

இரண்டு - எல்லாவற்றையுமே நானே கவனித் துக்கொள்வேன். என் வாழ்க்கை போக்கில் தலையிட யாருக்கும் எந்த நிலையிலும் உரிமை யில்லை. தன்னைப் பெற்ற பெற்றோர்களுக்கோ, தான் பெற்ற பிள்ளைகளுக்கோ, கணவன் என வருபவருக்கோ சொந்த பந்தங்களுக்கோ என் தனிப்பட்ட விவாகரங்களில் தலையிட உரிமை இல்லை. Excessive Individualism.

இவற்றால் பெண்கள் வாழ்க்கையில் விரக்தியின் விளிம்பிற்கே போய்விட்டார்கள்.

இந்த விரக்தியிலிருந்து அவர்களை மீட்கும் அருமருந்தாக இஸ்லாம் விளங்குவது பெண் களைப் பெருமளவில் இஸ்லாத்தின் பக்கம் ஈர்த்துள்ளது.

(சுருங்கச் சொன்னால் மேலைநாட்டு கலாச்சாரத்தால் ஏற்பட்ட விரக்திதான் மக்களை இஸ்லாத்தின் பக்கம் ஈர்த்திருக்கின்றது)

இதுவல்லாமல் இன்னும் சில காரணிகள், அவர்கள் இஸ்லாத்தை அறிந்திட வகை செய்துள் ளன. அவர்களின் முஸ்லிம் நண்பர்கள். அவர்கள் திருமணம் செய்துகொள்ள விரும்பும் ஆண்கள் இவர்களும் ஐரோப்பிய ஆங்கில நாட்டு பெண்கள் இஸ்லாத்தை அறிந்திட உதவியாக இருக்கின்றனர். தொடக்கத்தில் அவர்கள் இஸ்லாம் என்னவென்று தெரிந்து மறந்திட வேண்டும் என்ற எண்ணத்துடனே இஸ்லாத்தன் பக்கம் திரும்புகின்றார்கள். பின்னர் அதில் இரண்டற பிணைந்து விடுகின்றார்கள். முஸ்லிம் உலகில் சங்கமித்து விடுகின்றார்கள்.

**அனி அட்கின்சன்**

அட்கின்சன் என்றொரு பெண்மணி. இவர் ஒரு காலத்தில் ஒரு தீவிரமான கத்தோலிக்க கிருஸ்தவர். இவர் ஒரு இஸ்லாமியப் பிரசுரத்தை படித்திருக்கின்றார். அதன்பின் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுள்ளார்.

அவர் கூறுகின்றார்....

அன்று எனக்கு நேரமே போகவில்லை. கையில் கிடைத்த அந்தப் பிரசுரத்தை வேண்டாத வெறுப்பாக படிக்கத் தொடங்கினேன். ஓரிரு வரிகளைப் படிக்கத் தொடங்கியவுடன் என்னை அறியாமலே மொத்தத்தையும் படித்து முடித்து விட்டேன். காரணம் நான் எதைத் தேடிக் கொண்டிருந்தேனோ அது அந்தப் பிரசுரத்தில் இருந்தது. அது ஒரு நிமிடம் ஓர் ஒளியைத்தந்த அந்த நிமிடம்.

இதனால் நான் இஸ்லாத்தைப் பற்றி அதிக மதிகம் படிக்கத் தொடங்கினேன். முடிவில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டேன். என் தாயார் நிலைகுலைந்தார்.

கரோலின் பெற்றி என்னொரு இன்னொரு பெண். இவர் தொழில் நிறுவனங்களுக்கு நிதி உதவிகளைச் செய்பவர். அவளுடைய தோழி ஒருத்தி ஒரு முஸ்லிமை திருமணம் செய்வதாக முடிவு செய்துவிட்டார். இதனால் அவள் இஸ்லாம் என்றால் என்ன என்று படிக்கத் தொடங்கினாள். படித்துக் கொண்டே இருந்தாள். பின்னர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். அவர் கூறுகின்றார்.

நான் படித்த இலக்கியங்கள் என்னை திகைக் கச்செய்தன. பின்னர் என்னுள் ஒரு பெரிய அறிவுத் தேட்டத்தை ஏற்படுத்திவிட்டன. என்னை இஸ்லாமிய இலக்கியங்களின் பக்கம் ஈர்த்துக் கொண்டே இருந்தன. இஸ்லாத்தின் வழிகாட்டு தல்கள் முழுமையாக இருந்தன. பகுத்தறிவுக்குப் பொருத்தமானவையாகமிருந்தன.

இஸ்லாத்தைப் படிக்கும் ஒருவர் அறிவுப் பூர்வமாகவே அதை அணுகலாம். அங்கே எந்த இடைவெளியும் இல்லை. இஸ்லாத்தின் வழி காட்டுதல்கள் எல்லா விதத்திலேயும், சங்கிலித் தொடர்போல் பின்னப்பட்டவையாக இருக்க

காணலாம். நீங்கள் நிரம்ப கற்பனை பண்ணிக் கொண்டிருக்கத் தேவை இல்லை. அதில் தாத்து வார்த்த உண்மைகள் அதிகம். அது ஆன்மீகத்தைச் சொல்லி உங்களை இருட்டு உலகத்தில் தள்ளும் மார்க்கமல்ல.

**யாசிர் சுலைமான்**

இவர்தான் லண்டனிலுள்ள இஸ்லாமிய மையத்தின் தலைவர். இவர் மத மாற்றங்கள் பல பின்னல்கள் நிறைந்த நிகழ்வுகள் எனக் கூறுகின்றார் "இஸ்லாத்தை ஏற்றுக்கொள்பவர் கள் பல விதங்களில் மகிழ்ச்சியடைகின்றார்கள். பல விதங்களில் வேதனைகளை அனுபவிக்கின் றார்கள். இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளும் பெண் களின், பெற்றோர்கள் உறவினர்கள், நண்பர்கள் இவர்களெல்லாம் கடுமையாக எதிர்க்கத் தொடங்கி விடுகின்றார்கள். எந்த மதத்திலிருந்து வருகின்றார்களோ அந்த மதத்தைச்சார்ந்தவர்கள் சீறிப் பாய்கின்றார்கள், சிக்கல்களை ஏற்படுத்து கின்றார்கள் இத்தனையிலும் யாருடைய உதவியு மில்லாமல் அவர்கள் இஸ்லாத்தில் நிலைத்து நிற்கின்றார்கள்.

இவையெல்லாம் தவிர அவர்கள் இன்னொரு பெரும் எதிர் சூழ்நிலையைச் சந்திக்கின்றார்கள். அது அவர்கள் எல்லோராலும் ஊடகங்களிலும் பெண்களுக்கு உரிமையை மறுக்கும் ஒரு மார்க்கம் என இடித்துரைக்கப்படுகின்ற ஒரு மார்க்கத்தை ஏற்றுக் கொள்கின்றார்கள். இந்த எதிர் சூழ்நிலையை திரும்புமிட மெல்லாம் சிந்திக்கின்றார்கள்.

**உறவினர் வட்டம்**

இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளும் இந்தப் பெண்களின் உறவினர்கள் வட்டத்திலும், நண்பர்கள் வட்டத்திலும் ஒரு பெரும் வினா - அதுவும் வேதனை நிறைந்த வினா.

அது,

"மேலைநாட்டு கலாச்சாரத்தில் வாழ்ந்து, அந்தக் கலாச்சாரத்திலேயே வார்த்தெடுக்கப் பட்ட பெண்கள் முற்றாக விடுதலை அடைந்து சுதந்திரமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் எப்படி தங்களை அடிமைப்படுத்திக் கட்டிப்போடும் ஒரு மார்க்கத்தை ஏற்றுக் கொள்கின்றார்கள்?"

நாம் மேலே குறிப்பிட்ட ஆய்வறிக்கை அதாவது கேம்பிரிஜ் பல்கலைக் கழகத்தின் இஸ்லாமிய ஆய்வு மையமும், லைஸ்டரிலுள்ள புதியதாக இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட பெண்களை ஆய்வு செய்யும் மையமும் தாக்கல் செய்த அறிக்கையில் 50 பெண்களில் அதாவது இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட 50 பெண்களின் அனுபவங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. இந்த 50 பெண்களும் பல்வேறு வயதைச் சார்ந்தவர் கள். பல்வேறு சமூக பின்னணியைக் கொண்ட வர்கள். பல்வேறு மதங்களைச் சார்ந்தவர்கள். பல நாத்திகர்களும் உண்டு. இவர்களில் பெரும் பான்மையானவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பின்பு அவர்களின் குடும்பங்களி லிருந்து பயங்கார எதிர்ப்புகளைச் சந்தித்துள்ள தாகக் கூறியுள்ளார்கள்.

**வீட்டை விட்டு வெளியேறு - தீவிரவாதி**

ஒரு பெண்ணின் தந்தை மகள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவுடன், தன்னையே இழந்தார். தன் மகளை வீட்டை விட்டு வெளியேற்றினார். காரணம் கேட்டபோது... போயும், போயும் ஒரு காட்டுமிராண்டித்தனமான, அநாகரிகமான ஒரு மதத்திற்கு மாறிவிட்டாளே என அங்கலாயித் திருக்கின்றார். இதனால் அவருடைய சகோதரன் அங்குள்ள வலதுசாரி தீவிரவாத அமைப்பில் தன்னை இணைத்துக்கொண்டு இஸ்லாத்திற்கு எதிராக தீவிரமாகப் பணியாற்றினார். அவர் அந்த அமைப்பில் இருந்துகொண்டு பிரிட்டன் ஆங்கில நாடு "இஸ்லாமிய மயமாக்கல்" தடுக்க வேண்டும் என ஓலமிட்டார். அவன் தன் சகோதரி இறந்துவிட்டாள் என்று பிரகடனப் படுத்தினார். இந்த இடதுசாரி தீவிரவாத அமைப்புதான் "British National Party" பிரிட்டீஷ் தேசிய கட்சி (இவர்கள் வெள்ளையனே எல்லாம் என்ற கொள்கையைக் கொண்ட நிறவெறியர்கள்)

இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட இந்தப் பெண்மணி, வெளிநாடு சென்றபோது அவளு டைய பெற்றோர்கள் அந்த நாட்டு பாதுகாப்பு படையினருக்கு அவள் ஒரு தீவிரவாதி என தகவல் தந்துள்ளார்கள்.

**நாத்திகர்கள்**

நாத்திகத்தை நம்பிக்கையாகக் கொண்ட குடும்பங்கள் இதைவிட குரூரமாக நடந்துகொள் கின்றன. இவர்களின் எதிர்ப்பும், பகையும் மத நம்பிக்கைக் கொண்ட குடும்பங்களைவிட



மிகவும் மோசமாக இருக்கின்றன.

நாத்திகத்தை நம்பிக்கையாகக் கொண்ட பெண்ணொருத்தி இப்படிப் பேசி இருக்கின்றார். அது, "என்னுடைய பேரக்குழந்தைகள் இஸ்லாமியக் கொள்கைகளால் போதையூட்டப் பெற்று, மூளைச் சலவை செய்யப்பெற்று, அறிவுக்கு ஒவ்வாதவற்றை நம்பும் படியாக ஆக்கப்பட்டு விடுவார்களோ, என அஞ்சுகின்றேன்"

இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளும் பெண்களுக்கு இரண்டு பிரச்சனைகள். ஒன்று அவர்கள் இஸ்லாமிய சமுதாய அமைப்புக்குள் ஏற்படும் உற்சாகத்தையும் அளவிலா அன்பையும் அரவணைப்பையும் சமாளிப்பது. இரண்டாவது தங்களுடைய சுற்று வட்டாரத்தில் உள்ளவர்களின் கண்டனத்தையும், வெறுப்பையும் எதிர் கொள்வது . இது, இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட இன்னொரு பெண்மணியின் கூற்று.

இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளும் இந்தப் பெண்கள் இஸ்லாமிய சமுதாய அமைப்பால், அரவணைக்கப்படுகின்றார்கள். நண்பர்கள் வட்டாரத்தில் தனிமைப்படுத்தப்படுகின்றார்கள். முஸ்லிம் சமுதாய பெண்களின் உரிமை எப்போதுமே பெரிதான விவாதங்களுக்கு உட்படுத்தப்படுவதால் இஸ்லாத்தில் பெண்களின் உரிமைக்கு ஆபத்திருக்கின்றதோ, என்றொரு பீதிக்கு ஆட்பட்டு விடுகின்றார்கள் சில பெண்கள். ஷரீகவுன்சில்கள் ஷரீஅத் நீதிமன்றங்கள் இவை பெண்களின் உரிமைகளைப் பறித்து விடுமோ எனப்பதறுகின்றார்கள் இன்னும் சிலர். ஏனெனில் இவை பெண்களுக்கு எதிரானவை எனப் பிரச்சாரம் செய்யப்படுகின்றது.

அரசியல் வட்டாரங்கள் இப்படிப்பட்ட விவாதங்களை ஏற்படுத்திக்கொண்டே இருக்கின்றன. இதையும் மேலே சொன்ன ஆய்வறிக்கை சுட்டிக் காட்டுகின்றது.

**முஸ்லிம்கள் செய்ய வேண்டியது?**

இந்த அறிக்கை மீண்டும் மீண்டும் சுட்டிக் காட்டுவது என்னவெனில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்கு, இன்னும் அதிகமான ஆதரவையும், உதவிகளையும் செய்திட முஸ்லிம் சமுதாயம் முன்னே வந்திட வேண்டும் என்பதே!

இடைவிடாமல் பிரிட்டனின் (ஆங்கில நாட்டின்) ஊடகங்கள் இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் எதிர்மறையாகவே மக்கள் மன்றத்தில் காட்டி வருகின்றன. இதில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்கள் மிகவும் ஆழமானதொரு பணியைச் செய்திட வேண்டும். இதுகுறித்து இன்னும் அதிகமாகச் சிந்திக்க வேண்டும், விவாதிக்க வேண்டும் என்றும் அந்த அறிக்கைக் குறிப்பிடுகின்றது.

இன்றுவரை மதமாற்றங்கள் பெரிய அளவில் விவாதிக்கப்படவில்லை. அப்படி மதமாற்றங்களைப் பற்றி வந்த செய்திகள் கூட எதிர்மறையான எண்ணங்களை உருவாக்கப்பவை. குறிப்பாக சிறையிலிருந்து வந்தவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதை பெரிய செய்தியாக்கி இஸ்லாத்தை "கிரிமினல்" குற்றம் செய்பவர்கள்தாம் ஏற்றுக் கொள்கின்றார்கள் என்ற எண்ணத்தை ஏற்படுத்துவது.

குறிப்பாக ரிர்ச்சட்டு ரீட் "Richard Read" என்பவர் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதை ஊடகங்கள் பெரிதாகப் பீற்றின. காரணம் அவர் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதற்கு முன்பு "Shoe Bomber" ஷூவில் குண்டு வைப்பவர் என்று பரவலாக அறியப்பட்டவர்.

இவர் ஒரு விமானத்தையே ஷூவில் வெடிகுண்டு வைத்துதகர்க்க முற்பட்டார் எனக் குற்றம் சாட்டப்பட்டவர். இவரைப் போன்றவர்கள் இஸ்லாத்திற்கு வருவதை பெரிதாக்குவதன் மூலம் நல்லவர்கள் - பண்பாளர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு மன ரீதியாக தடைபோடுவது.

(Source : The Report "Narratives of Converts to Islam. Islamic Studies (CIS) of Cambridge University and New Muslim Project of Leicestor)

தமிழ்ச் சுருக்கம் MGM



### குறிப்பு

ஆங்கில நாட்டில் பெண்கள் இஸ்லாத்தை அதிக அளவில் ஏற்றுக் கொள்கின்றார் என்பது அகிலத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கின்றது.

யுவானி ரிட்லி இஸ்லாத்தை ஏற்ற பின் அவர் ஆற்றியுள்ள பணிகள் அளப்பரியன. ஆப்கானிஸ்தானில் தாலிபன்களின் பிடியி லிருந்து மீண்ட பின்னே அவர் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார். அதன்பின் தாலிபான்கள் தீவிரவாதிகள் அல்ல, அவர்கள் மாண்பாளர்கள் என்பதை ஐரோப்பிய நாடுகளிலும் ஆங்கில நாட்டில் அதிகமாகவும் பரப்பினர்.

அவர் தொடக்க நாள் தொட்டே ஆங்கில உலகில் பிரபல்யமான போற்றப்பட்ட, பத்திரி கையாளர் அவரை பல பத்திரிகையாளர்கள் வழி மறித்தார்கள் அவரிடம் நாங்களெல்லாம் தாலிபான்களைத் தீவிரவாதிகள் என பிரச்சாரம் செய்து கொண்டிருக்கும்போது நீ ஏன் அவர்களை நல்லவர்கள் எனப் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கின்றாய்? எனக் கேட்டார்கள். ஆனாலும் அவர் பல்கலைக் கழகங்களிலும் பல் வேறு அவைகளிலும் தாலிபான்களைப் பற்றி மிகவும் நல்லக் கருத்துக்களையே பரப்பி வந்தார்.

பாலஸ்தீன முஸ்லிம்கள், உயிர்காக்கும் மருந்துகளுக்குக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த போது அவர்களுக்காக ஒரு கப்பல் நிறைய மருந்துகளைக் கொண்டு சேர்த்தார்.

அவர் கப்பலில் மருந்துகளை ஏற்றிக்கொண்டு கடலில் சென்று கொண்டிருந்தபோது இஸ் ரேலை ஆண்டு கொண்டிருக்கும் யூதர்கள் அவரை பயமுறுத்தினர். உங்கள் கப்பலை நடுக்கடலில் வைத்து தாக்கி விடுவோம், தகர்த்துப் போட்டு விடுவோம் என எச்சரித்தனர். எதைப் பற்றியும் கவலைப் படாமல் மரணத்தைப் பற்றியும் கலைப்படாமல் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டே உயிர் காக்கும் மருந்துகளை பாலஸ்தீன மக்களுக்குக் கொண்டு சேர்த்தார்.

இந்தச் செய்தியை உலகெங்கும் உள்ள பத்திரிகைகள், அரபு நாடுகள் 23 ஆண்டுகளாகச் சாதிக்க இயலாதவற்றை அண்மையில் இஸ்லாத் திற்கு வந்தவர் சாதித்தார் என எழுதி அவருடைய சேவையைப் பாராட்டின.

### தாலிபானின் பிடியில்

தாலிபான்களோடு ஏற்பட்ட அனுபவங் களை தாலிபானின் பிடியில் என்ற நூல் மூலம் உலகறியச் செய்திருக்கின்றார். அதை நாம் தமிழிலும் தந்திருக்கின்றோம்.

இப்படி இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்கள் இஸ்லாத்திற்கு ஆற்றிவரும் சேவைகள் பலப்பல. அல்லாஹ் அவர்களுக்கு நிரம்பக் நற்கூலிகளை நல்கிடுவானாக! ● MGM



ராஜு - மேற்கு உத்திர பிரதேசம், ஷாம்லி மாவட்டம், மல்ஹேந்தி கிராமத்தை சார்ந்த ஒரு தலித் இளைஞர், வயது 25. இரண்டு வாரம் ஜெயிலில் இருந்த அவர் தீபாவளிக்கு சில தினங்களுக்கு முன்னால் விடுதலையாகி வெளியே வந்திருந்தார். அவர் செய்த குற்ற மென்ன? அவரின் கதையை கேட்டால் எப்படி ஒரு விலங்கு, மிகவும் குறிப்பாக சொல்ல வேண்டு மென்றால் தெருவில் கேட்பாரற்று சுற்றும் பசு, விவசாயத்திற்கு ஆபத்தாகவும், சட்டம் ஒழுங்கு இவற்றை கொண்டு அச்சுறுத்தக் கூடியதாகவும், அரசியலில் ஆதாயம் அடைய பயன்படுத்தும் விலங்காகவும் மாறியுள்ளது என்பதை புரிந்து கொள்ளலாம்.

செப்டம்பர் மாதத்தின் கடைசி வாரத்தில் தனது உறவினர்கள் வளர்க்கும் எருமை மாடு களுக்கு தீவனத்தை வாங்கி வர வேண்டியும் வேறு சில விவசாய தேவைகளுக்காகவும் வெளியே கிளம்பினார் ராஜு.

தனது உறவினர்கள் வைத்திருக்கும் நிலத்தின் அருகே வந்த அவர் அங்குள்ள பயிர்களையும், பயிருடுவதற்காக வைத்திருத்த விதைகளையும் தெருப்பசுக்கள் நாசம் செய்வதை கண்டு அதிர்ந்து போனார். மற்ற விவசாயிகளின் பயிர் களை இப்படித்தான் அங்கே சுற்றி திரியும் பசுக்கள் நாசமாக்கியுள்ளன. மல்ஹேந்தி மற்றும் அதன் சுற்று வட்டாரத்தில் உள்ள கிராம மக்கள் சிகப்பு மிளகாய் ஸ்ப்ரேகளையும் (Spray), தடிகளையும் கொண்டே அவற்றை விரட்டு வார்கள். சில இடங்களில் கறவை மாடு களுக்காக வாங்கி வைக்கப்பட்டிருக்கும் தீவனங் களை முழுமையாக தின்று விடுகின்றன அத் தெருப்பசுக்கள். தங்களுடைய விளை நிலங் களை இவற்றிடம் இருந்து பாதுகாப்பதற்காக எந்நேரமும் விவசாயிகள் விழித்துக் கொண்டி ருக்கும் சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இவையெல்லாம் ராஜு அறிந்த செய்தி தான்.

எனவே தங்களின் பயிர்களை தெருப் பசுக்கள் நாசம் செய்வதை கண்டதும் அவர் அதிர்ச்சியடைந்தார்.

பயன், வளம் தராத பசுக்களை இறைச்சிக்காக கொலை செய்யக் கூடாது என்று உத்திர பிரதேசத முதல்வர் அதித்யானந்தும், மோடி அரசும் விதித்த தொடர்ச்சியான தடைகளுக்கு பின்னர் தெருக்களில் நடமாடும் பசு, காளை மாடுகளின் எண்ணிக்கை பல்கி பெருகியுள்ளது என்பதை அக்கிராமத்தின் தலித் விவசாயிகள் அறிந்தே உள்ளனர்.

அதித்யானந்த் பதவி ஏற்றவுடன், ஏப்ரல் 2017-இல், சட்டத்திற்கு புறம்பாக இயங்கும் இறைச்சி கடைகளின் மீதும், விலங்கு அறுக்கப் படும் இடங்களின் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என காவல் துறைக்கு ஆணை யிட்டார். அவ்ளோ தான், இந்த தருணத்திற்காக காத்திருந்தது போல் பாய்ந்தனர் அதிகாரிகள். சட்டத்திற்கு புறம்பாக மட்டும் அல்ல தொழில் நுட்ப உதவியோடு இயங்கும் இறைச்சி அறுக்கும் கூடாரங்கள், அதை பதபடுத்தும் மற்றும் பார்சல் இடும் இடங்கள் என அனைத்தின் மீதும்



# பசுவின் பெயரால் அரசியல் - மாற்றத்திற்கு உள்ளாகும் சூழியலும், நலிவடையும் விவசாயிகளும்

குறிவைத்து பாய்ந்தனர். இதனால் கால்நடை உரிமையாளர்களும், அதன் வணிகர்களும் பெரும் குழப்பத்திற்கு உள்ளாகினர்.

அடுத்து, மே 23 -இல் மத்திய அரசு அறிவித்த ஓர் உத்தரவு நிலைமையை இன்னும் சிக்கலாக்கியது. விலங்கு வதைத் தடுப்பு சட்டம் (கால்நடை வியாபார கூடங்களை ஒழுங்கு படுத்துதல்), 2017,-ஐ அடிப்படையாக கொண்டு இயற்றப்பட்ட இந்த உத்தரவு அறுப்பதற்காக வியாபாரக் கூடங்களில் கொண்டுவரப்படும் கால்நடைகளின் விற்பனையின் மீது எழுதப் படாத தடையை விதித்தது. இத்தடை உத்திர பிரதேசத்தில் செயல்படும் பசு குண்டர்களை ஏவி விட போதுமானதாக அமைந்தது.

நடப்பது நம் ஆட்சி தான் என்று சட்டத்தை தன் கையிலே எடுத்து கொண்டு பசுக்கள், காளைகள், கன்றுக்குட்டிகள் கொண்டு செல்லப்படும் வாகனங்களை இடைமறித்து வன்முறையில் இறங்கியது இக்கும்பல். அரசின் தடை, பசு குண்டர்களின் ஆட்டம் இவற்றின் விளைவாக பயன், வளம் தராத பசுக்களை அறுப்பது வெகுவாக குறைந்து போனது. மேலும் உரிமையாளர்கள் தங்களுடைய விலங்குகளை இனி இதை வைத்து எந்த பிரயோஜனமும் இல்லை என்று கருதி அவைகளை கைவிடவும் செய்து விட்டனர்.

பயிர்கள் அழிந்து போனதை கண்ட ராஜு பொறுமையை இழந்தார். உண்மையை சொல்ல வேண்டும் என்றால் அவருடைய குடும்பம் விவசாயத்தை நம்பியே வாழ்கிறது. நல்ல விலை கிடைக்க வேண்டும் என்பதற்காகவே அவர்கள் பஞ்சாபிற்கும், ஹரியானவிற்கும் பயணம் செய்கின்றனர். அவர்களிடம் இருந்ததோ சிறிய நிலம் தான். அதனால் கிடைக்கும் பயனும் நாசமாகி போனதை நினைத்த அவருக்கு ஆத்திரமே பொங்கியது.

இதனை தொடர்ந்து நாசத்தை உண்டு பண்ணும் தெருக்களில் சுற்றி திரியும் தெரு பசுக்களுக்கு எதிராகவும், மோடி மற்றும் அதித்யானந்த் அரசு-நிர்வாகத்திற்கு எதிராகவும் கோஷங்களை அங்குள்ள மக்கள் எழுப்பினர். (ஜல்லிக்கட்டிற்கு ஆதரவாக நடைபெற்ற மெரினா புரட்சியில் நடந்ததை போல் கோஷங்கள் எழுப்பப்பட்டிருக்கலாம்). தங்கள் கோபங்களை வார்த்தைகளால் திட்டி தீர்த்தனர்.

ராஜுவின் நண்பர் ஒருவர் இதனை தன் மொபைலில் படம் எடுத்தார். பின்னால் நடக்கவிருக்கும் ஆபத்துகளை உணராமல் சமூக வலைத்தளத்தில் அதை பதிவேற்றினார். வீடியோ வைரலாக பரவியது. பசுக்களின் பெயரால் அச்சத்தை ஏற்படுத்திய மத்திய மாநில அரசுகளின் உயர் பதவியிலிருக்கும் நிர்வாகிகளை மோசமான கெட்ட வார்த்தைகளால் திட்டுவதும் அதில் பதிவாகியிருந்தது.

இது நடந்தது செப்டம்பர் 29-30 அன்று. சம்பவம் நடந்த அடுத்த நாள் அக்டோபர் 1 அன்றே காவல்துறை இது குறித்து முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தது. ராஜு கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டார். பிரதமரை தாக்கி பேசும் வசனங்களும் இருந்ததால் இராஜதுரோக வழக்கு (Sedition Charge) பதிவு செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அவதூறு வழக்கே பதிவு செய்ய முடியும் என்று தெரிய வந்தது. எனவே இரண்டு வாரத்தில் ராஜுவிற்கு பிணை கிடைத்தது. பயத்திலேயே அவருடைய குடும்பம் தீபாவளியை கொண்டாடியது. ராஜு ஒன்றே ஒன்றை தான் முறையிடுகிறார். அது, பசுவிடம் இருந்தும், பழக்கப்படுத்தக் கூடிய ஒரு விலங்கை ஆபத்தான நடமாடும் விலங்காக மாற்றிய அரசு நிர்வாக இயந்திரங்களிடம் இருந்தும் தன்னை காப்பாத்துங்கள் என்பதே. நிலைமையை மோசமாக்கியத்தில் இவர்களுக்கே அதிக பங்குண்டு என்று வலியுறுத்தி கூறுகிறார் ராஜு. உத்திர பிரதேஷ், ஹரியானா, மத்திய பிரதேஷ் மற்றும் ராஜஸ்தானில் வாழும் மக்களிடம் இந்த அச்சம் வெகுவாகவே பாதித்துள்ளது.

மத்திய பிரதேஷ் உள்துறை அமைச்சகத்தில் இருந்து Frontline என்ற ஆங்கில பத்திரிகைக்கு வந்த தகவலின் படி, தடிகள், சிகப்பு மிளகாய் ஸ்ப்ரேகளை மட்டும் கடுப்பாகிப்போன விவசாயிகள் பயன்படுத்திடவில்லை. ஆசிட் ஸ்ப்ரேகளையும் பசுக்களை விரட்ட பயன்படுத்துகின்றனர். இவைகளிடம் இருந்து பயிர்களை பாதுக்காக எங்களுக்கு வேறு வழி தெரியவில்லை என்றே அவர்களில் பெரும் பாலோர் கூறுகின்றனர். பசுக்களின் மீது அமிலங்களை வீசுகின்றனர் என்ற செய்தி வெளியே தெரிந்த

உடனேயே பசு குண்டர்கள் முஸ்லிம்களின் மீது பழியை சுமத்தியுள்ளனர். ஆனால் மல்வா மற்றும் பந்தல்கண்ட் ஆகிய பகுதிகளில் அரசு நிருவாகம் நடத்திய விசாரணையிலும், வேறு சில பகுதிகளில் பசு பாதுகாவலர்கள் நடத்திய விசாரணையிலும் அமிலத்தை ஹிந்து விவசாயி களே வீசியுள்ளனர் என்பது தெரிய வந்தது என்கிறார் உள்துறை அமைச்சகத்தின் மூத்த அதிகாரி ஒருவர்.



தெருக்களில் அனாதையாக விடப்படும் பசுக்கள் சில மனிதர்களையும் சாகடித்துள்ளன. சிலரை தாக்கி காயங்களையும் ஏற்படுத்தியுள்ளன என்கிறார் மாநில உள்துறை அமைச்சகத்தின் அதிகாரி ஒருவர்.

இதுமட்டுமல்ல, வட இந்தியாவின் தேசிய நெடுஞ்சாலைகளில் போக்குவரத்து நெரிசல்கள் மற்றும் விபத்துக்கள் நடப்பதற்கும் இவைகள் காரணமாக அமைந்துவிடுகின்றன என்கிறார் விவசாயியும் முன்னாள் இராணுவ அதிகாரியு மான மேற்கு உத்திர பிரதேசம், புலண்ட்ஷகர் மாவட்டத்தை சார்ந்த சுபாஷ் தேஸ்வால்.

பசு பாதுகாப்பு பற்றி வெளியில் பெரிதாக பேசுகிறார்களே தவிர களத்தில் உருப்படியான எந்த முயற்சியும் எடுக்கவில்லை என அதித் யானந்தையும், மோடியையும் குற்றம் சாட்டு கின்றனர் பசுவின் மேல் உணமையான அக்கறை கொண்டவர்கள். இதனை Frontline பத்திரிக்கை யின் நிருபர் பல இடங்களுக்கும் சென்று உறுதி படுத்தியுள்ளார்கள்.

உ.பி.-இன் லக்ஹிம்பூர் கேரி மாவட்டத்தின் அருகில் உள்ள நிக்ஹசன் என்ற இடத்தில் அமைந்திருக்கின்றது ராம் வாடிக தம் என்ற பசு பாதுகாப்பு மையம். கடந்த மூன்று மாதங் களில் மட்டும் இங்கே வந்து கொண்டு விடப் படும் பசுக்களின் எண்ணிக்கை பல்கி பெருகி யுள்ளது. ஆனால் இதற்கு தகுந்தாற்போல் அரசாங்கத்திடம் இருந்து உதவி வருவதில்லை.

எங்களுடைய உண்மையான கோரிக்கை களையும், பசுக்களுக்கு தேவையானவற்றையும் குறித்து யாரும் கண்டு கொள்வதில்லை. எல்லோரும் வெறுமனே பேச மட்டும் செய்கிறார்கள் என்கிறார் இம்மையத்தை கவனித்து வருபவரான உதித் நரைன் திவேதி.

400 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் பஹ்ரைச் மற்றும் லக்ஹிம்பூர் கேரி மாவட்டம் வரை பரந்து இருக்கும் கட்டர்நியாகட் வன விலங்கு காப்பகத்தில் ஒரு வினோத நிலை உருவாகியுள்ளது. இம்மாவட்டத்திலும் இதற்கு அருகாமையில் இருக்கும் மாவட்டங்களிலும் வசிக்கும் கால்நடை உரிமையாளர்கள் வளம், பயன் தராத கால்நடைகளை காப்பகத்தின் சுற்று வட்டாரங்களில் விட்டு விட்டு சென்று விடுகின்றனர்.

இப்படி விடப்பட்ட மாடுகளின் எண்ணிக்கை ஆயிரத்தை தொட்டுள்ளது. காப்பகத்தின் நுழைவாயில் அதன் வெளிவாயில் என எங்கும் பசுக்களே சுற்றி திரிகிற அளவுக்கு நிலைமை மாறியுள்ளது. சில நேரங்களில் அங்கிருந்து நகர்ந்து வந்துவிட்டால் அவை போக்குவரத்து நெரிசல்களை ஏற்படுத்திவிடுகின்றன.

“இரவு நேரங்களில் யாருக்கும் தெரியாமல் மினி டிரக்குகளை ஒட்டி வந்து கால்நடைகளை காப்பகத்தின் அருகில் விட்டுவிட்டு சென்று விடுகின்றனர் அதன் உரிமையாளர்கள். சில நேரங்களில் அதனை கொண்டு விடுவதற்கு பசு குண்டர்களின் உதவியையும் கால்நடை உரிமை யாளர்கள் நாடுகின்றனர். பகல் நேரங்களில் காப்பகத்தின் மேய்ச்சல் நிலங்களில் மேயும் கால்நடைகள் இரவு நேரங்களில் அருகில் இருக்கும் கோதுமை, காய்கறி தோட்டங்களில் சென்று அவற்றையும் தின்று விடுகின்றன.

இப்பகுதியின் அருகில் வசிப்பவர்கள் இந்த நிலைமை பற்றி அதிகாரிகளிடம் புகார் தெரிவித் துள்ளனர். எனினும் எந்த நடவடிக்கையையும் எடுக்கப்படவில்லை” என்கிறார்கள் காப்பகத் தின் அருகில் டெடியா என்ற இடத்தில் வசிக்கும் லால்ஜியும் அவருடைய மருமகனான அதுல் குமாரும். ●

# பசுக் கொலைகள் ஏன்?



## இந்திய பாசிசத்தின் தந்தை கோல்வால்கர் கூறியதென்ன?

புஷ்பா எம். பார்கவா என்றொரு விஞ் ஞானி, ஆய்வாளர். இவரை இந்தியாவில் உடற்கூறு ஆய்வின் தந்தை என அழைப்பார்கள். இவர் நமது அண்டை மாநிலமான ஆந்திரப் பிரதேசத்தின் தலைநகர் ஹைதராபாத்தில் ஆய்வு நிறுவனம் ஒன்றை நடத்தி வருகின்றார்.

1960களில் அந்த நிறுவனத்தின் பெயர் Centre for Cellular and microbiology 'CCMB'. இவர் நம் நாட்டில் அறிவு ஆணையம் எனப் பெயரிடப் பட்ட ஆணையத்தின் தலைவராகவுமிருந்தார். (Chairman National Knowledge Commission) 1960 களில் அப்போது கோல்வால்கர் பசுக்களை அறுப்பதற்கெதிராக ஓர் இயக்கத்தை வன்முறை வெறியாட்டத்தை நடத்தினார். இது கண்டு கலங்கினார் இந்த உடற்கூறு ஆய்வாளர். (புஷ்பா எம். பார்கா) கோல்வால்கரை அழைத்துப் பேசி னார். பசுக்களை அறுப்பதைத் தடை செய்வதால் ஏற்படும் விளைவுகளைப் பற்றிப் பேசினார். பின்னர் பல பத்திரிகைகளுக்குப் பேட்டிகளைத் தந்தார். அவர் அண்மையில் தந்த பேட்டிகளுள் ஒன்றை இங்கே இடம் பெறச் செய்கின்றோம்.

**கேள்வி -** உங்களுக்கும், கோல்வால்கருக்கு மிடையே ஒரு பெரும் சொற்போர் நடந்ததாகக் கேள்விப் பட்டோம் அது என்ன?

**பதில் -** அந்த நேரத்தில் பசுவை அறுப்பதற் கெதிராக ஓர் இயக்கம் நடைபெற்றது. அதனடிப் படையில் சில மாநிலங்களில் பசுவை/மாடுகளை அறுப்பதைத் தடை செய்துவிட்டார்கள். மத்தி யரசு இந்த விவகாரத்தைப் பற்றி ஆய்வு செய்ய ஓர் குழுவை அமைத்தது. அந்தக் குழுவுக்குத் தலைவராக நீதிபதி ஏ.கே. சர்க்கார் நியமிக்கப் பட்டார்கள். குழுவில் கோல்வால்கர், பூரி சங்கராச்சாரியார், டாக்டர் வர்கீஸ் கொரியன் (இவருக்கு இந்தியாவின் பால்வள மனிதன் என்று பெயர்) ஆகியோர் இடம் பெற்றனர்.

அப்போது எனது ஆய்வ ரங்கத்தில் ஒரு கூட்டம் நடந்தது. அதற்கு நான்தான் தலைமையேற்றேன். அந்தக் கூட்டத்தில் பேசிய ஒருவர் இப்படிக் கர்ஜித்தார்.

"நாம் மாடுகளை சாப்பிடாவிட்டால் மாடுகள் நம்மை சாப்பிட்டு விடும்" (If we don't eat the cows, the cows will eat us)

இது ஒரு பெரும் விவாதத்தைக் கிளறி விட்டது. இதில் பசுவின் பாலைக் குடிக்கும் நாம் அதன் இறைச்சியை சாப்பிட மறுப்பதேன்? என்றொரு வினா எழுந்தது.

கோல்வால்கர் என்னிடம் பாலும், இறைச்சி யும் உடற்கூறு ரீதியாக பசுவில் எப்படி உருவா கின்றது? எனக் கேட்டார். நான் இரண்டுமே ஒரே மாதிரியாகத்தான் உருவாகின்றன என்றேன். இதற்கு கோல்வால்கர் என்னிடம், அப்படியா னால் பசுவின் இறைச்சியை உண்ணும் நீங்கள் ஏன் அதன் பாலைக் குடிப்பதில்லை? எனக் கேட்டார். நான் அவரிடம், பசுவின் பாலைக் குடிக்கும் நீங்கள் ஏன் பசுவின் இறைச்சியை உண்ணமாட்டேன் எனக் கூறுகின்றீர்கள்? எனக் கேட்டேன். இந்தக் கேள்வியில் அவர் நொந்து நூலாகிப்போனார். கோபங்கொண்டார், வானத் திற்கும் பூமிக்கும் குதித்தார். அவரை சமாதானப் படுத்திட சங்கராச்சாரியாரும் பாக்யத் கெதி யேனும் முயன்றார்கள். போதும், போதும் என்றான பின்னர் ஒரு வகையாக சமாதானப் பட்டார். அவர் இப்படியொரு கேள்வியை என்னிடம் எதிர்பார்க்கவே இல்லை.


புஷ்பா எம். பார்கவா

**கேள்வி** - இப்போதைய ஆர்.எஸ்.எஸ். தலைவர் எருமைகளை அறுப்பதையும் சேர்த்துத் தடை செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளாரே?

**பதில்**- விஞ்ஞானரீதியாக இஃதோர் முட்டாள் தனம். பசு, மாடு இவையும், எருமையும் உடற்கூறு ரீதியாக வேறு, வேறு இனங்களைச் சார்ந்தவை. அவை எந்த விதத்திலேயும் ஒன்றோடு ஒன்றாய் இணைந்து போவதில்லை.

உண்மையைச் சொன்னால் நமது தொடக்க கால மத நூல்களில் பசுவை அறுப்பதற்கெதிராகவோ, மாட்டுக் கறியை உண்பதற்கெதிராகவோ எதுவுமில்லை. மாறாக மாட்டுக் கறியையும் பசுக் கறியையும் உண்ணும் அனுமதி வெளிப்படையாகவும், தெளிவாகவும் இருக்கின்றது. ஆகவே, மத அடிப்படையில் கூட மாட்டிறைச்சியைத் தடை செய்வது, பகுத்தறிவுக்கு புறம்பானது.

**கேள்வி** - ஆர்.எஸ்.எஸ். விஷ்வ இந்து பரிஷத்தும் பசுவை போன்ற உயிரினங்கள் எல்லாம் ஒரே வகையைச் சார்ந்தவைதான். அதனால் இவற்றை அறுப்பதை ஒட்டு மொத்தமாக தடை செய்ய வேண்டும் என்கின்றவே.

**பதில்**- இன்னும் சொல்வேன் இது விஞ்ஞானத்திற்கு எதிரானது. மனிதர்களுக்கும், ஆப்பிரிக்க கண்டத்தில் வாழும் வாலில்லா குரங்குகளுக்குமிடையே ஆன மரபணுக்கள் 99 சதவீதம் ஒன்று போலவே இருக்கின்றன. ஒரே ஒரு சதவிகிதம் தான் வேறுபடுகின்றது. இந்த ஒரு சதவிகிதம் தான் அனைத்து வித்தியாசங்களுக்கும் அடிப்படையாக அமைகின்றது. (அதாவது மனிதனுக்கும் குரங்குகளுக்குமுள்ள எல்லா வித்தியாசங்களுக்கும், அடிப்படையாக அமைகின்றது)

உண்மையில் வாழும் எல்லா உயிரினங்களுக்குமிடையில் மரபணுக்களில் சில ஒன்று போலவே இருக்கும். இதனால் உயிரினங்களில் ஒன்றுக்கு இருப்பதெல்லாம் ஏனையவற்றிற்கும் இருக்க வேண்டும் என்பது யதார்த்தத்தில் உண்மையல்ல.

பசுக்களும், எருமைகளும் பல விஷயங்களில் மாறுபட்டவை. ஆடுகளுக்கும் ஒட்டகங்களுக்கு மிடையே இருப்பதைப் போன்ற மாறுபாடுகள் உண்டு. அதுபோலவே மனிதர்களுக்கும் ஆப்பிரிக்காவில் வாழும் வாலில்லா குரங்களுக்குமிடையில் சிலபல மாறுபாடுகள் உண்டு.

**கேள்வி** - இந்தியா உலகிலேயே அதிகமான மாடுகளைக் கொண்ட நாடு. இப்போது உள்ள சூழ்நிலையில் ஒரு விஞ்ஞானி என்ற அடிப்படையில் நீங்கள் என்ன செய்யலாம் எனக் கருதுகின்றீர்கள்.

**பதில்** - பால் தருவதை நிறுத்திவிட்ட பசுக்களையும் மாடுகளையும் உணவுக்காக அறுத்து விடுவதே சிறந்தது. ஏர்களுக்காக அதாவது உழுவதற்குப் பயன்படுத்தப்படும் மாடுகளும் இதர விலங்குகளும் கூட சரியாக பராமரிக்கப்படுவதில்லை. அவை எண்ணிக்கையில் அதிகமாக இருப்பதே காரணம். அவை கொடுமைப்படுத்தப்படுகின்றன. அதனால் அவற்றை உணவுக்கு பயன்படுத்துவதே சிறந்தது.

**கேள்வி** - மாட்டுக்கறியை உண்பதற்கெதிராக இப்போது நிலவும் சூழலைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

**பதில்** - விவாதங்களுக்கு வெளியே கோல்வால்கர், டாக்டர் கொரியன் அவர்களிடம் ஓர் உண்மையை ஒத்துக் கொண்டிருக்கின்றார். அது பசுவதை தடுப்பு, மாடுகளை அறுப்பதற்கெதிராக கிளர்ச்சியெல்லாம் அரசியலுக்காகத்தான் என்பதே. இதை டாக்டர் கொரியன் என்னிடம் சொன்னார். இப்போது அது அரசியல்-மதம் இரண்டும் கலந்து குழப்பமான இந்துத்துவாவாக மாறி இருக்கின்றது. இவற்றிற்கு எந்த விஞ்ஞான அத்தாட்சிகளுமில்லை. - (ஆதாரம் Outlook 20 Oct 2014 Meat) ●

தமிழில் MGM



# சொராபுதீன் வழக்கில் அமித்ஷாவை விடுவிக்க

2005 ஆம் ஆண்டு சொராபுதின் சேக் போலி எண்கவுண்டர் மூலமாக கொலை செய்யப்பட்ட வழக்கில் பாஜக தலைவர் அமித்ஷா-வை ஜூலை 2010 அன்று சிபிஜ அதிகாரிகள் கைது செய்தனர். குஜராத் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த வழக்கில் உயர்நீதிமன்ற உத்தரவுப்படி செப்டம்பர் 2012 அன்று மகாராஷ்டிரா மாநிலத்திற்கு மாற்றப் பட்டது. ஆனால் டிசம்பர் 2014 அமித்ஷாவை இந்த வழக்கில் இருந்து விடுவித்து மும்பை சிபிஜ சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்து.

இதற்கிடையில் பாஜக தலைவர் அமித் ஷா முக்கிய குற்றவாளியாக கருதப்பட்ட சொரா புதின் போலி என்கவுண்டர் வழக்கை விசாரித்து வந்த மும்பை சிபிஜ சிறப்பு நீதிமன்ற நீதிபதி பிர்ஜிகோபால் ஹர்கிஷன் லோயா, 2014 நவம்பர் 30 இரவு டிசம்பர் 1 இடையிலான நேரத்தில் நாக்பூருக்கு பயணம் செய்து கொண்டி ருந்த போது உயிரிழந்தார்.

அந்த சமயம் அவர் மாரடைப்பு காரணமாக உயிரிழந்ததாக ஊடகங்களில் செய்தி வெளியாகின.

இது குறித்து டிசம்பர் 2016 - டிசம்பர் 2017 காலகட்டங்களில் மேற்கொண்ட விசாரணை யில், லோயா மரணித்த போது நிலவிய சூழ் நிலைகள், குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்படும் போது இருந்த அவரின் உடலின் நிலை குறித்து எழுந்த பல்வேறு சந்தேகங்களும், கேள்விகளும் எழுந்தது.

இந்த கேள்விகளுக்கான விடை தெரிய பலரிடம் பேசியதில் மகாராஷ்டிரா மாநிலம் துளே பகுதியை சேர்ந்த லோயாவின் சகோதரி மருத்துவர் அனுராதா பியானியும் ஒருவர். அப்போது அவர், மும்பை உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி மோகித் ஷா, ஒரு வழக்கில் சாதமாக தீர்ப்பு வழங்குவதற்காக தனக்கு ரூ.100 கோடி லஞ்சம் கொடுக்க முன்வந்ததாக லோயா என்னிடம் கூறினார்.

# ரூ 100 கோடி பேரம் அம்பலம்
# நீதிபதி லோயா மரணத்தில் மர்மம்

மேலும் லோயா இறப்பதற்கு சில வாரங்களுக்கு முன்பாக லாத்தூர் மாவட்டத்தில் உள்ள எங்களது பாரம்பரிய வீட்டில் தீபாவளி கொண்டாட்டத்திற்காக அனைவரும் ஒன்று கூடியிருந்த போது இதை என்னிடம் கூறினார் என்றார்.

ஒரு வழக்கில் சாதமான தீர்ப்பு வழங்குவதற்காக பணம் மற்றும் மும்பையில் ஒரு வீடு லஞ்சம் தருவதாக கூறியுள்ளதாக தனது தந்தை ஹர்கிஷ-னிடமும் கூறியுள்ளார்.



இந்த வழக்கின் விசாரணைக்கு ஆஜராக அமித்ஷா விலக்கு கேட்ட போது அதை கண்டித்த மும்பை சிபிஐ சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஜேடி. உப்பாத் சில வாரங்களில் இடம் மாற்றம் செய்யப்பட்டார். இதை தொடர்ந்து ஜூன் 2014 பிரிஜிகோபால் ஹர்கிஷன் லோயா மும்பை சிபிஐ சிறப்பு நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.

ஒரு ஆண்டிற்கும் மேலாக நீதிபதி உப்பாத் தலைமையில் இந்த வழக்கு நடந்து கொண்டிருந்த போது, அமித்ஷா நீரழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதால் அவரால் வர இயலாது எனவும் அவர் தில்லியில் வேலையாக இருக்கிறார் எனவும் அவரது தரப்பு மூலம் வாய்மொழி சமர்ப்பிப்புகள் செய்யப்பட்டதே தவிர ஒரு முறை கூட அமித்ஷா நீதிமன்றத்தில் ஆஜராக வில்லை என நீதிமன்ற பதிவுகளில் உள்ளதாக அவுட்லுக் மாகிசின் பிப்ரவரி 2015, செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் 2014 ஜூன் 6, நீதிமன்றத்தில் ஆஜராக விலக்கு அளித்த நீதிபதி உப்பாத் தான் மிகவும் அதிருப்தி அடைந்திருப்பதாக கூறி ஜூன் 20 ஆம் தேதி அமித்ஷா நிச்சயமாக நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என அமித்ஷா தரப்பிற்கு தெரிவித்தார். ஆனால் ஜூன் 20 ஆம் தேதி அமித்ஷா மீண்டும் ஆஜராகவில்லை. எந்த ஒரு காரணமும் கூறாமல் நீதிமன்றத்தில் ஆஜராவதை அமித்ஷா தவிர்த்து வருவதாகவும் இந்த வழக்கின் மறு விசாரணையை ஜூன் 20 ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்படுவதாகவும் நீதிபதி உப்பாத் அறிவித்ததாக அப்போது செய்தி வெளியிட்டது. ஆனால் ஜூன் 25 ஆம் தேதி நீதிபதி உப்பாத் பூனே நீதிமன்றத்திற்கு இடம் மாற்றம் செய்யப்பட்டார்.

இது சொராபுதின் வழக்கு ஆரம்பம் முதல் முடிவு வரை அதே அதிகாரி தான் நடத்த வேண்டும் என்று செப்டம்பர் 2012 உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை மீறிய செயலாகும்.

நீதிபதியாக லோயா பதவியேற்ற சமயத்தில் இந்த வழக்கு தொடர்பாக அமித்ஷா நேரில் ஆஜராக விலக்கு அளித்தார். உப்பாத் அடுத்து வந்த லோயா, ஒவ்வொரு முறையும் நீதிமன்றத்தில் அமித்ஷா ஆஜராவதற்கு விலக்கு அளித்து வருகிறார். ஆனால் இது ஒரு விதிமுறைக்காகவே இருக்கலாம். அமித்ஷா மீது உள்ள குற்றச்சாட்டுகள் வடிவமைக்கும் வரை அவர் நீதிமன்றத்தில் ஆஜராக விலக்கு அளிப்பதாக லோயா அறிவித்தார் என அவுட்லுக் இதழ் செய்தி வெளியிட்டிருந்தது.

சொராபுதின் சகோதரர் ரூபாபுதின் வழக்கறிஞர் மிஹிர் தேசாய், இந்த வழக்கின் சான்றுகள், சாட்சியங்கள் , 10,000 மேற்பட்ட பக்கங்களை கொண்ட குற்றப்பத்திரிக்கை என அனைத்தையும் பரிசீலிப்பதில் நீதிபதி லோயா மிக ஆர்வமாக இருக்கிறார்.

ஒரு நீதிபதியா லோயா-விற்கு நற்பெயரை எடுத்துக்தரக்கூடிய ஒரு முக்கியமான வழக்கு இது. ஆனால் இதன் அழுத்தம் நிச்சயம் அதிகரித்து வருகிறது. நீதிமன்ற அறை எப்போதும் பதற்றத்துடன் தான் காணப்படும். அனைத்து குற்றச்சாட்டுகளில் இருந்து அமித்ஷாவை விடுவிக்கும் படி அவரது வழக்கறிஞர்கள் வலியுறுத்தினர்.

அதே சமயம், டேப்பில் பதிவுசெய்யப்பட்ட ஆதாரங்கள் அனைத்து குஜராத் மொழியில் இருந்தன. நீதிபதி லோயா மற்றும் புகார் தாரருக்கு குஜராத் மொழி தெரியாததால், அதை ஆங்கிலத்தில் மொழி மாற்றம் செய்து தரும்படி கோரிக்கை வைத்தோம். ஆனால் அமித்ஷா தரப்பு வழக்கறிஞர்கள் மொழி மாற்றம் குறித்த கோரிக்கைகளை கண்டுகொள்ளாமல், அமித்ஷாவை இந்த வழக்கில் இருந்து விடுவிக்கு மாறு வலியுறுத்தினர் என தேசாய் கூறினார், புகார்தாரர் வழக்கறிஞர்கள் மிரட்டு விதத்தில் சந்தேகத்திற்கு உரிய நபர்கள் நீதிமன்ற அறை யில் இருப்பதை எனது உதவி வழக்கறிஞர்கள் பார்த்துள்ளனர்.

அக்டோபர் 30 ஆம் தேதி நடந்த விசார ணையின் போது அமித்ஷா ஏன் ஆஜராகவில்லை என நீதிபதி லோயா வினாவினார். நீங்கள் தான் அவர் நீதிமன்றத்தில் ஆஜராக விலக்கு அளித் தீர்கள் என அமித்ஷா தரப்பு வழக்கறிஞர்கள் தெரிவித்தனர். அப்போது நீதிபதி லோயா, வழக்கு விசாரணையின் போது அவர் மாநிலத்தில் இல்லாத கரணத்தால் தான் அவர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராக விலக்கு அளித்தேன்.

மகாராஷ்டிராவில் பாஜக அரசின் பதவியேற்பு விழாவில் கலந்து கொள்வதற்காக அமித்ஷா மும்பை சென்றுள்ளார். நிகழ்ச்சி நடந்த இடம் நீதிமன்றத்தில் இருந்து 1.5 கி.மீ., தொலைவில் தான் உள்ளது. அமித்ஷா மாநிலத் தில் இருக்கும் போது அவர் கண்டிப்பாக நீதி மன்றத்தில் ஆஜராக வேண்டும் என அமித்ஷா தரப்பு வழக்கறிஞரிடம் கூறிவிட்டு, வழக்கு விசாரணையை டிசம்பர் 15 ஆம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

இந்த வழக்கின் அழுத்தம் காரணமாக நீதிபதி லோயா எவ்வாறு பாதிக்கப்பட்டிருந்தார் என மும்பையில் அவருடன் தங்கியிருந்த அவரது உறவினர் நுப்பூர் கூறுகையில்,

நீதிமன்றத்தில் இருந்து வீட்டிற்கு திரும்ப வரும் போது மிகவும் இறுக்கமாக உள்ளது என லோயா கூறுவார் . அனைவரும் சம்பந்தப்பட்ட மிகப் பெரிய வழக்கு இது. அதிக மன அழுத் தத்தை கொடுக்க கூடியது. அரசியல் ரீதியானது வழக்கு இது என்றார்.

2010 ஜூன் முதல் செப்டம்பர் 2015 வரை மும்பை உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக இருந்த மோகித் ஷா சொராபுதின் வழக்கில் சாதகமான தீர்ப்பு வழங்குவதற்காக எனக்கு ரூ.100 கோடி லஞ்சம் தருவதாக கூறினார்.

இரவு நேரங்களில் பொது உடையில் என்னை சந்திக்க வரும் அவர், கூடிய விரைவில் சாதமான தீர்ப்பை வழங்க வேண்டும் என அழுத்தம் கொடுத்தார். இந்த தீர்ப்பு டிசம்பர் 30 ஆம் தேதிக்குள் வந்துவிட்டால் எந்த பிரச் சனையும் இல்லை. அந்த சமயம் வேறொரு முக்கிய செய்தி வெளியாகபோவதால் மக்களின் பார்வை அதன் மீது தான் இருக்கும். இந்த தீர்ப்பு மீது இருக்காது என மோகித் ஷா தனது சகோதரரிடம் கூறியதாக அனுராதா பியாணி தெரிவித்துள்ளார்.

ஒரு வழக்கில் சாதமாக தீர்ப்பு வழங்கு வதற்காக எவ்வளவு பணம் வேண்டும்? எவ்வளவு நிலம் வேண்டும்? மும்பையில் வீடு வேண்டுமா? என கேட்டு லஞ்சம் கொடுக்க முன்வருகிறார்கள். ஆனால் நான் அதை ஏற்கப் போவதில்லை. எனது ராஜினாமா கடிதத்தை அளிக்க போகிறேன். அல்லது பணி இடமாற்றம் கோரி விண்ணப்பிக்கப் போகிறேன் என நீதிபதி லோயா கூறியதாக அவரின் தந்தை ஹர்கிஷன் கூறினார்.

இந்த செய்தி ஊடகங்களில் வெளியான போது, நீதிபதி லோயா குடும்பத்தினரின் குற்றச் சாட்டுகள் குறித்து மோகித் ஷா மற்றும் அமித் ஷாவிடம் கேட்டதிற்கு இது வரை எந்த பதிலும் இல்லை.

லோயாவின் மரணத்திற்கு பின்னர் சொரா புதின் வழக்கை விசாரிக்க நீதிபதி எம்பி.கோசவி நியமிக்கப்பட்டு 2014டிசம்பர் 15, முதல் இந்த வழக்கை விசாரணை நடத்தி வந்தார். அப்போது அமித்ஷா தரப்பு வழக்கறிஞர்கள், அமித்ஷாவை அனைத்து குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுவிக்க கோரி, மூன்று நாட்களாக வாதாடினர். ஆனால் சிபிஐ தரப்பு வெறும் 15 நிமிடங்களில் தனது தரப்பு வாதத்தை முடித்துக்கொண்டது. இதைத் தொடர்ந்து டிசம்பர் 17 விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.

நீதிபதி லோயா மரணமடைந்து ஒரு மாதம் கழித்து, டிசம்பர் 30 ஆம் தேதி, அரசியல் காரணங்களுக்காக சிபிஐ அமித்ஷா மீதி

குற்றம்சாட்டுகிறது. அதனால் அமித்ஷா தரப்பு வாதங்களை ஏற்று அவரை அனைத்து குற்றச் சாட்டுகளில் இருந்தும் விடுவிப்பதாக நீதிபதி எம்பி.கோசவி தீர்ப்பளித்தார்.

தீர்ப்பு வெளியான அதே நாளில் தான் டெஸ்ட் போட்டிகளில் இருந்து கிரிக்கெட் வீரர் தோனி ஓய்வு பெற்றதாக நாடு முழுவதும் அனைத்து தொலைக்காட்சிகளிலும் செய்தி வெளியானது. அனுராதா பியாணி கூறியது போல , "அமித்ஷா குற்றவாளி அல்ல, அமித்ஷா குற்றவாளி அல்ல" என சிறிய ஸ்ரால் மட்டுமே தொலைக்காட்சியில் வெளியிடப்பட்டு மக்களின் பார்வை திசை திருப்பப்பட்டது.

நீதிபதி லோயா இறந்து சுமார் இரண்டரை மாதங்களுக்கு பின்னர் தான் அமித்ஷா அவரின் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறினார். அப்போதைய தலைமை நீதிபதி அவர்களது இல்லத்திற்கு வந்த போது, லோயா-வின் மகன் அனுஜ் 2015 பிப்ரவரி 18, தேதியிட்டு எழுதிய கடிதத்தை அவரிடம் வழங்கினார். அதில், எனக்கும் எனது குடும்பத்தினரும் இந்த அரசியல் வாதிகளால் ஆபத்து உள்ளது. அவர்களை எதிர்த்து போட்டி போட எனக்கு சக்தி இல்லை. எனது தந்தையின் மரணம் தொடர்பாக விசாரிக்க விசாரணை குழு அமைக்க வேண்டும். எங்கள் உயிருக்கு உத்தரவாதம் இல்லை என கூறியிருந்தார்.

மேலும் அனுஜ் அடுத்தடுத்து எழுதிய இரண்டு கடிதங்களில், எனக்கு எனது குடும்பத் தாரும் ஏதேனும் நேர்ந்தால், தலைமை நீதிபதி மோகித்ஷா மற்றும் இந்த வழக்கில் சம்பந்தப் பட்டவர்கள் தான் இதற்கு முழு பொறுப்பு என கூறியுள்ளார்.

2016 நவம்பர் நீதிபதி லோயாவின் தந்தை ஹர்கிஷனை சந்தித்த போது, எனக்கு 85 வயதாகி விட்டது. மரணத்தை பற்றி பயம் இல்லை. எங்களுக்கு நீதி வேண்டும். எனது மகள் மற்றும் பேரக்குழந்தைகளின் வாழ்க்கை குறித்து பயம் எனக்கு உள்ளது என லோயாவின் புகைப்படத்தை பார்த்தபடி கண்ணீர் மல்க கூறினார். ●

**- நன்றி தீக்கதிர்**

# பா.ஜ.க. ஆட்சியில் காவல்துறையின் கேடு

வரதட்சணை கொடுமை வழக்கில் சிக்கிய பெண் சாமியார் ராதேமாவை வரவேற்ற டில்லி காவல்துறை அதிகாரி. தனது இருக்கை யில் அமரவைத்து பூசை செய்தார். இவ்விவகாரம் தொடர்பாக டில்லி காவல்துறை இவர்மீது எந்த நடவடிக்கையையும் எடுக்க வில்லை.

மும்பையில் வசிக்கும் சர்ச் சைக்குரிய பெண் சாமியார் ராதேமா; இவரது உண்மையான பெயர் சுக்விந்தர் கவுர். சமீபத்தில் வெளியிடப் பட்ட மோசடி சாமி யார்கள் என்று சாமியார் களே வெளியிட்ட பட்டியலில் இவரு டைய பெயரும் காணப்பட்டது.

இவர் மும்பையில் உள்ள பிரபல இனிப்புத் தயாரிக்கும் நிறுவனத்தின் உரிமையாளரிடம், அவரது மருமகளிடமிருந்து அதிக பணம் வாங்கி வருமாறு கூறிய காரணத் தால், அவர் தனது மருமகளை மிரட்டி யுள்ளார். ஆகையால், அந்த இனிப்புத் தயாரிக்கும் நிறு வன உரிமையாளர் மீதும், இந்தப் பெண் சாமியார் மீதும் மும்பை காவல்துறையில் வழக்குப் பதிவு செய்யப் பட்டது. தற்போது இவர் பிணையில் உள்ளார்.

இந்நிலையில் ராதேமா டில்லிக்குச் சென்றுள் ளார். அப்போது அவருக்கு டில்லி விவேக் விகார் காவல் நிலையத்தில் சிறப்பு மரியாதை செய்யப் பட்டு, அந்தக் காவல் நிலைய தலைமை அதிகாரி யின் இருக்கையில் அமர வைக்கப்பட்டார். அப்போது அக்காவல் துறை தலைமை அதி காரி, பெண் சாமியாருக்கு பூசை கள் செய்தார். மேலும் காவல் அதிகாரி ராதேமா முன் கை கட்டி நின்றுகொண்டு இருந்துள்ளார். இது ஒளிப்பட மாக எடுக்கப்பட்டு வெளியாகியுள்ளது.

இதுகுறித்து குறிப்பிட்ட அந்தக் காவல் அதிகாரி, "இந்த ராதே மாவின் அருளால் எனக்குப் பதவி உயர்வு கிடைத்தது. ஆகவே, நான் அவருக்கு நன்றிக் கடன்பட்டவன். மேலும் இது என்னுடைய தனிப்பட்ட நம் பிக்கை; ஆகவே, என் மீது எந்த நடவடிக்கையும், யாராலும் எடுக்க முடியாது" என்று கூறினார். ●

**- நன்றி விடுதலை**

# பண மதிப்பு நீக்கம் மிகப்பெரிய ஊழல் பொருளாதார நிபுணர்கள் சாடல்



நரேந்திர மோடி தலைமையிலான மத்திய பாஜக அரசு உயர் பண மதிப்பு நீக்க நடவடிக்கை நாட்டிலேயே மிகப்பெரிய ஊழல் என்று பொருளாதார நிபுணர்கள் தெரிவித் துள்ளனர். நாட்டிலுள்ள அனைத்து எதிர்க்கட்சி களும் ஒன்று சேர்ந்து நவம்பர் 8 ஆம் தேதியை கருப்பு தினமாக கடைப் பிடிக்கின்றன. இந்த பணமதிப்பு நீக்க நடவடிக் கையின் தோல்வியை மறைக்க பாஜக அதை கருப்பு பண ஒழிப்பு நாளாக கடைப்பிடிக்க போகிறது.

இந்நிலையில் புதுதில்லியில் பண மதிப்பு நீக்கம் அமல்படுத்தி ஓராண்டுக்கு பின்னர் அதன் தாக்கத்தினை ஆய்வு செய்த பொருளாதார ஆய்வு அமைப்பு டில்லியில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் கூறியிருப்பதாவது:

நவம்பர் 8 ஆம் தேதி கருப்பு பணத்தை ஒழிக்கவே உயர் பண மதிப்பு நீக்கத்தை நடை முறைப் படுத்துவதாக கூறிய மோடி இதுவரை எவ்வளவு கருப்பு பணம் வந்துள்ளது என்பதை கூறவேயில்லை. கருப்பு பணம் என்பது வெறும் பண நோட்டுக்களாக இருக்காது. அது 95 சத வீதம் பங்கு பத்திரங் களாகவோ, தங்கமாகவோ, நிலம் மற்றும் மனைகளாகவோ தான் இருக்கும்.

எனவே பண நோட்டுகளை ஒழிப்பது என்பது எந்த நாட்டிலும் நடைபெற்றதாக சான்றுகள் இல்லை என்ற பொருளாதார நிபுணர்களின் கேள்விக்கும் விமர்சனத்திற்கும் இதுவரை பதிலே இல்லை.

கருப்பு பண ஒழிப்பு என்பது எதிர் மறை யாகவே செயலாற்றி யுள்ளது. பல கருப்பு பண முதலைகள் தங்களுடைய கருப்பு பணத்தை வெள்ளைப்பணமாக மாற்றிக் கொள்ளவே அது உதவியுள்ளது.

பாஜக கட்சி தலைவர்களும் கட்சியினரும் மோடியின் அறி வுரையின்படி எவ்வளவு பணத் தை வங்கிகளில் போட்டுள்ளனர் என்பதையும் ஏன் மோடி அரசு கூற மறுக்கிறது என்பது தெரிய வில்லை.

கருப்பு பண மதிப்பு ஏன் பணமில்லாத பொருளாதாரம், அதாவது டிஜிட்டல் மூலமான பரிவார்த்தனையாக மாற்றப் பட்டது?

பின்னர் டிஜிட்டலுக்கு மாறுங்கள் என்று முன்பு அளித்த அழுத்தம் பின்னர் படிப்படியாக கைவிடப்பட்டது ஏன்? கருப்பு பண ஒழிப்பிற்கு பின்னர் வரு மான வரி செலுத்துவோரின் எண் ணிக்கையாவது கூடியிருக்கிறதா என்றால் அதுவும் இல்லை.

கருப்பு பண ஒழிப்பு அல்லது பண மதிப்பு நீக்கம் பணக்காரர் களுக்கும் ஏழைகளுக்கும் நடக்கும் யுத்தம் என்று மோடி திருப்பி திருப்பி கூறிய வசனங்கள் 10 லட்சம் கோடி கடன் வாங்கிய 50 கார்ப்பரேட்டுகளுக்கு அக்கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்ட பின்னர் என்ன வாயிற்று.

யஷ்வந்த் சின்கா, குரு மூர்த்தி, அருண் ஷோரி போன் றோர் பணமதிப்பு நீக்கம் கடுமையாக நாட்டின் பொருளா தாரத்தை பாதித்துள்ளதே என்று கடுமையான கூறிய விமர்சனங் களுக்கும் எந்த பதிலுமில்லை.

எனவே நீங்கள் பண மதிப்பு நீக்க நடவடிக்கை ஒரு மாபெரும் தோல்வி என்பதை இன்னும் ஏன் ஏற்றுக்கொள்ள மறுக்கிறீர்கள்?

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட் டுள்ளது. ●



# நிலக்கரி என்னும் பேராபத்து



நிலக்கரி (Coal) என்பது தொல்லுயிர் எச்சங்களில் இருந்து உருவாகும் எரிப்பொருள் ஆகும். இது தரைப் பரப்பின் கீழே தோண்டப் படும் சுரங்கங்கள் மற்றும் குழிகள் வாயிலாக வெளிக் கொணரப்படுகிறது.

நிலக்கரி பெரும்பாலும் அனல்மின் நிலையங்களின் எரிப்பொருளாகவே பயன்படுத்தப் படுகின்றது. உலகில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தில் 40% நிலக்கரியை எரிப்பதின் மூலம் தயாரிக்கப்படுகின்றது. (Extracted from wikin son "Electricity Generation and health publishedinthelancelspetember15,2007) நிலக்கரி பயன்படுத்தும் நாடுகளின் எண்ணிக்கையில் இந்தியா மூன்றாம் இடத்திலும் நிலக்கரி இறக்குமதியில் நான்காவது இடத்திலும் நிலக்கரி உற்பத்தியில் மூன்றாம் இடத்திலும் நிலக்கரி கையிருப்பில் ஐந்தாம் இடத்திலும் உள்ளது. (Source wikipedia)

இன்றைய எரிசக்தி துறையின் தேவையை நிலக்கரியை கொண்டு நாம் பெருமளவு பூர்த்தி செய்தாலும் நிலக்கரியால் ஏற்படும் பாதிப்புகள் என்பது மிகக் கொடூரமானது.

நிலக்கரி துகள்களில் இருந்து வெளிப்படும் கார்பன்டை ஆக்ஸைடு (50²) மற்றும் நைட்ரஜன் டை ஆக்ஸைடு (NO²) மனிதர்களின் சுவாசக் கோளாறு முதல் நுரையீரல் வரை பாதிப்பை ஏற்படுத்தும். (Source : Scientisfic evidence of health effects from coal use in energy generation university of Illiner is at chicago school of public health chicago, Illinois Journnal page no. 05)

நிலக்கரியை எரிக்கும் பொழுது அதிலிருந்து வெளிப்படும் மெர்க்குரி கழிவானது மனிதர்களின் நரம்பு மண்டலத்தை பாதிப்படைய செய்வது மட்டுமல்லாமல் பெண்களுக்கு கருக் கலைவதுடன் பிறந்த சிசுக்களும் இறப்பதற்கான வாய்ப்புகள் அதிகம். நிலக்கரி அதிகமாக பயன் படுத்தும் நாடுகளான சிலி, சீனா, மெக்ஸிகோ, தாய்லாந்து, ஜெர்மனி மற்றும் ஆஸ்திரேலியாவில் அதிகமான சிசு மரணம் ஏற்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

(Source ; Gohle I, Thomar, Woodward A, Campbal-Len-Drum D, Pruss-Ustun A, Hales S, etal. Estimating The global public health implications of electricity and coal consultation environ health perspect. 2011 June, 119 (6) 821.

உலகின் மெர்க்குரி கழிவுகளில் 26% நிலக்கரி பயன்படுத்தும் அனல்மின் நிலையங்களின் மூலமாக தான் வெளிப்படுகின்றது.

நிலக்கரி ஏற்படுத்தும் பாதிப்புகளினால் மனித ஆயுட்காலமும் குறைகின்றது. சீனா மற்றும் இந்தியாவில் சராசரியாக இரண்டரை வருடமும்

சீனாவில் மூன்றரை வருடமும் மனித ஆயுட் காலமும் குறைந்துள்ளதாக ஆய்வுகள் தெரிவிக் கின்றன.

(Source - Gohlke I, Thoma R, Woodward A, Campbell-Len-Drum D, Pruss-Ustun A, Hales S, etal Estimating the global public health Implications of Electricity and coal con rumption environ Health perspect. 2011 June, 119 (6) 821.

அனல்மின் நிலையங்களில் நிலக்கரி எரிக் கப்படுவதன் மூலம் ஏற்படுத்தும் பாதிப்புகளால் மட்டும் சீனாவில் வருடத்திற்கு சுமார் இரண் டரை லட்சம் மக்கள் செத்து மடிகின்றனர். (Source : Extracted from wikinson "Electricity Generation and Health" Published in the Lancel September 15, 2007)

இன்னும் நிலக்கரியில் இருந்து வெளிப்படும் கார்பன்-டை-ஆக்ஸைடு ($C_O2$) மற்றும் நைட்ரஸ் ஆக்ஸைடு ($N_2O$) போன்ற வேதிப் பொருட்களால் புவி வெப்பமடைகின்றது. இதனால் தான் வெப் பநிலையில் ஏற்றம் காணப்படுகிறது. மேலும் புவி வெப்பமாகுவதால் மழை வளமும் குறைந்து வறட்சியை நோக்கி செல்ல நேரிடுகிறது.

இந்தியாவில் மொத்தமாக 132 அனல்மின் நிலையங்கள் உள்ளன. இதில் தமிழகத்தில் மட்டும் 8 அனல்மின் நிலையங்கள் உள்ளன. மேலும் புதிதாக 32 அனல்மின் நிலையங்கள் வர இருப்ப தாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

உலகில் இருதய நோயால் பாதிப்படைவர் களில் 5 சதவீதத்தினர் காற்று மாசினால் தான் பாதிப்படைகிறார்கள் என உலக சுகாதார மையம் தெரிவிக்கின்றது. (Source : U.S. Enviro meatal Protection Agency. Integrated Science assessment for Particulate Matter 2009 December 2009, EPA/600/R-08/139F)

இதனை எல்லாம் சரி செய்வதற்காக தான் பிரான்ஸ் தலைநகர் பாரிசில் கடந்த ஆண்டு உலக நாடுகள் ஒன்றுகூடி விவாதித்தன.

**பாரிஸ் ஒப்பந்தமும் இந்தியாவின் எரி சக்தியும்**

கடந்த வருடம் அக்டோபர் மாதம் இரண் டாம் நாள் காந்தியின் பிறந்தநாளில் ஐ.நா. அமைப்பின் அறவழிப் போராட்ட நினைவு கூரல் நிகழ்வில் இந்தியா பாரிஸ் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது என்பதைனையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

இந்தியாவின் இன்றைய எரிசக்தி கொள்கை முற்றிலும் பாரிஸ் ஒப்பந்தத்திற்கு எதிரானது. அதில் முக்கியமானது 2030க்குள் இந்தியா படிசல் எரிபொருள் அற்ற (Non-Fossil Fuel) உற்பத்தியை குறைந்தது 40% ஆக நிலை நிறுத் தும் என்பது அதில் 2022ற்குள் 175GW மரபு






சாரா எரிசக்தி உற்பத்தியை கொண்டு வருவது என்பதும் உள்ளடக்கம் அதாவது 2040ற்குள் கிட்டத்தட்ட 400GW

(Source : https//www.theguardian.com/environment/2016/oct/02/india-paris-climate-change-agreenment-un-narendra-modi)

2015 இல் வெளியான சர்வதேச ஆற்றல் முகமையகம் (International Energy Agency) வெளியிட்ட உலக நாடுகளின் ஆற்றல் / சக்தி தேவை உற்பத்தி வருங்கால செயற்பாடுகள் குறித்து வெளியீட்டில் மிகத் தெளிவாக இது குறித்து விளக்கம் உள்ளது.

(Source : https//ww.iea.org/publications/free Publication / india egergy outlook wed 2015, pdf.

ஆக இயற்கை எரிவாயு திட்டத்தை விடுத்து, மாற்று எரிசக்தி கொள்கையில் செயலாற்றி னால்தானே இந்தியா உலக நாடுகளுக்கு கொடுத்த வாக்குறுதிகளை காப்பாற்ற முடியும். உலக தட்ப வெட்ப மாற்றத்தினைக் கட்டுப் படுத்த ஏற்படுத்தப்பட்ட பாரிஸ் ஒப்பந்தத்தை மீறாமல் செயல்படுவதுதானே இந்தியாவிற்கான அறம் சார்ந்த சிந்தனையாக இருக்கும். ஆனால் அதற்கு முற்றிலும் மாறுபட்ட நடவடிக்கையே இந்தியா மேற்கொண்டு வருகின்றது.

**அதானி நிறுவனம் ஏற்படுத்தப் போகும் சுற்றுச்சூழல் பேராபத்து**

ஆஸ்திரேலியாவில் உள்ள மத்திய குவீன்ஸ் லாந்து மாகாணத்தில் உள்ள Galiee Basin என்கிற இடத்தில் சுமார் 1,10,456 ஏக்கர் பரப்பளவு நிலத்தில் "ஆறு" திறந்தவெளி மற்றும் "ஐந்து" ஆழ்கிணறு வகையிலான நிலக்கரி சுரங்கங்கள் அமைய விருக்கிறது.

சுரங்கத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள இந்த நிலப்பரப்பிற்குள் 52 கிலோ மீட்டர் நீளமுள்ள "கார்மைக்கேல்" என்கிற ஆறு உருவாகி பயணித்து கடலில் கலக்கிறது.

வருடத்திற்கு 4 கோடி டன் நிலக்கரி வீதம் அடுத்த அறுபது வருடத்திற்கு 240 கோடி டன் நிலக்கரி வெட்டி எடுக்கப்படும். சுரங்கம் செயல்பட தேவையான நிலக்கரி உள்ளூர் தேவை போக மீதம் அருகிலுள்ள கடல் வழியே ஏற்றுமதி செய்யப்படும், அதானி ஆஸ்திரேலியா வெட்டி எடுக்கும் இந்த நிலக்கரி முழுவதையும் அதானி இந்தியா "நல்ல விலை கொடுத்து வாங்கிக் கொள்ளும். சுரங்கத்திலிருந்து கடலில் நிற்கும் கப்பலுக்கு எடுத்துச் செல்ல 189 கி.மீ. நீளமுள்ள ரயில் பாதையை (Posco) போஸ்கோ என்கிற தென் கொரியா நிறுவனம் அதானி நிறுவனத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் அமைத்துக் கொடுக்கும்.

இது செயல்பட தொடங்கினால் இதுவே ஆஸ்திரேலியாவின் மிகப்பெரிய நிலக்கரி சுரங்கமாகவும் உலகின் மிகப்பெரிய சுரங்கங் களில் ஒன்றாகவும் திகழும். இந்த திட்டத்தின் மொத்த மதிப்பீடு 2170 கோடி டாலர் (இந்திய மதிப்பில் சுமார் 1,41,000 கோடி ரூபாய்) ஆகும்.

சுரங்கம் செயல்பட தேவையான நீரை அருகிலுள்ள பெல்யாண்டோ ஆறிலிருந்து எடுத்துக்கொள்ள அதானி நிறுவனம் அனுமதி பெற்றுள்ளது.

இந்த சுரங்கம் அமைவதால் குறைந்த பட்சம் 10,000 ஆஸ்திரேலியர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என ஆஸ்திரேலிய பிரதமர் தெரிவித்துள்ளார். தவிர இதன்மூலம் கவீன்ஸலாந்து மாகாணத்துக்கு ஒவ்வொரு ஆண்டும், ஆண்டுக்கு 297 கோடி டாலர் வருமானம் கிடைக்கும் என்பதால் இந்த சுரங்க திட்டம் "ரொம்ப நல்ல திட்டம்" என அறிவித்துள்ளார்.

இந்த திட்டத்தை செயல்படுத்தப்போவது நம்ம இந்தியாவை சேர்ந்த "அதானி" நிறுவனம் வேண்டாம் என ஆஸ்திரேலியா அரசால் கை விடப்பட்ட திட்டத்தை அதானி நிறுவனத்திற்கு கேட்டு வாங்கி கொடுத்தது நமது இந்நாள் பிரதமர்.

சுரங்கம் அமைக்கப்படப் போகிற இடங்களை அளந்து என்னென்ன செய்யப் போகிறோம் என திட்டமிட்டு உள்ளூரில் கிளியரன்ஸ் வாங்கி ஆஸ்திரேலிய அரசிடம் திட்ட அறிக்கை கொடுக்க அதானி நிறுவனத்திற்கு 680 கோடி ரூபாய் கடனாக நமது எழைப் பங்காளனான பாரத ஸ்டேட் வங்கியால் கொடுக்கப்பட்டு பைசா பாக்கியில்லாமல் செலவாகிவிட்டது. திட்டம் தொடங்கினால் மேலும் 5000 கோடி ரூபாய் தருவதற்கு அங்கீகாரம் கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த திட்டத்திற்கு ஆஸ்திரேலியா பெடரல் அரசு 500 கோடி டாலரும் (இந்திய மதிப்பில் சுமார் 32,000 கோடி) குவீன்ஸ்லாந்து மாகாண அரசு 950 கோடி டாலரும் (இந்திய மதிப்பில் சுமார் ரூ. 62,000 கோடி) கடனாக அளிக்கவிருக்கிறது.

ஆஸ்திரேலிய அரசு அங்கீகாரம் இந்திய அரசு பணம் ஆஸ்திரிலேய அரசு பணம் குவீன்ஸ்லாந்து அரசு பணம் என திட்டம் தொடங்க தயார் ஆன தருவாயில் 2015 ஆம் அண்டு புதிய பிரச்சினைகள் வர ஆரம்பித்தது. 2014-இல் இந்த திட்டத்திற்கு ஆஸ்திரேலியா அரசு முழு அங்கீகாரம் கொடுத்திருந்தாலும் இந்த திட்டத்தை எதிர்த்து பல்வேறு அமைப்புகள் வழக்கு தொடர்ந்துள்ளன. அவற்றில் குவீன்ஸ்லாந்து மாகாண அரசும் ஒன்று.

2014 வரைக்கும் எதிர்க் கட்சியாக இருந்த ஆஸ்திரேலியா தொழிலாளர் கட்சி (கிலிறி) தான் இந்த சுரங்கம் அமைவதை கடுமையாக விமர்சனம் செய்தது. 2015 தேர்தலில் அக்கட்சி வெற்றி பெற்று ஆளும் கட்சியாக ஆனவுடன் முதல் வேலையாக சுரங்கத்தையும் கடலையும் ரயில் பாதை திட்டத்திற்கு பணம் கொடுப்பது தடை செய்யப்பட்டது. அதனால் ஆஸ்திரேலியாவில் உள்ள வெளிநாட்டு வங்கிகளிடம் அதானி மீண்டும் கடன் வாங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.




**குவீன்ஸ்லாந்து மாகாண அரசு தொடர்ந்துள்ள வழக்கின் சாராம்சம்**

1) இது அளவில் மிகப்பெரிய சுரங்கம் எனவே இது செயல்பட அருகிலுள்ள பெல்யாண்டொ ஆறிலிருந்து நாளொன்றுக்கு 3 கோடியே 50 லட்சம் லிட்டர் நீரை எடுத்து செலவிடும் அதில் வெறும் 6% நீர் மட்டுமே மறு சுழற்சிக்கு வரும். மீதம் 94% நீர் அனைத்தும் எந்த பயன்பாடும் இன்றி வீணாகும்.

2) ஐந்து ஆண்டுகளில் இந்த சுரங்கம் 29,700 கோடி லிட்டர் நீரை பூமிக்கு அடியிலிருந்து வெளியேற்றும்.

3) நிலக்கரி எடுக்கும்போது மீத்தேன் ஏராளமான நச்சு வாயுக்கள், தூசிகள் வெளிவரும்.

இதனால் சுரங்கத்திற்கு அருகில் உள்ள ஊர்களில் சுற்றுச்சூழல் பாதிக்கப்படும். அங்குள்ளவர்களுக்கு நுரையீரல் நோய்கள் வரும்.

4) நிலக்கரி படிமத்துடன் யுரோனியம், தோரியம் போன்ற கதிர்வீச்சு தனிமங்கள் சேர்ந்தே வெளிவரும். இவை எரிக்கப்பட்ட சாம்பலில் கூட கதிரியக்கத்தை கொண்டிருக்கும். இவை அடுத்த இருபது வருடத்திற்கு ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு 20 மில்லி சீவேர்ட் அளவிற்கு கதிர்வீச்சை ஏற்படுத்தும். உலகில் தற்போதுள்ள அணு உலைகளை விட அதிக அளவில் நிலக்கரியை எரிக்கும். அனல்மின் நிலையங்களே அதிக கதிர்வீச்சை ஏற்படுத்தி வருகிறது என்பதை கவனத்தில் எடுக்க வேண்டும்.

5) கார் மைக்கேல் ஆறு, சுரங்கங்களுக்கு இடையூராக இருப்பதால் அதனை திசை திருப்ப அமைக்கப்படும். மேலும் அதன் மீது ஏராளமான பாலங்கள் வெள்ள வடிகால்கள் அமைக்கப்படும்.

6) சுரங்கத்திலிருந்து கடலில் நிற்கும் கப்பலுக்கு நேரடியாக நிலக்கரியை ஏற்ற நிலத்தில் சீரமைத்தது போக கடலிலும் வழித்தடம் அமைக்க வேண்டும். அதற்காக கடலில் சிறிது தூரம் கடல் நீருக்கு அடியிலுள்ள மணலைத் தோண்டி எடுக்க வேண்டும். இது கடலுக்கு அடியில் அங்கே வளர்ந்துள்ள கடல்புல்லை அழிக்கும். அதனால் அதோடு தொடர்புள்ள கடல்வாழ் உயிரினங்கள் அழியும். இதில் தோண்டி எடுக்கப்படும் மணலை கடலின் வேறு பகுதியில் கொட்டினாலும் கடல் புல் அழியும். வெளியே எங்கும் கொட்டினாலும் நிலமும் சூழலும் பாதிக்கப்படும்.

7) திட்ட மிடப்பட்ட இடத்தில் அதானி நிறுவனத்தால் வருடத்திற்கு 6 கோடி டன் வீதம் நிர்ணயிக்கப்பட்ட 60 ஆண்டுகளில் 360 கோடி டன் நிலக்கரியை எடுக்க முடியும். ஆனால் அது கணக்கை குறைத்து காண்பிக்கிறது.

8) கடந்த காலங்களில் நிலக்கரிக்கு ஏற்பட்டுள்ள விலை சரிவை கணக்கில் எடுத்துக் கொண்டால் தற்போது அதானி நிறுவனம் திட்ட அறிக்கை கொடுத்தது போல நிலக்கரி டன் ஒன்றிற்கு 140 டாலர் கொடுக்காது. மேலும் வருங்காலத்தில் எல்லோரும் நிலக்கரியின் தேவையை குறைப்பார்கள். அதனால் விலை டன் 60 டாலருக்கும் கீழ் குறைய வாய்ப்புள்ளது. 110 டாலருக்கும் கீழ் விலை குறைந்தால் திட்டமிட்ட லாபத்தை எட்ட முடியாது.

9) சுரங்கத்தால் அருகிலுள்ள ஊர்களின் நிலத்தடி நீர் மட்டம் 60 முதல் 160 அடி ஆழம் வரை இறங்கலாம் என அதானி நிறுவனம் கூறியுள்ளது. ஆனால் 1000 அடி வரை நீர் மட்டம் குறையும் ஆபத்து உள்ளது.

10) சுரங்கம் அமையவிருக்கும் வனப்பகுதி அழியும் தருவாயில் உள்ள மெழுகு பனை உட்பட ஏராளமான மரங்களை கொண்டது. அவற்றை அழிப்பதன் மூலம் கோலா கரடி யக்கா ஸ்கிங் எனப்படும் உடும்பு சில அரியவகை பாம்புகள் உட்பட அழியும் தருவாயில் உள்ள பல வன உயிரினங்கள் அழியும்,

11) அதானி நிறுவனம் 10,000 பேருக்கு வேலைவாய்ப்பை தரும் என்பதும் நம்ப முடியாத ஒன்று. இவர்களால் வெறும் 1,500 பணிகளை மட்டுமே ஏற்படுத்த முடியும். ஏனெனில் 400 டன் கையாளக்கூடிய 45 தானியங்கி டிரக்குகளை பயன்படுத்துவார்கள். தவிர சுரங்கத்திலிருந்து கப்பல் வரை அனைத்தும் முழுமையான தானியங்கி அமைப்புகளாக தமிழக மக்களுக்கு இங்குள்ள அரசு சாக்குபோக்கு சொல்லுகின்ற மாதிரியே அங்கும் நீதி மன்றத்தில் கடந்த இரண்டு வருடமாக "நீங்க சொல்றதெல்லாம் இருக்கு ஆனா நீங்க சொல்ற அளவுக்கு இல்லை" என்று சமாளிக்க வருகின்றனர் அதானி நிறுவனத்தினர். இதனால் கொந்தளித்த அந்நாட்டு மக்கள் சமீபத்தில் அதானியை எதிர்த்து போராட்டத்திலும் இறங்கி விட்டார்கள்.

இங்குள்ள அரசு போன்று குவின்ஸ்லாந்து மாகாண அரசு போராடும் மக்கள் மீது குண்டர் சட்டத்தினை ஏவாமல் தம் மக்களின் நலன்களை கருத்தில் கொண்டு வழக்கு நடத்தியும் தம்மாலான தடைகளையும் ஏற்படுத்தி வருகின்றது.

**காற்றில் விஷம் கலக்கும் மார்க் துறைமுகம் என்கின்ற காரைக்கால் துறைமுகம்** (KKPL)

அரிசி, சீனி, சிமெண்ட் மற்றும் யூரியா முதலான வேதியியல் பொருட்கள் டெக்ஸ்டைல்ஸ் பொருட்களின் ஏற்றுமதி இறக்கு மதிக்கான துறைமுகம் எனக் கூறப்பட்டு காரைக்கால்



மாவட்டத்திற்கு உட்பட்ட தமிழக எல்லைக்கு அருகில் உள்ள வாஞ்சூர் பகுதியில் கடந்த 2006-ம் ஆண்டு மார்க் குழுமம் துறைமுகம் தொடங்கப்பட்டது. இதனால் பலருக்கு வேலை தொடங்கப்பட்டது. இதனால் பலருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். சுற்றுச்சூழல் வளம்பெரும் என்றெல்லாம் கூறி தொடங்கப்பட்ட இத்துறை முகம் சரியாக 2009 ஆண்டு பெரிய அளவில் இந்தோனேசியாவில் இருந்து நிலக்கரி இறக்குமதியை தொடங்கியது.

இத்துறைமுக வசதிக்காகவே துரிதமாக நாகூர் வரை இருந்த ரயில்வே போக்குவரத்து காரைக்கால் வரை நீட்டிக்கப்பட்டது. இதனால் நிலக்கரி ஏற்றிச்செல்ல சரக்கு ரயில் போக்கு வரத்து துறைமுகத்திற்கு கிடைத்தது. இத்துறை முகத்தில் நிலக்கரி இறக்குமதி செய்து, துறைமுக வளாகத்தில் மலைபோல் குவித்து வைக்கப்பட்டு லாரிகளிலும், சரக்கு ரயில்களில் ஏற்றி தமிழகத்தின் பல பாகங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு வருகிறது.

இத்துறைமுகத்தின் மூலம் காற்றில் பரவி வரும் நிலக்கரி துகள்கால் அருகில் உள்ள வாங்கூர் பட்டினச்சேரி, நாகூர் மற்றும் சுற்று வட்டார ஊர் மக்களின் ஆரோக்கியம் கடுமை யாக பாதிக்கப்பட்டு வருகிறது. இது மட்டும் அல்லாமல் இந்த பகுதியின் நீர் வளம், கடல் வளம் மற்றும் காற்று அனைத்தும் மாசுப்படுத்திக் கொண்டு இருக்கிறது.

கப்பல் வந்து நிறுத்த நிலத்தை குடைந்து கடல் நீரை ஊருக்குள் கொண்டு வந்தால் நீர் நிலைகளும் நிலத்தடி நீரும் குடிப்பதிற்கு ஒவ்வாததாக மாறிவிட்டது. ●

**மு. ஆரிப் முஹம்மது**






# பெருநாள் சந்திப்பு (ஈத்மிலன்) நிகழ்ச்சி

தி புரொபஷனல் கொரியர் குழுமத்தில் பணியாற்றும் ஊழியர்கள் ஒன்று கூடும் பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சியை ஆண்டு தோறும் அக்குழுமம் நடத்தி வருகிறது.

இந்த ஆண்டு பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சி யூனிட்டி பப்ளிக் பள்ளிக்கூட அரங்கில் 11.11.2017 சனிக்கிழமை அன்று மாலை 6.30 மணியளவில் நடந்தது.

நிகழ்வுக்கு தி புரொபஷனல் கொரியர் நிறுவனத்தில் நிர்வாக இயக்குநர், சமுதாயப் புலவர் அஹ்மது மீரான் தலைமை ஏற்று சிறப்பித்தார். சகோதரர் முஹ்யித்தீன் கிராஅத் ஓதினார்.

அவையின் தலைவர் அஹ்மது மீரான் பெருநாள் சந்திப்பு நிகழ்வின் அவசியம் மற்றும் சிறப்பு குறித்து தலைமை உரை யாற்றினார்.

வைகறை வெளிச்சம் துணை ஆசிரியர் மௌலவி இல்யாஸ் ரியாஜி வட்டி ஒரு கொடுமை என்ற தலைப்பில் உரையாற்றி பார்வையாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தார்.

தி புரொபஷனல் குழுமத்தின் பொது மேலாளர் மைதீன் கனி தன்னம்பிக்கை பற்றி உரையாற்றினார்.

நன்றியுரை துஆவுடன் கூட்டம் 9.00 மணிக்கு நிறைவுற்றது. நிகழ்வில் பங்கேற்றவர்களுக்குசைவ, அசைவ உணவு உபசரிப் பும் நடைபெற்றது.

ந.நி.



தொடரும்

# தலித்கள் மீதான வன்முறைகள்

மதுரை மாவட்டம், மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலுக்கா, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் பன்னியன் என்றொரு கிராமம் உள்ளது. காமராஜர் பல்கலைக் கழகத் திலிருந்து சுமார் 22 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள கிராமம் நாகமலை மலையடி வாரத்தை ஒட்டி உள்ளது.

கல்லும் மண்ணும் கலந்த விவசாயத்திற்கு ஏதுவாக அமையாத இம்மலையடிவாரத்தில் தான் பன்னியானை சேர்ந்த சுமார் 150 குடும் பங்களை கொண்ட தலித் காலனி ஒன்று உள்ளது. இப்பகுதியில் கடந்த அக்டோபர் 30-ந் தேதி தேவர் ஜெயந்தி நாளன்று பெரிய கலவரம் நடந் துள்ளது. இக்கலவரத்திற்கு மூலப் பிரச்சனையாக இருந்தது பொது கோவிலாக உள்ள காளியம்மன் கோவில்தான். இக்கோவிலும் இன்னும் பிற அரசாங்க வசதிகளாக அரசு பள்ளிக்கூடம், பஞ் சாயத்து யூனியன் அலுவலகம், நாகமேடை, பால்வாடி போன்ற வசதிகள் மொத்தமும் உயர் ஜாதிக் காரர்களின் பகுதியில் அமைந்துள்ளது.

தலித் குடியிருப்புகளையும் உயர் ஜாதிக் காரர்களின் குடியிருப்புகளையும் பிரிப்பது 20 அடி அகலமான பொதுத்தெரு, தலித் காலனியின் பின்பகுதி மலையால் சூழப்பட்டுள்ளதால் இவர்களின் போக்குவரத்து உயர் ஜாதிக் காரர்கள் குழு அமைந்துள்ள பொதுத் தெரு மட்டும்தான். கலவரம் என்றால் மலை மீது ஏரி தன் உயிரை காப்பாற்றிக் கொள்ள உதவும் அவ்வளவுதான். தன் சொந்தங்களை நாடி பன்னியானை விட்டு தப்பிச் செல்ல முடியாத இவர்களுக்கு மனிதாபிமான உதவிகளை யாரா வது செய்வதாக இருந்தால் இந்த ஒரே பாதை யில்தான் செல்ல வேண்டும். இவர்களின் காலனி யில் கடை ஏதும் இல்லை. (கலவரத்திற்கு பின்பு தற்காலிக கடை ஒன்று தலித் ஒருவரது வீட்டில் திறக்கப்பட்டுள்ளது).

உயர் ஜாதிக் காரர்களின் கடைகளில்தான் தலித்கள் பொருட்களை வாங்கியாக வேண்டும். தலித் ஆண்களும், பெண்களும் விவசாய கூலிக்காரர்களாக உயர் ஜாதிக் காரர்களின் நிலங்களில் வேலை செய்து பிழைக்கிறார்கள். சில ஆண்கள் ஷேர் ஆட்டோ வைத்துள்ளனர். ஆனாலும் இவர்கள் பன்னியானிலும் அதை யொட்டியுள்ள மக்கள் போக்குவரத்து அதிகம் கொண்ட செக்காநூரணியிலும் வாடகைக்கு வண்டி ஓட்டக்கூடாது என்பது இங்கு எழுதப் படாத விதியாக உள்ளதை நாம் கவனித்தோம். இதனால் இவர்கள் மதுரை நகர் பகுதிக்கு வந்து தங்கள் வருமானத்தை ஈட்டிவிட்டு இரவில் வீடு திரும்புகின்றனர்.



பல வருடங்களாக பொதுக்கோவிலில் நடக்கும் விசேஷங்களில் தலித் மக்கள் கலந்து கொள்வது வழக்கம். சாமியாடுவது முளைப்பாரி எடுப்பது போன்ற சடங்குகளை ஆண்டாண்டு காலமாக வழக்கமாக செய்து வந்த நிலையில் இந்த ஆண்டு கடந்த அக்டோபர் 29ந் தேதி தலித்கள் முளைப்பாரி எடுக்கக் கூடாது என்று உயர் ஜாதிக் காரர்களால் நிர்ப்பந்திக்கப்பட்டனர். இத்தோடு பட்டு சேலை உடுத்தியும், நகைகள் அணிந்தும் வரக்கூடாது என்றும் கூறியுள்ளனர்.

இதில் ஏற்பட்ட தகராறில் போலீஸ் தலையிட

"அமைதி கமிட்டி" ஒன்று அமைக்கப்பட்டு இரவில் பேச்சுவார்த்தை நடந்தது. இரு தரப்பும் அவரவர் நிலையில் உருதிக் காட்டியதால் பிரச்சனையை தவிர்க்க விழாவை நிறுத்தி விடுவ தோடு ஒலி பெருக்கியை இரு தரப்பும்பயன் படுத்த தடை செய்து முடிவெடுக்கப்பட்டது.

அடுத்த நாள் அக்டோபர் 30-ம் தேதி தேவர் ஜெயந்தி விழா, இவ்விழா மதுரை முழுவதும் விமரிசையாக கொண்டாடப்படுவது வழக்கம். (அன்றைய நாட்களில் அசம்பாவிதத்தை தவிர்க்க பஜாரில் உள்ள அனைத்து கடைகளும் அடைக் கப்பட்டு விடும்) அதேபோல் இப்பகுதியிலும் கொண்டாடப்படுவது வழக்கம். உயர்ஜாதியினர் சுமார் 150 பேர் கொண்ட கும்பல் மாலை 4,30 மணியளவில் தலித் காலனியைச் சுற்றி வளைத்து தாக்க தொடங்கினர். தலித்களுக்கு கடுமையான சேதாரம். இதையறிந்து செய்தி சேகரிக்க சென்ற எங்களை அன்புடன் வரவேற்று ஆர்வமாக பதிலளித்தனர் அம்மக்கள்.

தங்கள் மனபாரத்தை நம்பிக்கையுடன் உறவுகளிடம் பகிர்ந்துகொண்ட திருப்தியுடன் அவர்கள் எங்களோடு செய்திகளை பகிர்ந்து கொண்டனர். அவர்களின் முகத்திலேயே அவர் கள் அடைந்துள்ள வருத்தத்தை நாம் புரிந்து கொண்டோம். பெண்கள் கோபத்துடன் நம்மிடம் தெரிவித்த கருத்துக்கள் கவனத்தில் கொள்ளக் கூடியதாகும். சுமார் 150 அரிவாள், கத்தி, கம்பு மற்றும் கற்களுடன் எங்கள் காலனிக் குள் புகுந்து தாக்க தொடங்கினர்.

பெண்களாகிய நாங்கள் மட்டும் வீடுகளில் இருந்தோம். இத்திடீர் தாக்குதல் எங்களை நிலைகுலைய செய்தது. சில பெண்கள் தங்கள் குழந்தைகளை காப்பாற்றிக் கொண்டு மலை மீது ஏறி தப்பிக்க முயன்றனர். சில பெண்கள் குழந்தைகளை சந்து பொந்துகளில் நுழைத்து விட்டு ஒடி தப்பிக்க இடம் தேடத் தொடங்கினர். பறந்து வந்த கற்கள் பெண்களையும் குழந்தை களையும் காயப்படுத்தியது. இரு கைக் குழந்தை களின் மண்டை உடைந்து, கால்நடைகளும் தாக்கப்பட்டது. சாமியாடும் வயோதிக பெண்களும் தாக்கப்பட்டனர்.

அம்மக்கள் கூறும்போது, இச்சம்பவத்திற்கு ஒன்றரை மணிநேரத்திற்கு பின்பு காவல்துறை எங்கள் காலனி பகுதிக்கு வந்தது.

இதையறிந்த அக்கும்பல் காலனியை விட்டு சென்று விட்டார்கள். நாங்களும் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு மலையை விட்டு இறங்கி எங்கள் வீடுகளை கவனித்தோம். கடுமை யான சேதாரம், எங்கள் வீடுகள் எல்லாம் ஒட்டு வீடுகள், ஓடுகள் பெரும் கற்களால் உடைக்கப் பட்டு வானம் தெரிகிறது. வீட்டினுள் நொறுக் கப்பட்டுள்ளது. இத்தோடு 9 ஆடுகளும், 3 பைக்குகளும், 1 சுமோ வண்டியும் தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டு சிதைக்கப்பட்டுள்ளது.

வண்டிகள் அனைத்தும் உடனடியாக எடுத்து ஓட்டும் நிலையில் இல்லை. இதையெல்லாம் பாதுகாப்பு பணிக்காக வந்திருந்த காவல் துறை டி.எஸ்.பி. ராமகிருஷ்ணனிடம் முறையிட் டோம். 60 வயது மதித்தக்க ஒருவர் முறையிட "உன்னால்தான் இந்த பிரச்சனை" என ஓங்கி அறைந்தார் டி.எஸ்.பி. நொறுங்கிப்போயுள்ள எங்கள் மீது மீண்டும் மீண்டும் வன்முறை பாதிப்பு.

இந்நிலையில் ஆண்களும் பெண்களுமாக எங்களை தாக்கியவர்களை பற்றி உங்களிடம் சொன்னால் நீங்களும் அடிக்கிறீர்களா என அவரிடமே புலம்பி பதறினோம். குற்றவாளி களை கைது செய்ய வேண்டும் என்று வலியுறுத் தினோம். போலீஸ், மனு ஒன்றை எழுதி கேட்க நாங்கள் யாரெல்லாம் தாக்குதலில் ஈடுபட்டார் கள் என்பதை பெயருடன் மனு தரப்பட்டதற்கு போலீஸ் வாங்க மறுத்தது. இதனை தட்டிக் கேட்க முனைந்த ஒரு பெண்ணிடம் "இதை யெல்லாம் பேசுற வயசா உனக்கு" என்று போலீஸ் மிரட்டும் தொனியில் பேச ஓட்டு வாங்கும்போது 18 வயசு தான் தகுதி என்று சொல்றீங்க இத கேட்க அந்த வயசு பத்தாதா என 30 வயது மதிக்கத்தக்க அந்த பெண் கேட்டதும் போலீஸ் அமைதியானது.

ஏதாவது காரணத்தை கண்டுபிடித்து இப்படி எழுதாதே, அப்படி எழுது என்று கூறி கிட்டத் தட்ட 30 மனுக்கள் எழுதியும் திருப்தி பெறாத போலீஸ், தங்கள் மாதிரி மனுவை எழுதிக் கொடுக்க செய்து வாங்கி சென்றார்கள். சொல்லப் போனால் கலவரத்தைவிட எங்களுக்கு காவல் துறையால் நடந்த இந்த அநியாயம்தான் அதிகம்.

நான்கு பேரை கைது செய்துள்ளதாக போலீஸ் கூறுகிறது. கணக்கு காட்டவே இந்த

கைது நடவடிக்கை. ஆனால் எங்களை யார் அடித்தார்களோ, யார் எங்கள் பொருட்களை சேதப்படுத்தினார்களோ, அவர்கள் எங்களைப் பார்த்து ஏளனமாக சிரித்துக்கொண்டு சுதந்திர மாக சுற்றி திரிந்துகொண்டிருக்கிறார்கள். பின்பு கலெக்டர் வந்து பார்வையிட்டு சென்றார். மீண் டும் நாங்கள் அடக்குமுறைக்கு உள்ளானோம்.

அடுத்த நாள் அக்டோபர் 31-ந் தேதி முதல் எங்கள் ஊருக்கு பஸ் வரவில்லை. எங்கள் சொந்த ஆட்டோக்கள் எல்லாம் சேதப்படுத்தப்பட்ட நிலையில் பாதுகாப்பான போக்குவரத்திற்கும் வழியில்லை. உயர் ஜாதியினரோ "பறைய நாயே, உன்னை ஆட்டோவில் ஏற்றமாட்டோம்டா" என்கிறார்கள். எங்கள் காலனி எதிரில் இருந்த உயர் ஜாதியினர் கடை இரண்டும் மூடப்பட்டு விட்டது. எந்த உணவு பொருளும் எங்களுக்கு வரவில்லை. குழந்தைகளுக்கு பால் கூட இல்லாமல் அவதிப்பட்டோம், உதவுவார் யாரும் இல்லை.

நவம்பர் 2-ந் தேதியன்று பாய்கள் (முஸ்லிம்கள்) வந்தார்கள். எங்களுக்கு தேவை யான பாலும், 100 கிலோ அரிசியும், பல சரக்கு சாமான்களும், பிஸ்கட்களும் கொண்டு வந்து கொடுத்தார்கள். (மதுரையில் ஐ.பி.சி. என்றழைக் கப்படும் அமைதிக்கான இஸ்லாமிய மையத்தின் நிர்வாகிகள் அம்மக்களுக்கான உதவிகளை செய்ததை இங்கு தலித் மக்கள் குறிப்பிட்டனர்)

இதைத்தான் நாங்கள் அச்சூழலில் பயன் படுத்தி உயிர் வாழ்ந்தோம். நாங்கள் அனைவரும் உயிருக்கு அஞ்சி காலனி நுழைவுவாயிலில் உள்ள மைதானத்தில் கூட்டமாக சமைத்து சாப் பிட்டோம், வீடுகளுக்கு செல்வது பாதுகாப் பில்லை என்று கருதினோம்.

இந்த அரசாங்கம் எங்களுக்கு எதையும் செய்யவில்லை. இப்பிரச்சனை இன்று, நேற்றல்ல, 30 வருடமாக உள்ளது. இங்கே நாடக மேடை இருக்கிறது. இது பொதுவானது. ஆனால் அதற்கு அவர்கள் தலைவர் பெயரை வைத்துக் கொண்டார்கள். எங்கள் தலைவர் பெயரை எழுத சொன்னதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. இதுபோன்ற பிரச்சனைகளால்தான். எங்கள் குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்கு போக முடிய வில்லை பயமாக இருக்கிறது.

நாங்கள் வேலைக்கு போக முடியவில்லை. எங்கள் பெரியவர்கள் பிரம்மை பிடித்தவர்கள் போல் இருக்கிறார்கள். எங்கள் வீடுகள் சரி செய்து தரப்பட வேண்டும், எங்கள் வாகனங் களை சரி செய்து தர வேண்டும், எங்களை தாக்கியவர்களை கைது செய்ய வேண்டும், நாங்கள் அனைவரும் அவர்கள் தோட்டத்தில் தான் வேலை செய்கிறோம். அதனால் இனி அங்கே செல்ல முடியாது. எங்களுக்கு ஏதாவது வேலை தர வேண்டும், எங்களுக்கு பாதுகாப்பு தொடர்ந்து தர வேண்டும் என்று சொல்லி முடித்தார்கள்.

ஊர் மக்கள் அனைவரும் ஒரே மாதிரியான செய்திகளையே சொன்னார்கள். கலவரத்திற்கு முக்கிய காரணம் என்று இவர்கள் சுட்டிக்காட்டும் இருவர் காலனிக்கு எதிர்புறத்தில் கடை நடத்தும் வயகாட்டுசாமி (37 வயது), கதிரேசன் (45 வயது) ஆகியோரைத்தான். ஆனால் இவர்கள் இதுவரை கைது செய்யப்படவில்லை. கலெக்டர் புதன்கிழமை (நவம்பர்-1) மாலை 6-30 மணிக்கு வந்து பார்த்தபோது இவர்களின் கோரிக்கையை வருகிற புதன்கிழமைக்குள் (நவம்பர்-8) செய்து தருவதாக சொல்லி சென்ற தகவலை நம்மிடம் பகிர்ந்து கொண்டனர்.

விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் இக்கிராமத்திற்கு வருவதாக இருந்ததாகவும் அதை தடுத்து காவல் துறையினர் எதிர் தரப்பு தலைவரும் வருவார்கள், பிரச்சனை சிக்கலாகும், தலித்களின் கோரிக்கையை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்று கூறி யாரையும் அனுமதிக்கவில்லை என்பதையும் தெரிவித்தனர்.

எங்கள் நிலையை எங்கள் தலைவர்களிடம் கூட சொல்லி அழ முடியாத நாதியற்ற சமூகமாக இருக்கிறோம் என்று அழுகையைக் கட்டுப்படுத் திக் கொண்டே கூறியது நம்மை கவலைக் கொள்ள செய்தது.

முஸ்லிம்களின் உதவியும் நமது பங்களிப்பும் அவர்களை நிம்மதிப்படுத்தியிருப்பதை நாம் உணர்ந்தோம்.

பின்பு அம்பேத்கர், பெரியார் ஆகியோர் அவர்களுக்கு கூறியிருந்த தீர்வை விடுதலையை நியாபகப்படுத்தி விட்டு கிளம்பினோம். ●

# மீனாட்சிபுரம் தலித்கள் மத மாற்றத்திற்கு பின் நல்ல நிலையில் இருக்கின்றார்கள்



## அவர்கள் இன இழிவிலிருந்து விடைபெற்றுவிட்டார்கள்

**- தொல்.திருமாவளவன்**

1981-ல் திருநெல்வேலி மாவட்டம், மீனாட்சிபுரத்தில் ஜாதிய அடக்கு முறையால் இஸ்லாத்தை தழுவிய சுமார் 150 தலித் குடும்பங்கள் சமூக பொருளாதார ரீதியில் நல்ல நிலையில் இருக்கின்றார்கள் என்கிறார் வி.சி.க தலைவர் தொல். திருமாவளவன்.

மனோன்மணியன் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி அறிஞராக இந்த குடும்பங்களின் வாழ்க்கை நிலைப் பற்றிய ஆய்வறிக்கையை சமர்ப்பிக்கினறபோது இவ்வாறு அவர் கூறினார்.

இங்கு வெள்ளிக்கிழமை மதுரை, காமராஜ் பல்கலைக் கழகத்தில் "குற்றவியல் நீதி அமைப்பு மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் பற்றியான ஆய்வு" என்ற கருத்தரங்கில் தனது ஆராய்ச்சி கண்டு பிடிப்புக்களை பகிர்ந்து கொண்டிருந்தார். அப்போது அவர் இன இழிவிலிருந்தும் ஏற்றத் தாழ்வுகளை திணிக்கும் ஜாதிய அமைப்பு முறை யிலிருந்தும் குடும்பங்கள் வெளியேறிடவேண்டி யுள்ளதை தான் கண்டறிந்ததாக கூறினார்.

'ஜாதிய வெறுப்புணர்வுகள் அவர்கள் மீது பாய்வதற்கு பதில் - மதம் மாறிய குடும்பங்களின் ஆண்கள் “பாய்” என்றுதான் இன்று பிறரால் அவர்கள் அழைக்கப்படுகிறார்கள்'. இது அவர்களுக்கு கண்ணியத்தை சமத்துவத்தையும் பெற்றுவிட்ட உணர்வை தருகிறது என்றார்.

மேலும் அவர் கூறுகையில் அந்த குடும்பங்கள் பொருளாதார ரீதியாகவும் கணிசமான முன் னேற்றம் அடைந்திருக்கின்றார்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் நிலமற்றவர்களாக இருக் கின்ற போதிலும் இப்போது அவர்கள் பெட்டிக் கடை வைப்பதற்கும், டீ கடை வைப்பதற்கும் முன் வந்திருக்கின்றார்கள். இதற்கு காரணம் அவர்கள் தங்களின் புது அடையாளத்தின் வழி பெற்றுக்கொண்ட சமூக அங்கீகாரம் தான் என்றார்.

தலீத்கள் தனது ஜாதிய அடையாளத்தால் சந்தித்து வந்த கொடுமைகளிலிருந்தும் இஸ்லாத்தை ஏற்ற பின்பும் விடுதலை பெற முடியவில்லை என்ற குற்றச்சாட்டுகள் எழுந்து வருகிறது. அவை முற்றிலும் உண்மைக்குப் புறம்பானவை என்றார்.

சிறிய அளவில் அங்கே ஏற்றத் தாழ்வுகள் இருக்கலாம் என்பதை ஏற்றுக் கொள்கிறேன். சில குடும்பங்களில் உறவினர்களில் ஒரு பிரி வினர் மதம் மாறியிருப்பார்கள். மற்றவர்கள் மாறி யிருக்க மாட்டார்கள். ஆகையால் இதுபோன்ற குடும்பங்கள் சில ஏற்றத் தாழ்வுகளை சந்திக் கலாம். மதம் மாறிய குடும்பங்களின் இரண்டாம் தலைமுறையினர் “பிறப்பால் முஸ்லிம்களாகவும்



நடத்தப்படுகிறார்கள் என்பதை கண்டறிந்துள்ள தாகவும் அதில் இஸ்லாத்தை ஏற்றதற்காக எந்த குடும்பத்திற்கும் எந்தவொரு வருத்தமுமில்லை என்பதையும் தெரிவித்தார். பொதுவாக புதிய மதத்தை தழுவுகின்ற மக்களோடு ஒப்பிட்டு பார்க்கையில் மதம் மாறி குடும்பங்கள் இஸ்லாத்தை உறுதியாக பின்பற்றுபவர்களாகத் தான் கண்டறிந்ததாக அவர் கூறினார்.

மேலும் இவருடைய ஆராய்ச்சி இந்த மதமாற்றங்கள் வெளிநாட்டு நிதிகளை கொண்ட நடத்தப்பட்டவை. சில மதப்பிரிவுகள் இதற்கு பின்னால் இருக்கின்றது என்பது போன்ற குற்றச் சாட்டுகளும் எல்லாம் அடிப்படையற்றவை என்பதை எடுத்துக்காட்டுவதாகவும் குறிப்பிட் டார்.

இந்த மதமாற்றங்களுக்கு முற்றிலும் காரணம் அவர்கள் எல்லா தளங்களிலும் சந்தித்த ஜாதிய ஏற்றத் தாழ்வுகளும் அடக்கு முறைகளும் தான். இந்த சூழ்நிலைகளிலிருந்து அவர்களை காப்பாற்றுவதில் அரசு தோல்வியுற்றதும் கண்டும் காணாதது போல் இருந்ததும் முக்கியக் காரணம் என்கிறார். மறுபுறம் இந்த மத மாற்றங்களுக்கு பிறகு ஆரிய சமாஜ் போன்ற இயக்கங்கள் ஒரு சில குடும்பங்களை இந்து மதத்திற்கு திருப்புவதில் முக்கிய பாத்திரம் வகித்திருக்கின்றார்கள் என்றும் தெரிவித்தார்.

மத மாற்றங்கள் ஜாதிய ஏற்றத் தாழ்வு களை வீழ்த்துவதற்கான திறனான வியூகமாக இருக்க முடியுமா என்று கேள்வி எழுப்பிய போது அது அவர்கள் மாறுகின்ற சமூக மற்றும் அரசியல் சூழ்நிலைகளை வைத்து ஆராயப்பட வேண்டியதும் எந்த மதத்தை அவர்கள் தேர்வு செய்கிறார்கள் என்பதை பொருந்தும் இருக் கின்றது. இருப்பினும் மத மாற்றங்களால் சமுதாயம் சிதறுவது போன்ற சில சிக்கல்கள் இருக்கின்றன.

**ஆனால் மீனாட்சிபுரத்தின் நிலைமையை பொருத்த மட்டில் அவர்கள் பெற்ற பலன்கள் இந்த சிக்கல்களையெல்லாம் மிகைத்து விட்டது என்றார் தொல். திருமாவளவன்.**

“மதமும் மத மாற்றமும்“ மற்றும் “மீனாட்சி புரம் மத மாற்றத்தில் பாதிக்கப்பட்டவர்கள் பற்றியான பார்வை” என்ற இரு தலைப்புகளில் கருத்துக்களை வழங்கினார்.

ஒருநாள் நடந்த தேசிய அளவிலான இந்த கருத்தரங்கத்தை மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் பி.பி.செல்லதுரை தொடங்கி வைத்தார். அப்போது அவர் ஆழமான ஆய்வின் முக்கியத்துவத்தை குறித்தும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை உறுதி செய்வதற்கு பாதிக்கப்பட்டவர்கள் பற்றியான ஆய்வில் களத்தில் சரியான புரிதலை பற்றியும் வலியுறுத்தினார்கள். ●

(ஆதாரம் The Hindu Sep-2, 2017 Madurai)
தமிழில் மு. இம்தியாஸ் அஹமது.


பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

**கொடிய வட்டியில் இருந்து மீள! தாங்கள் வங்கியில் அடகு வைத்திருக்கும் நகைகளை ஏலத்திற்கு செல்லாமல் மீட்டு நல்ல விலைக்கு விற்றுத் தரப்படும்.**

தொடர்புக்கு

**90955 40678**

# பி.ஜே.பி-யின் வெற்று தேர்தல் அறிக்கைகள்



பாரதீய ஜனதா வெற்றிபெற்றால் பசுக்களைபாதுகாப்பதற்காக மேய்ச்சல்நிலங்களை உருவாக்குவோம். அதற்கு அரசின் உதவி தொகைகளையும் பெற்று தருவோம். உலகத்தரம் கொண்ட பசு ஆராய்ச்சி மையத்தையும் பால் புரட்சியையும் மாநிலத்தில் ஏற்படுத்துவோம். மனிதர்களை கொன்றால் என்ன தண்டனை கிடைக்குமோ அதே தண்டனை தான் பசுக்களை கொல்பவர்களுக்கும். இவையனைத்தும் பாரதீய ஜனதா கட்சியின் ஹரியானா மாநில தலைவர் ராம் விலாஸ் ஷர்மா 2014 சட்டசபை தேர்தலை முன்னிட்டு அக்கட்சியின் தேர்தல் அறிக்கையை வெளியிடும் போது கொடுத்த வாக்குறுதி. முதல் முறையாக பெரும்பான்மை இடங்களில் வெற்றிபெற்று ஆட்சியை கைப்பற்றியது பாரதீய ஜனதா.

மத்தியிலும் மாநிலத்திலும் பாரதீய ஜனதா அரசு வந்ததில் அம்மாநில மக்கள் ஆரம்பத்தில் சந்தோஷ மிகுதியில் திளைத்தனர். பசுக்களின் மேல் இவர்கள் கொண்டுள்ள அக்கறைகளை நினைத்து இவர்களுக்கு வாக்களித்தனர். ஆனால் வாக்களித்தது போல் பசுக்களை பாதுகாப்பதற்காக களத்தில் இவர்கள் ஒன்றும் பெரிதாக செய்திடவில்லை.

கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள், மேய்ச்சல் நிலங்களை உருவாக்கி பசுக்களை பாதுகாத்திடுங்கள் என்று அம்மாநிலத்தை சார்ந்த கோபால் தாஸ் என்பவர் தொடர்ந்து போராட்டங்களை நடத்தி வந்துள்ளார். பாரதீய ஜனதா கட்சிக்கு எதிராக ஜூன் 2 ஆம் தேதியிலிருந்து உண்ணாவிரதத்தை மேற்கொண்ட அவரை காவல்துறை கைது செய்வதும் மருத்துவமனையில் அனுமதிப்பதும் அடிக்கடி நடந்துள்ளது.

கால்நடை உரிமையாளர்களால் கைவிடப்பட்டு தெருக்களில் சுற்றி திரிந்து சாலைகளில் அடிப்பட்டு இறந்திடும் விலங்குகளின் பிரச்னைகளை அரசுகளின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என்று முடிவெடுத்தார் கோபால் தாஸ். பாரதீய ஜனதா கட்சியின் தேசிய தலைவர் அமித் ஷா தலைமையில் ரோடக் (ஹரியானா) என்ற இடத்தில் நடைபெறவிருந்த கூட்டத்திற்கு ஆகஸ்ட் 3 அன்று தனது ஆதரவாளர்களுடன் நுழைந்தார் கோபால் தாஸ். அடிபட்டு இறந்து போன காளை மாட்டின் உடலை அங்கே போட்டார். பிரச்னையை எல்லோரின் கவனத்திற்கு கொண்டு சென்றிடலாம் என நினைத்தார். ஆனால் காவல்துறை அவரை கைது செய்தது.

புது டெல்லியில் உள்ள அனைத்திந்திய மருத்துவ அறிவியல் கழகத்தில் அனுமதிக்கபட்டிருந்த அவரை சந்தித்த Frontline பத்திரிக்கையாளர்களிடம் இப்படி கூறினார்.

“மேய்ச்சல் நிலங்களை உருவாக்குவதனால் மட்டுமே பசுக்களை பாதுகாத்திட இயலும். சாலை விபத்துகளில் அவைகள் இறக்கின்றன. இறந்த காளை மாட்டை காண்பித்து இந்நிலைமையை அமித் ஷாவிடம் சொல்லிடவே நான் முயன்றேன். நான் காளை மாட்டை விஷம் வைத்து கொன்று விட்டதாக என் மேல் வழக்கு பதிவு செய்துவிட்டது மாநில அரசு. சாலை விபத்தில் தான் மாடு இறந்ததாக பிரேத பரிசோதனை அறிக்கை கூறுகிறது.”

பசு பாதுகாப்பை அக்கறையுடன் எடுத்து செயல்படுத்தாத பாரதீய ஜனதா கட்சிக்கு

எதிராக இவர் வைக்கும் கோரிக்கை என்ன வென்றால் அவர்களை பொறுத்தவரை பசு பாது காப்பு என்பது தேர்தல் நேரங்களில் மட்டுமே பயன்படுத்தப்படும் பிரச்சனை. புல்வெளிகளாக மாற்றக் கூடிய உபயோகமற்ற நிலங்களை ஏலத்திற்கு விட்டு ரூபாய் 2,378 கோடி வரவாக பெற்றுள்ளது மாநில அரசு. ஆனால் பசு பதுகாப்பிற்காக மூன்று கோடியை மட்டும் ஒதுக்கியுள்ளது என்கிறார் கோபால் தாஸ்.

**நிர்வாகத் திறமையின்மை:**

பயன் தராத, பால் தராத பசுக்கள் இவற்றின் விற்பனையின் மீது விதிக்கப்பட்ட தடைகள், தீவனங்களையும் தங்குமிடங்களையும் கால்நடைகளுக்கு அளிக்க முடியாமல் தவிக்கும் விவசாயிகளின் இயலாமை இவற்றின் விளைவாக சாலைகளில் நடமாடும் பசுக்களின் எண்ணிக்கை உயரத் தொடங்கியது. விவசாய தேவைகளுக்கு எந்திரங்களை பயன்படுத்த தொடங்கியதும் காளை மாடுகளை கவனிப் பாரற்று விட காரணமாக அமைந்தது. பயன் தராத பசுக்களை வைத்து பராமரிக்க முடியாத விவசாயிகள் அவற்றை வெளியே போக விட்டு விடுகின்றனர்.

பசு குண்டர்களுக்கு பயந்து இனபெருக் கதிற்காக பசுக்களை வாங்குபவர்களும் குறைந் துள்ளனர். கடந்த ஏப்பிரலில் பெஹ்லு கானை பசு குண்டர்கள் அடித்து கொன்றது இன்னும் மக்கள் மனதை விட்டு மாறவில்லை. இந்நிலை யில் அக்டோபர் 13 அன்று, பரிதாபாத் மாவட் டத்தில் ஆட்டோ ரிக்சாவில் பசு மாட்டு இறைச் சியை கொண்டு சென்றார்கள் என்று கூறி ஐந்து முஸ்லிம்களை பசு குண்டர்கள் தாக்கியுள்ளனர். பின்னர் அது எருமை மாட்டு கறி என்று தெரிய வந்தது. ஒரு சட்டத்தை கொண்டு வருவதற்கு முன் அதனால் ஏற்படும் விளைவுகளை பற்றி ஆராயாமல் முடிவெடுத்தது இவர்களின் நிர்வாகத் திறமையின்மையே காட்டுகிறது.

**சதி, சூழ்ச்சி:**

முஸ்லிம்களே மாட்டு இறைச்சியை அதிகம் சாப்பிடுகின்றனர், அவர்களே அதிகமாக கால்நடை சார்ந்த தொழில்களில் ஈடுபடுகின் றனர். எனவே அரசின் தடைகள் அவர்களையே பாதிக்கும் என்று நம்பப்பட்டது. தடைகளை கொண்டு வருவதன் மூலம் அவர்களின் உணவு பழக்கம் பாதிக்கும், பொருளாதார நிலைகள் சீர்குலையும். கால்நடை வியாபாரத்தை நம்பி வாழும் முஸ்லிம்கள் வேலையை இழப்பார்கள். ஆனால் NSSO (National Sample Survey Office)

நடத்திய கால்நடை உரிமையாளர்கள் பற்றிய ஆய்வு இந்த தடை நேரடியாக முஸ்லிம் களை மட்டுமே பாதிக்கும் என்று சொல்லிட வில்லை.

110,000 நகர்புற மற்றும் கிராமப்புற வீடுகளில் 2013 ஆம் ஆண்டில் இந்தியாவின் கடன் மற்றும் முதலீடு கணக்கெடுப்பை மேற்கொண்டது NSSO.

இதன்படி கால்நடைகளை சொந்தமாக வைத்திருப்பவர்களில் சீக்கியர்கள் முதலிடத்தில் வருகின்றனர் அதாவது 40 சதவிகித சீக்கியர்கள் சொந்தமாக கால்நடைகளை வைத்துள்ளனர். இதற்கு அடுத்தபடியாக ஹிந்துக்களில் 32 சதவிகிதத்தினர் சொந்தமாக கால்நடைகளை வைத்துள்ளனர். அடுத்ததாக முஸ்லிம்களில் 18 சதவிகிதம் பேர். மாநில வாரியாக பார்த்தால் கேரளாவில் 7 சதவிகித ஹிந்துக்களும் 5 சதவிகித முஸ்லிம்களும் சொந்தமாக கால்நடைகளை வைத்துள்ளனர்.

விவசாய பூமியான உத்திர பிரதேசத்தில், 52 சதவிகத ஹிந்துக்களும் 21 சதவிகத முஸ்லிம்களும், ஜம்மு கஷ்மீரில் 57 சதவிகித முஸ்லிம்களும் 37 சதவிகித ஹிந்துக்களும் கால்நடைகளை சொந்தமாக வைத்துள்ளனர். மதத்தை அடிப்படையாக வைத்து கால்நடை களை வைத்திருப்பவர்களின் எண்ணிக்கை மாறு படவில்லை. மாறாக இடங்களை பொறுத்தே அவை மாறுபடுகிறது என்பதை நாம் மேற் சொன்ன தகவலில் இருந்து புரிந்து கொள்ளலாம்.

கால்நடைகளை வைத்திருப்பவர்கள் 30 சதவிகிதம் பேர் என்றால் அதில் கறவை இனங்கள் அல்லாத மாடுகளை வைத்திருப்பவர்கள் 15 சதவிகிதம் பேர். கறவை இனங்கள் அல்லாத மாடுகள் இறுதியாக இறைச்சி கூடங்களுக்கே செல்கின்றன. உணவிற்கும், வருவாயிற்கும் இந்த இறைச்சி கூடங்களை நடத்துவது பெரும்பாலும் முஸ்லிம்களே. பாரதீய ஜனதா கட்சியினர் இங்கே தான் தங்களின் குறுக்கு புத்தியை காட்டியுள்ளனர்.

தடைகளில் உள்ள குறைகள்: மே 23 அன்று இறைச்சிக்காக கால்நடைகளை விற்பனை

செய்யக்கூடாதென்று சுற்றுசூழல் மற்றும் வனங்கள் அமைச்சகம் தடை அறிக்கையை வெளியிட்டது. மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தில் இந்த அறிக்கைக்கு முதலில் தடை வாங்கப் பட்டது. ஆகஸ்டில் இந்த தடையை உச்ச நீதி மன்றமும் நீட்டித்தது. சுற்றுசூழல் அமைச்சகத் தின் அமைச்சராக இருந்த அனில் தேவ் இறந்த பின்பு பொறுப்பேற்ற ஹர்ஷ் வர்தன் ஆரம்பத் தில் இந்த அறிக்கை திரும்ப பெறப்படும் என்றார். அதன் பின் என்ன நடந்ததோ தெரிய வில்லை அவர் அறிக்கை திரும்ப பெறுவது குறித்து வாய் திறக்கவில்லை.

இந்த அறிக்கைக்கு தடையாக உள்ள விதிகள் தற்போது ஆய்வில் உள்ளதாகவும் அதன் பின் இது பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்படும் என்று உச்ச நீதிமன்றத்தில் வாதாடிய அரசு தரப்பு வக்கீல் P.S. நரசிம்ஹா கூறினார்.

**அறிக்கையில் காணப்படும் குறைகள்:**

விற்பனை செய்யபடும் கால்நடைகள் இறை சிக்காக பயன்படுத்தப்போவதில்லை, வேறு காரணங்களுக்குத்தான் பயன்படுத்த போகி றார்கள் என்று விற்பனை செய்பவருக்கு எப்படி தெரியும்?

கால்நடைகளை பராமரிக்க ஒருவரிடம் தேவையான பணம் இல்லாத போது அவர் அவற்றை விற்பதில் என்ன தவறு இருக்க முடியும்? பட்டினியால் இறந்து மடிவதை விட கால்நடைகளை விற்றுவிடுவது சிறந்ததல்லவா?

சட்டிஸ்கர் மாநிலத்தில் பாரதீய ஜனதா கட்சியை சார்ந்த நிர்வாகியின் மாட்டுத் தொழுவத்தில் இப்படி பட்டினி சாவால் இறந்த கால்நடைகள் இந்த உண்மையை வெளிச்சம் போட்டு காட்டியது.

விவசாயிகள் தங்கள் கால்நடைகளை பாது காப்பதற்கு அரசு போதுமான அளவு முயற்சி எடுக்காததால் கறவை மாடுகள் அல்லாத இனங்களை பாதுகாக்கும் மொத்த சுமையும் பசு காப்பகங்களின் மீது விழுந்தது. 2014 -இல் பாரதீய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்த பின்பு மத்திய அரசின் கால்நடை பராமரிப்பு, பால் மற்றும் மீன் வளத்துறை National Gokul Mission என்ற திட்டத்தை அறிவித்தது. பசு காப்பகங் களுக்கு பணத்தை செலவிடுவதே இதன் நோக்கம். அதே நேரத்தில் தனிப்பட்ட விவசாயிகளுக்கு எந்த உதவியும் வழங்கிடவில்லை.

இந்தியாவின் மக்கள் தொகையில் 70 சதவிகிதம் பேர் கிராமப்புறங்களிலே வாழ்கின்ற னர். கால்நடை வளர்ப்பே அவர்களின் மரபுவழித் தொழில். வேளாண்மை பொருளாதாரத்தோடு மிகவும் சம்பந்தப்பட்டது இத்தொழில்.

இந்தியாவில் 199 மில்லியன் கால்நடைகள் உள்ளன. உலகத்தின் மொத்த கால்நடை தொகையில் இவை 14.5 சதவிகிதம். இவற்றில் 166 மில்லியன் கால்நடைகள் நாட்டு இனங்கள் வகையை சார்ந்தது.

கொண்டுவரப்பட்ட தடைகள் மட்டும் தீவிர மாக அமல்படுத்தப்பட்டால் 199 மில்லியன்




கால்நடைகளை பராமரிப்பது பாரதூரமான பணி. லக்னோவில் அமைந்துள்ள கண்ஹா உப்வான் என்ற காப்பகத்தின் கணக்கின்படி ஒரு மாதத்திற்கு ஒரு பசுவின் உணவு தேவைக்கு மட்டும் ஆகும் செலவு ரூபாய் 1950. NSSO நடத்திய ஆய்வின் படி விவசாயியின் மாத வருமானம் ரூபாய் 6,426. எனவே பயன் தராத பசுக்களை யாரும் (விவசாயிகள், பால்பண்ணை துறை) சும்மா வைத்து தீவனம் போட மாட் டார்கள். அது அவர்களின் மடியில் கையை வைப்பது போன்றது.

பொருளாதார பாதிப்புகள்: அதித்யானத் அரசு கசாப்பு கடைகளை மூட உத்தரவு விட்ட பின்பு எருமை மாட்டு கறிகளை ஏற்றுமதி செய்வதும் கடந்த ஆண்டை ஒப்பிடும் போது குறைந்துள்ளது. தடையின் காரணமாக இந்தியா தன்னுடைய தோல் தேவைகளுக்கு இனிமேல் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யும் நிலைமை உண்டாகும். இந்தியா தோல் தொழிற் சாலைகளை பின்னுக்கு தள்ளி விட்டு அமெரிக்

காவின் தோல் தொழிற்சாலைகள் முன்னேறும் என்று ஏற்கனேவே கல்கத்தா தோல் பதனிடுவோர் சங்கம் தன்னுடைய அச்சத்தை வெளிபடுத்தியுள்ளது.

**சூழ்நிலையியல் பாதிப்புகள்:**

சுதிர் குமார் பன்வர், லக்னோ பல்கலைகழகத்தின் விலங்கியல் பிரிவின் பேராசிரியர் Frontline பத்திரிக்கைக்கு அளித்த பேட்டியில் இப்படிக் கூறினார்.

“கதர்நியாகத்தில் நடந்தது சூல்நிலையியலின் மீது தொடுக்கப்பட்ட தாக்குதலுக்கு ஓர் உதாரணம். இது மோசமான விளைவுகளை உண்டு பண்ண காத்திருக்கின்றது. ஆரம்பத்தில் காட்டில் வாழும் தாவர உண்ணிகளின் மேய்ச்சல் நிலங்களை தெருவில் விடப்பட்ட கால்நடைகள் ஆக்கிரமித்து விடுகின்றன. பின்பு அவை அவற்றின் வாழ்விடங்களையும் ஆக்கிரமித்து விடுவதால் அப்பகுதியில் வாழும் விலங்கினங்களின் எண்ணிக்கையிலும் ஒரு நிரந்தர பாதிப்பை உண்டாக்கி விடுகின்றன. இதனால் இதுவரை பாதுகாக்கப்பட்டு வந்த சூழ்நிலை மண்டலத்தை காப்பதிலும் பிரச்னை எழுந்துள்ளது. மேலும் கால்நடைகளின் நோய்கள் வன விலங்குகளிடம் தொற்றி விடுகின்றன.

”வனப் பகுதிகளில் கால்நடைகளின் ஆக்கிரமிப்பு என்பது உலக அளவில் கவனம் பெற்ற பிரச்னை. டன்சானிய, கென்யா மற்றும் பிற ஆப்ரிக்கா நாடுகளில் பல்வேறு வகை உயிரின இழப்புகளினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. *1956* - இல் டன்சானியவை சார்ந்த பேராசிரியர் கீ.பி. Pearsall ஓர் ஆய்வை நடத்தி இப்படிக் கூறினார்.

“வன விலங்குகளை விட இந்த கால்நடை மந்தைகள் மேய்ச்சல் நிலங்களில் பலத்த சேதத்தை ஏற்படுத்திவிடுகின்றன. இந்த மந்தைகளின் நடக்கும் பாணி வித்தியாசமானது. மண் அரிப்பு, நீர்படுகைகளின் சிதைவு, காடுகளை அழித்தல், வாழிடத் துண்டாக்கம் போன்ற பிரச்னை களை இவை அதிகமாக்கி விடும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். தன்சானியாவில் *60* ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட நிலைமை இன்று இந்தியாவிற்கு வரலாம்.” ●

ஆதாரம் - Frontline, November 10, 2017

அபூஹாசின்




# இந்தியாவின் வரலாற்று திரிபுவாதத்துக்கு எதிராக கலிபோர்னியாவில் தொடர்ந்து போராடிவரும் மதச்சார்பற்ற சக்திகள்

கலிபோர்னியா, நவ.18 கலிபோர்னியா மாகாணத்தின் பள்ளி குழந்தைகளுக்கான பாட புத்தகத்தில் தெற்காசியாவின் வர லாறு திரிபுவாதங்களுடன் இடம் பெற்றுள்ளது. அத்திரிபுவாதங்களை அமெரிக்காவில் பார்ப் பனர்கள் வெறித்தனமாக செய்து வருகின்றனர். அம்பேத்கரிய அமைப்புகள், சீக்கிய, முசுலீம்கள் என பல தரப்பினரும் இந்திய வரலாறு திரிபு வாதங்களுக்கு எதிராகப் போராடி வரு கின்றனர்.

தற்போதைய அந்த பாடத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி,

*1.* சிந்து சமவெளி நாகரிகம் 'சிந்து சரஸ்வதி' நாகரிகம் என்று பெயர் மாற்றி குறிப்பிடப் பட்டுள்ளது

*2.* ஆரிய படையெடுப்பு பற்றி குறிப்பிடப் படவில்லை. (பார்ப்பனர்கள் இந்தியாவின் பூர்வீகக் குடிகள் என்று நிரூபிக்க ஏதுவாக!)

*3.* ஜாதி/வர்ண அடிப்படைகள், ஒரு வரின் குணநலனின் அடிப்படையிலான பிரிவுகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது ஜாதி என்பது பிறப்பின் அடிப் படையிலானது என்பது மறைக்கப்பட் டுள்ளது.

மேற்கண்ட விடயம் தொடர்பாக நெடுங்கால மாக அமெரிக்க இந்து கூட் டமைப்புக்கு (Hindu American Federation) எதிராக அமெரிக்காவின் பல்வேறு அம் பேத்கரிய- அமைப்புகளின் கடும் அரசியல் போராட்டம் தொடர்ந்து வருகிறது.

**நீதிமன்றத்தை நாடும் நிலை**

அமெரிக்காவில் வசிக்கும் பெரும் பான்மை இந்தியர்கள் பார்ப்பனர்களாக வும், அவர்களது அடிவருடிகளாகவும் இருப்பதால் எண்ணிக்கை பெரும்பான்மை அடிப்படையில் அவர்களது கோரிக்கை ஏற்கப்பட்டுள்ளதாகவும், இது சிறுபான் மையினரின் கருத்துகள்/உரிமைகளை மதிக்காத மோசமான நிலை என்றும், பார்ப்பன ஆதிக்கத்துக்கு எதிரான சிறு பான்மையினரின் போராட்ட வரலாறுகள் மறைக்கப்பட்டுள்ள தாகவும், நியாயம் கோரி நீதிமன்றத்துக்கு விவகாரம் எடுத்துச் செல்லப்படும் என்றும் அம்பேத்கரிய அமைப்புகளை சார்ந்த தேன்மொழி சவுந்தர்ராஜன் கூறியுள்ளார்.

ஜாதி என்பது பிறப்பின் அடிப்படையி லானது என்பதை மறுப்பது போன்ற அயோக் கியத்தனமான விடயம் இந்த உலகில் எதுவும் இல்லை. இவ்வாறான அயோக்கியத்தனத்தை செய்து ஜாதி ஒருவரின் குணநலனின் அடிப்படை யிலானது என்று பார்ப்பனர்கள் நிறுவ முயல்வது ஒரே கல்லில் இரண்டு மாங் காய் அடிப்பது போன்றதாகும்.

அதாவது, ஒன்று, இதன் மூலம் பார்ப் பனர்கள் தங்களது உயரிய பண்புகள் மூலமே உயர்நிலையை எட்டியதாக அவர்கள் நிறுவு கின்றனர். அடுத்து, இந்து வர்ணத்தில் தாழ்ந்த நிலையில் உள்ளோர் 'தாழ்வாக ஆனதற்கான காரணம்' அவர்களேதான் என்று பாதிக்கப்பட்ட வர்கள் மீதே பழிபோட்டு விடுகின்றனர்.

வரலாற்றை அவர்களது விருப்பத்திற்கு ஏற்ப மாற்றி எழுதிக் கொள்வது ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக அவர்கள் செய்து வருவதுதான். ஆனால் இணையம் மற்றும் தொலைத் தொடர்பு வசதிகள் உள்ள இந்த காலத்தில் அவர்களுக்கு இனி கொஞ்சம் சிக்கல்தான்.

கலிபோர்னியா பாடத்திட்டங்களில் வரலாறு திரிபுகளைத் திணித்துள்ளதன் மூலமாக அவர்களுடைய இந்த வெற்றி தற்காலிகமானதே.

- *சமூக ஊடகங்களிலிருந்து....*

# NIA-வின் அராஜகம்

கடந்த 05-10-17 ம் தேதியில் மேட்டுப் பாளையத்தில் பெரிய பள்ளிவாசல் தெருவில் தன் வீட்டில் தனியாக இருந்த பெண்ணிடம் தேசிய புலனாய்வு துறை அமைப்பைச் சேர்ந்தவர்கள் எந்தவொரு அடிப்படை காரணங்களும் இன்றி அச்சுறுத் தும் விதமாக விசாரணை செய்து கொண்டி ருந்தனர்.

அதை அறிந்து நமது நிருபர் எதற்காக? என்ன விசாரணை? என்று கேட்க 'அதை உன்கிட்டலாம் சொல்ல முடியாது,' நீ யாரு கேட்க என்று மிரட்டினர். நமது நிருபர் நான் பத்திரிகையாளர், யார் உங்களுக்கு தனியாக இருக்கும் பெண்ணிடம் விசாரணை செய்ய உரிமை கொடுத்தது? என கேட்க, "உன்னை யும் தூக்கிட்டு போய் விடுவோம் என்று மிரட்ட முடிந்தால் பார் என நமது நிருபர் கூற" அங்கே இருந்தவர்கள் ஒன்றாக கூட சொல் லாமல் கொள்ளாமல் காரில் ஏறி ஓடி விட்ட னர். இதையடுத்து உள்ளூர் காவல் நிலையத் தில் தொடர்பு கொண்டு கேட்டபோது வந்த வர்கள் எங்களுக்கு யார் என்றே தெரியாது என்ற பதிலே விடையாக கிடைத்தது.

அடுத்த நாள் காலை சுமார் 11 மணி யளவில் மேட்டுப்பாளையத்தைச் சேர்ந்த ஒரு இளைஞரின் வீட்டிற்குள் அவர்களுடைய எவ்வித அனுமதியும் இல்லாமல் ரவுடி கும்பல் செயல்படுவதை போன்று வீட்டிற்கு சென்று கபளீகரம் செய்து அவரது பெற்றோர் களை ஏதோ குற்றவாளியைப் போன்று புகைப்படம் எடுத்துவிட்டு அந்த இளைஞரை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விட்டார்கள். உள்ளூர் காவல் நிலையத்தில் வைத்து கிட்டத்தட்ட ஒரு நாள் முழுவதும் ஏதோ குற்றவாளியைப் போல் வைத்து விசாரணைச் செய்தார்கள், பின்னர் விடுதலை செய்தார்கள்.

இதேபோல் மேட்டுப்பாளையத்திலுள்ள இன்னொரு இளைஞரின் வீட்டிற்குள் சென்று எந்தவொரு அனுமதியும் இல்லாமல் படக் காட்சிபோன்று வீட்டினை சோதனை செய்துள்ளார்கள். அந்த இளைஞர் அந்த தேதியில் இல்லாததால் அவரது வீட்டில் திங்கட்கிழமை கொச்சியில் உள்ள அலுவல கத்திற்கு உங்களது மகனை அழைத்து வரவேண்டும் என கூறிச் சென்றுள்ளனர்.

இதனிடையே மேட்டுப்பாளையம் காவல் நிலையத்திற்கே என்ன விசாரணை என்று தெரியாத நேரத்தில் முஸ்லிம் என்றே ஒரே காரணத்தினால் நியூஸ்7 தொலைக்காட்சி தீவிரவாத அமைப்புடன் தொடர்புள்ளதா? என்று செய்தியை வெளியிட ஆரம்பித்து விட்டது. நாமும் சகோதர இயக்கமும் இணைந்து அந்த பொய்யான செய்தியை நிறுத்தினோம்.

இதைத் தொடர்ந்து அந்த இரு இளைஞர் களும் அழைப்பாணை கொடுத்த தேதியில் கொச்சியில் உள்ள NIA அலுவலகத்தற்கு சென்றுள்ளனர். விசாரணையின் போது ஏதோ ஒரு குற்றவாளியை விசாரிப்பது போன்றும், ஒரு இளைஞரை அங்கிருந்த காவலர்கள் அந்த இளைஞரை அடித்து துன்புறுத்தி தீவிரவாத அமைப்புடன் தொடர்புள்ளதாக ஒப்புக்கொள்ள வேண்டும் எனக் கட்டாயப் படுத்தியுள்ளனர். தொடர்ந்து 5 நாட்கள்

வைத்து விசாரணை என்ற பெயரில் சித்தர வதைச் செய்துள்ளார்கள் தேசிய புலனாய்வு அமைப்பு.

மிக முக்கியமானது என்னவெனில் அந்த இளைஞனிடம் நீ எங்களுக்கு உளவாளியாக செயல்படு உனக்கான அனைத்து வசதி களையும் செய்து தருகிறோம் என ஆசை வார்த்தைகளைக் கூறி அனுப்பியுள்ளார்கள்.

இதில் கவனிக்க வேண்டிய மற்றொரு விஷயம் என்னவெனில், தேசிய புலனாய்வு அமைப்போ அல்லது வேறு எதுவாக இருந் தாலும் சட்ட அனுமதித்த முறைகளையே கையாள வேண்டும். ஆனால் NIA வோ அப்படி நடக்கவில்லை.

**சட்டம் கேலிக் கூத்தா?**

*1)* தனியாக இருந்த பெண்ணிடம் பெண் காவலர்கள் இல்லாமல் மிரட்டும் விதத்தில் விசாரணை செய்ய எந்த சட்டம் அனுமதி அளிக்கிறது?

*2)* மக்களுக்காக செயல்படுகிறோம் என்று கூறிக்கொள்ளும் அரசாங்க அமைப்புகள் பொதுமக்கள் கேள்வி கேட்கும் போது ரவுடி கும்பல்கள் போல நடந்து கொள்வது சரியா?

*3)* விசாரணை என்ற பெயரில், எந்த வொரு அனுமதியும் இல்லாமல் வீட்டிற்குள் எதனடிப்படையில் இவர்கள் சோதனை செய்தார்கள்?

*4)* விசாரணை என்ற பெயரில் அழைத்துச் சென்று செய்யாத குற்றத்தை ஒப்புக் கொள்ளும்படி துன்புறுத்துவது எந்த சட்டத்தில் காட்டப்பட்ட வழி?

இதுபோன்று தொடர்ந்து கொங்கு மண்ட லத்தில் உள்ள இஸ்லாமிய இளைஞர்களை எவ்வித நியாயமான காரணங்களும் இன்றி தொடர்ந்து ஒரு தீவிரவாத மாயையைக் காட்ட வேண்டும் என யாரோ சொல்லிக் கொடுப்பது போன்று செயல்பட்டு வருகிறது தேசிய புலனாய்வு அமைப்பு இனிவரும் நாட்களிலாவது பொறுப்புடன் நடந்துகொள்ளும் என எதிர்பார்ப்போம்.

- மேட்டுப்பாளையத்திலிருந்து நமது நிருபர்.

**முஸ்லிம்கள் கவனிக்கவும்....**

*1)* முஸ்லிம்களை வேவு பார்க்க முஸ்லிம் களையே நியமித்து, அதற்குக் கூலியாக ஆசை வார்த்தைகளைக் கூறுவது பின்னர் ஏமாற்றுவது.

*2)* முஸ்லிம்கள் அதிகமாக வாழும் இடங்களில் போதைப் பொருட்களைப் புழக்கத்தில் விடுவது போன்ற மாபாதகச் செயல்கள் - சதிகள் நடப்பதாக கோவை - சென்னை ஆகிய இடங்களிலிருந்து புகார்கள் வந்துள்ளன.

நாம் விழிப்புடனிருந்து இளைஞர்களைக் காப்பாற்றிட வேண்டும். ● -ஆர்.


**இப்போது பரபரப்பான**

**விற்பனையில்**




விலை ரூ. 30 மட்டுமே

**வேர்கள் பதிப்பகம்,**

52/1, மண்ணடி தெரு, மண்ணடி,

சென்னை - 600 001.

தொடர்புக்கு : 8148129887

# நன்மைகளும் தீமைகளும் மோதும்போது...



இமாம் யூசுப் அல்கர்லாவி

இப்னுதைமிய்யாவின் கருத்துகளிலிருந்து நான் எனது (கர்ளாவீ) நூலில் பதிவு செய்த மற்றொரு விஷயம். இப்னு தைமிய்யா கூறுகிறார் : கட்டாயக் கடமை உள்ளிட்ட எல்லா நற்செயல்களும் பயன்மிக்கவையே. அவற்றை விடுவதால் தீமை விளையும். தீய செயல்கள் அனைத்தும் தீங்கு விளைவிப்பவையே. மக்ரூஹ் எனும் அருவருக்கத்தக்க செயல்களில் (தீங்கு இருக்கும்) சில நன்மைகளும் இருக்கலாம்.

**சூழல்-1**

ஒரே நேரத்தில் இரண்டு நன்மைகளை செய்ய வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. ஆனால் கிடைக்கும் அவகாசத்தில் ஒரு நற்செயலை மட்டுமே செய்ய இயலும் என்றிருந்தால் அவ்விரண்டில் எது மிக அழகிய செயலோ அதைச் செய்ய வேண்டும். மற்றதைவிட்டு விட வேண்டும்.

உதாரணமாக கையிருப்பில் உள்ள பணத்தை உபரி தர்மமாக ஏழைக்கு வழங்குவதா? அல்லது வாங்கிய கடனை அடைப்பதா?

இரண்டுமே நற்செயல்தான். எனினும் கடனை அடைப்பதே மிகச் சிறப்பானது. அதையே முதலில் செய்ய வேண்டும். இது கடமை, அது நஃபில் (உபரி) கடமைக்கே முதலிடம். இதுபோல இரண்டு தீமைகளில் ஒன்றை செய்தாக வேண்டிய கட்டாயம் நேர்ந்துள்ள சூழலில் அவ்விரண்டில் எது குறைந்த தீமையோ அதைச் செய்து விட்டு மற்றதை விட்டு விட வேண்டும்.

**சூழல்-2**

ஜிஹாத் ஒரு கடமை சமுதாயத்தின் சார்பில் ஒரு குழு அல்லது ராணுவம் இதைச் செய்தால் போதும் என்ற சூழலில் இது "ஃபர்ளு கிஃபாயா" வாகும். அதாவது சமுதாயத்தின் கடமை.

ஒவ்வொரு முஸ்லிமும் பங்கேற்க வேண்டிய சூழல் நெருக்கடி ஏற்பட்டால் அப்பொழுது அது ஃபர்ளு அய்ன்" ஆகும். அதாவது ஒவ்வொருவரின் மீதும் கடமை.

பாருங்கள், ஜிஹாத் ஃபர்ளு கிஃபாயாவாக இருக்கும் சூழலில் ஒருவர் தம்மிடமுள்ள பணத்தை அதற்காகக் கொடுக்க வேண்டுமா? அல்லது தம் குடும்பத்தினருக்காகவும் பெற்றோருக்காகவும் செலவிடலாமா?

பெற்றோருக்காகவும் குடும்ப நலனுக்காகவும் செலவு செய்வது கட்டாயக் கடமை (ஃபர்ளு அய்ன்) இவர் குடும்பத்துக்கு இவர்தான் செலவு செய்ய வேண்டும்.

ஜிஹாத் 'ஃபர்ளு கிஃபாயா'வாக இருக்கும் சூழலில் அதற்கு மற்றவர்களும் பணம் கொடுப்பார்கள் என்பதால் இவர் தம் குடும்பத்தின் செலவுகளுக்கே முதலிடம் தர வேண்டும். இது "ஃபர்ளு கிஃபாயா"வை விட "ஃபர்ளு அய்ன்"க்கே முதலிடம் என்ற அடிப்படையின் கீழ் வரும். நபி (ஸல்)விடம் ஒருவர் "எந்த (அமல்) வழிபாடு சிறந்தது?" என்று கேட்டார் அதற்கு "தொழுகையை அதற்குரிய நேரத்தில் தொழுவது" என்று நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள்.

“பிறகு எது சிறந்தது?” என்று அவர் கேட்டார் “பெற்றோரைப் பராமரிப்பது” என்று நபி (ஸல்) கூறினார்கள். “பிறகு எது?” என்று அவர் கேட்க, “அல்லாஹ்வின் பாதையில் (ஜிஹாத்) அறப் போர் புரிதல்” என்று நபி (ஸல்) பதில் கூறினார்கள்.

கடமையான “ஹஜ்”ஜை விட கடமையான (அய்ன்) ஜிஹாத் முதலிடம் பெறுகிறது. இதுவே குர்ஆனும் சுன்னாவும் போதிப்பவை.

குர்ஆன் ஓதுவதும் இறைத் துதியில் ஈடுபடுவதும் உள்ளத்தாலும் நாவாலும் செய்யும் வழிபாடு என்ற அளவில் அவ்விரண்டும் ஒரே தரத்தில் இருந்தாலும் கூட குர்ஆன் ஓதுவதே துதியை விட ஏற்றமானது.

உள்ளத்தால் செய்யும் வழிபாடு என்ற அளவில் அவ்விரண்டுக்கும் சமமாக தொழுகை இருப்பினும் கூட தொழுகையில் உடல் உறுப்பும் ஈடுபடுவதால் தொழுகை அவ்விரண்டையும் விட முதலிடம் பெறுகிறது. நாக்கு, உடல் உறுப்பு என்று வெளிப்படையான உறுப்புக்களை ஈடுபடுத்துவதை வைத்து எது ஏற்றமானது என்று நாம் தீர்மானிக்கிறோம். இப்படிக் கவனிக்காமல் உள்ளத்தை மட்டுமே கவனித்து எது ஏற்ற மான வழிபாடு என்று தீர்மானித்தால் நாம் ஒரு முடிவுக்கு வர முடியாது.

ஆம், தொண்டைக் குழிக்குக் கீழே சென்று இதயத்தைத் தொடாத ஒரு ஓதலை விட இறைவனைப் புரிந்தும் அஞ்சி நடுங்கியும் செய்யப்படும் திக்ரு (துதி) ஏற்றமானதாக ஆகிவிடும் அல்லவா? இது ஒரு விரிந்து பரந்த தலைப்பு

**சூழல்-3**

ஒரு செயலில் நன்மையும் தீமையும் இரண்டற ஒன்றெனக் கலந்துள்ளது என்றால் அப்போது என்ன செய்வது?

இதற்கு மூன்று உதாரணங்களைக் கூறலாம்...

*உதாரணம்–1 :*

முஸ்லிம்களைக் கொல்லத் துடிக்கும் (தாருல் ஹர்பு) தேசத்தில் வாழ இயலாத நிலையில் ஒரு முஸ்லிம் பெண் அந்நாட்டைத் துறந்து ஹிஜ்ரத் (தியாகப் பயணம்) செய்ய முயற்சிக்கிறார்.

ஒருவன் தன் புனித உறவு (மஹ்ரம்) இல்லாத ஆணுடன்தான் வெளியூர் பயணம் செய்திட வேண்டும். மஹ்ரம் (புனித உறவு) இல்லாத ஆணுடனோ அல்லது அவள் மட்டும் தனியாக பயணம் செய்யக் கூடாது. ஹிஜ்ரத் செல்ல வேண்டிய நிர்பந்தத்திலுள்ள இப்பெண்ணுக்கு மஹ்ரமான ஆண்துணை இல்லை. இவள் என்ன செய்வது?

தாருல் ஹர்பு தேசத்தில் தங்கினால் ஈமானுடன் வாழ்வது கடினம். ஹிஜ்ரத் செல்வது என்றால் மஹ்ரமான ஆண் துணை இன்றி செல்வது பாவம். இப்பெண் மஹ்ரமான ஆண் துணையின்றி ஹிஜ்ரத் செல்ல வேண்டும். இப்படித்தான் நபி (ஸல்) காலத்துப் பெண்மணி உம்மு குல்தும் (ரழி) செய்தார். இவருக்காக (60:10) வசனம் இறங்கியது.

ஏனெனில் தாருல் ஹர்பு தேசத்தில் வாழ்வது ஈமானை அல்லது உயிரை இழப்பதைவிட மஹ்ரமான ஆண் துணையில்லாத பயணம் என்ற தீமை தாழ்ந்ததுதான். பெரிய தீங்கிலிருந்து தப்பிக்க சிறிய தீமையை செய்யும் வழி இது.

*உதாரணம்–2 :*

எதிரிகள் வலிமை வாய்ந்த கோட்டையினுள் இருக்கிறார்கள். அவர்களின் பெண்கள் சிறுவர்கள், முதியவர்கள், மதத்தலைவவர்கள் ஆகியோரும் உள்ளேதானிருக்கிறார்கள். உள்ளிருந்து கொண்டே அம்பு எறிந்து முஸ்லிம் களுக்கு சேதம் ஏற்படுத்திக் கொண்டிருக் கிறார்கள். அவர்களை வழிக்குக் கொண்டு வர வேண்டுமென்றால் ஏவுகணைத் தாக்குதல் நடத்த வேண்டும் அல்லது அவர்கள் அயர்ந்து இருக்கும் போது (கொரில்லா) தீடீரெனத் தாக்க வேண்டும். இப்படிச் செய்தால் அவர்களுடைய பெண்கள், சிறுவர், முதியோர், மதத்தலைவர்கள் என அனைவரும் பாதிக்கப்படுவார்கள் என்று இருப்பினும் இப்படித் தாக்குவதே சரி.

ஏனெனில் தாக்காமல் விடுவதால் ஏற்படும் ஆபத்தை விட இந்த ஆபத்து (பாவம்) சிறியது தான். மேலும் நம் நோக்கம் எதிரணியிலுள்ள ராணுவ வீரர்களை சரணடைய வைப்பது தானே யன்று மற்றவர்களைக் கொல்வது அல்ல.

நபி (ஸல்) அவர்கள் தாயிஃப் போரில் எதிரிகளை பணியவைக்க ஏவுகணை தாக்குதல் தான் நடத்தினார்கள்.

உதாரணம்–3 :

முஸ்லிம்களில் சிலரை எதிரிகள் பிடித்து வைத்துக்கொண்டு அவர்களைப்போர்க்களத்தில் கேடயமாகப் பயன்படுத்துகினறனர். இப்போது இந்த எதிரிகளைத் தாக்காமல் விட்டால் பேராபத்து ஏற்பட்டு விடும். முஸ்லிம்கள் அனைவருக்கும் ஆபத்து.

அதே எதிரிகளிடம் சிக்கி கேடயமாக ஆக்கப்பட்டிருக்கும் முஸ்லிம்களைத் தாக்காமல் எதிரிகளை ஒழிக்க முடியாது என்றிருப்பின் கேடயமாக்கப்பட்டிருக்கும் சில முஸ்லிம்களை இழந்து மொத்த முஸ்லிம்களையும் இஸ்லாத்தையும் காப்பாற்ற வேண்டும் என்கின்றனர் சட்ட வல்லுநர்கள். இதில் மாற்றுக் கருத்துடையவர்களும் உண்டு.

**சூழல்-4**

ஒரு தீமையைச் செய்தாக வேண்டிய கட்டம். அதைச் செய்யாமல் விட்டால் ஒரு நன்மையையும் விட வேண்டிய சூழல். இப்போது என்ன செய்வது? ஒரு நற்செயலை இழந்தாலும் பரவாயில்லை என்று தீமையைச் செய்யாமலிருப்பதா? அந்த நன்மைக்காக இந்தத் தீமையைச் செய்வதா?

உதாரணமாக, கடும் பசி ஏற்பட்டுள்ள சூழலில் ஹலாலான வேறு உணவு ஏதும் கிடைக்காதபோது செத்த பிராணியின் மாமிசத்தை உண்ணலாம். ஏனெனில் பசியைப் போக்கி உயிர் பிழைப்பது கட்டயாக் கடமை. செத்த பிராணியை உண்ணாமல் அது சாத்தியமில்லை எனும் பட்சத்தில் அந்த நன்மைக்காக இந்தப் பாவத்தைச் செய்து விட வேண்டியதுதான். இதை வைத்துக் கொண்டு,. மாற்று மருந்து இருக்கும் போது ஆல்கஹால் கலந்த மருந்தை சிகிச்சைக்காக என்று கூறிக்கொண்டு உண்பதை ஏற்க முடியாது.

ஏனெனில் ஆல்கஹால் கலந்த மருந்தால் தான் நோய் குணமாகும் என்று உத்திரவாதம் கூறியது யார்?

இதுபோலவே சிகிச்சைக்காக என்ற பெயரில் மதுக் குடிப்பதும், ஏற்க முடியாது. ஒரு நன்மை நடக்க வேண்டும் என்பதற்காக தீமை செய்யலாம் என்பதன் கீழ் இவை வராது. சுருங்கக் கூறின் இரண்டு சூழல்களில் தீங்கு செய்ய வேண்டியது ஏற்படுகிறது. இரண்டு சூழல்களில் நற்செயல் செய்யாமலிருக்க வேண்டியது ஏற்படுகிறது. இவை முவாசனத் எனப்படும் மார்க்கத்தை சீர்தூக்கிப் பார்க்கும் திறனுடன் தொடர்புடையதாகும்.

மார்க்க ரீதியாகப் பார்த்தாலும் இதில் கருத்து வேறுபாடு இல்லை. இப்படிப்பட்ட முடிவுகளை அறிவும் ஏற்றுக் கொள்கிறது. இப்படி ஒரு பொன்மொழி உண்டு “தீமைகளுக்கு மத்தியில் நன்மை எது என்று கண்டு பிடிப்பவர் அறிவாளி அல்ல. இரண்டு தீமைகளில் எது மோசமான தீமை, இரு நன்மைகளில் எது சிறந்த நன்மை என்று கண்டு பிடிப்பவரே அறிவாளி”.

“வெவ்வேறு இரு வியாதிகள் தம் உடலில் வெளிப்படும் பொழுது அவற்றுள் மிகக் கொடிய நோய்க்கே முதலில் சிகிச்சை எடுப்பான் அறிவாளி” என்றொரு கவிதை உண்டு.

இதேபோல இன்னொரு விளக்கமும் இங்குண்டு. இதுவரை நாம் கூறிவந்த விஷயமும் இப்போது கூறப்போகும் விஷயமும் ஒன்றுதான் என்று தோன்றும். ஆனால் உண்மையில் அவ்விரண்டும் ஒன்றல்ல அது வேறு, இது வேறு. சில சங்கடங்கள் ஏற்படும் என்பதற்காக கடமையான வழிபாட்டை விடுவது, ஒரு தேவைக்காக தடை செய்யப்பட்டதைக் கூட செய்வது.

உதாரணமாக, நோன்பு வைத்துக்கொண்டு பயணம் செய்தால் சங்கடம் ஏற்படும் என்பதற்காக நோன்பை விடுவது. உடலில் ஒரு வியாதி இருப்பதால் தொழுகையின் கடமை ஒன்றை (ஸஜ்தா, ருகூவு, நிலை விடுவது அல்லது ஹஜ், உம்ராவுக்கான புனித ஆடை (இஹ்ராம்)யில் கடைப்பிடிக்க வேண்டிய நெறிகளை மீறுவது (முடிவெட்டுதல், நகம் வெட்டுதல், தையல் ஆடை அணிதல்) இப்படிப்பட்ட செயல்களெல்லாம் மார்க்கம் தந்துள்ள அனுமதி. சிரமங்களைத் தவிர்ப்பதற்காக இந்த அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

நாம் முன்னர் கூறிய பிரச்சனை வேறு. இதுவேறு. அதுவும் இதுவும் ஒன்றல்ல. இப்போது மறுபடியும் முதல் விஷயத்தைப் பற்றியே பேசுவோம்..

வறட்சியான நேரத்தில் வான்மழை பொழிந்தால் நிச்சயமாக அது ஓர் அருள். அப்பொழுது

பொழியும் மழையால் விளையும் பொருள்களை அநியாயக்காரர்களும் அனுபவித்து பலனும் ஊட்டமும் பெறுகிறார்கள் என்பதற்காக மழை அருள் அல்ல என்று கூறுவதில்லை.

மழை பொழிந்து விவசாயம் செழித்து அதனால் அநீதியாளர்கள் பலனடைந்து அவர்கள் தீங்கிழைப்பார்கள் என்பதை விட மழை பொழியாமலிருப்பது பெரும் தீங்கல்லவா?

இதுபோல "குடிமக்கள் மீது அநியாயங்களை ஏவிவிடும் அரசு இருப்பதை விட அரசு என்று ஒன்று இல்லாமலிருப்பதே மேல் என்கின்றனர் சிலர். அப்படியல்ல, ஆட்சியாளர்கள் என்று ஒருவர் இருக்க வேண்டும். அவர் நீதியற்றவராக இருப்பினும் சரி. ஒரு ஞானி சொன்னார் : ஆட்சியாளர் என்றொருவர் இல்லாமல் ஓர் இரவு கழிவதைவிட அநீதியான ஆட்சியாளருடன்



கழியும் அறுபது வருடம் மேலானது.

மக்களுக்கான உரிமைகளை தருவதற்கு வாய்ப்பிருந்தும் தராத தீய அரசன் தனது பாவங்களுக்காக தண்டிக்கப்படுவான். ஆனால் ஆடசியாளன் என்று ஒருவன் இருக்க வேண்டும். இன்னொன்றையும் இங்கே நான் கூற விரும்புகிறேன். அரசனுடைய எல்லாக் காரி யங்களுக்கும் அல்லது நீதித்துறை அமைச்சர் பொறுப்பு என்று சில காரியங்களுக்கு ஒரு பிரதிநிதி இருக்கிறார். இந்தப் பிரதிநிதி தனது பொறுப்பை அதற்குரிய முறைப்படி நிறை வேற்ற இயலாமலிருக்கிறார்.

ஆனால் வேறு யாரும் இப்பொறுப்பில் இருந்துகொண்டு செய்ய முடியாதவற்றை இவர் செய்கிறார் என்றால் இவர் இப்பொறுப்பில் தொடர்ந்து நீடிக்கலாம். இவரைப் போன்ற வர்கள் இப்பொறுப்பில் இருப்பது கட்டாயக் கடமை என்றும் கூற முடியும்.

இறைத்தூதர் யூசுப் (அலை) அவர்கள் எகிப்து நாட்டு அரசனின் அமைச்சராக (பூமியின் களஞ்சியங்களுக்கு அமைச்சராக அதாவது உணவு வழங்கல் துறை) இருந்தார்கள். அந்த அமைச்சர் பொறுப்பை கேட்டுப் பெற்றார்கள். கீழ்காணும் இரு வசனங்கள் மூலம் அந்த மன்னரும் அவரின் சமுதாயமும் முஸ்லிம்களாக இருக்கவில்லை என்பது தெளிவாகிறது.

*அல்லாஹ் கூறுகிறான் :*

*முற்காலத்தில் திட்டமாக யூசுப் தெளிவான சான்றுகளுடன் உங்களிடம் வந்தார். அவர் இறந்து விடும் வரை அவர் உங்களிடம் கொண்டு வந்த தைப் பற்றி நீங்கள் சந்தேகத்திலே இருந்தீர்கள் (40:34)*

மேலும் யூசுப் (அலை) அவர்கள் தம் சிறைத் தோழர்களிடம் கூறியதை அல்லாஹ் எடுத் துரைக் கிறான்... "என் இரு சிறைத் தோழர்களே! (அனைத்தையும்) அடக்கி ஆளும் ஒரே அல்லாஹ் இருப்பது நல்லதா? அல்லது பல கடவுள் இருப்பதா? அவனையன்றி நீங்கள் வணங்கிக் கொண்டிருப்பவை அனைத்தும் நீங்களும் உங்கள் மூதாதையரும் வைத்துக்கொண்ட வெறும் கற்பனைப் பெயர்கள் அன்றி வேறில்லை. (12 : 39,40)

எனவே அது முஸ்லிம்களின் அரசு அல்ல. மேலும் அவர்களிடம் ஒரு வழக்கம் உண்டு. (மக்களின்) செல்வங்களை எடுத்து அரசரின் நலன்களுக்காகவும் அவரின் குடும்பத்தினர் அவரின் ராணுவம் அவரின் பராமரிப்பின் கீழ் இருப்பவர்களின் நலன்களுக்காகவும் பயன் படுத்தி வந்தனர்.

இது இறைத்தூதர்கள் போதித்த நீதியுமல்ல. அவர்கள் காட்டிய வழியும் அல்ல. இந்த நடைமுறையை எகிப்து நாட்டின் உணவு வழங்கல் துறை அமைச்சராக இருந்தபோது யூசுப் நபியால் நீக்க முடியவில்லை. அல்லாஹ்வின் மார்க்கத்தின் படியும் தாம் விரும்பிய படியும் அவர்களால் செயல்பட இயலவில்லை. ஏனெனில் அப்படி அவர்கள் செயல்படுவதை மக்கள் ஏற்க வில்லை.

எனினும் தம்மால் இயன்ற அளவுக்கு நீதியாக நடந்தார்கள். மக்கள் நலனில் அக்கறை செலுத்தினார்கள். அமைச்சராக இல்லாதிருந்தால் தம் குடும்பத்தினர்களான முஸ்லிம்களுக்கு எதையெல்லாம் செய்ய இயலாதோ அதையெல்லாம் அமைச்சராக இருந்ததால் செய்ய முடிந்தது.

யூசுப் (அலை) அவர்கள் செயல்பட்ட விதம் உங்களால் முடிந்த அளவுக்கு அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள் என்பதன் கீழ் வருகிறது.

அதுபோல இரண்டு கடமைகளை ஒரே நேரத்தில் செய்ய வேண்டிய நிர்பந்தம் ஏற்படுகிறது. ஆனால் ஒன்றை மட்டும் செய்வதற்குத்தான் நேரமிருக்கிறது என்றால் அவ்விரண்டில் மிக உறுதியாக வலியுறுத்தப்பட்டிருக்கும் கடமையைச் செய்திட வேண்டும். இதைச் செய்வதற்காகவே மற்றொன்றை விட்டிருக்கிறார் என்பதால் இவர் (வாஜிபை) கடமையை விட்டவராக ஆக மாட்டார்.

இதேபோல தடை செய்யப்பட்ட இரு விஷயங்களில் ஒன்றைச் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால் மிகக் கடுயைமாக எச்சரித்துத் தடை செய்ப்பட்டதையே விட வேண்டும். அதாவது கொடியதைச் செய்ய வேண்டும். மிகக் கொடியதை விட்டு விட வேண்டும்.

உண்மையில் இவர் ஒரு பாவத்தைச் செய்து விட்டாலும் கூட அதனால் குற்றம் ஏற்படாது. இப்படி முரண்பட்டு நிற்கும் சூழல்களைப் பற்றிப் பேசினால் நீண்டு கொண்டே போகும். நன்மையும், நன்மையும் மோதும் சூழல், தீமையும் தீமையும் மோதும் சூழல் என்பதான இச்சூழல்களெல்லாம் எப்போது ஏற்படும் தெரியுமா?

நபித் துவத்தின் தடயங்களும் கிலாஃபத் எனும் நல்லரசின் தடயங்களும் மெல்ல மெல்ல அழிந்துவரும் காலக் கட்டங்களிலும் நாடுகளிலும்தான் ஏற்படும். இப்படிப்பட்ட சூழல்கள் ஏற்படுவது முஸ்லிம் சமுதாயத்தில் குழப்பம் ஏற்படுவதற்கான காரணங்களுள் ஒன்று.

(ஒரு பொருளில், ஒரு காரியத்தில்) நன்மைகளும் தீமைகளும் கலந்து விரவியிருந்தால் குழப்பம்தான் ஏற்படும். சிலர் அதிலுள்ள நன்மைகளைப் பார்த்து அதை அனுமதிக்கலாம் என்பர். சிலர் அதிலுள்ள தீமைகளைப் பார்த்து அதை அனுமதிக்கக் கூடாது என்பர்.

அனுமதிப்பவர்கள் அதில் உள்ள தீமைகளுடனேயே அனுமதிக்கின்றனர். கூடாது என்பவர்கள் அதிலுள்ள நன்மைகளுடனேயே கூடாது என்கின்றனர்.

நடுநிலையாளர்கள் இரண்டுக்கும் நடுவே நிற்கிறார்கள். (நபிமார்கள் காட்டிய வழித் தடத்தில் அமையும் கிலாஃபத் எனும் இஸ்லாமயி அரசு இல்லாத நாட்டிலும் இல்லாத காலத்திலும் தான் இதுபோன்ற குழப்பங்கள் ஏற்படும். இஸ்லாமிய அரசு இருந்தால் தீமைகளைச் செய்திட வேண்டிய நிர்பந்தம் எதுவும் இருக்காது. நற்செயல்கள் செய்திட எந்தத் தடையும் இருக்காது என்கிறார் இப்னு தைமிய்யா)

### மார்க்க அறிஞரின் பணி என்ன?

இந்த வகையிலான சட்டப் பிரச்சனைகள் குறித்து ஒரு மார்க்க அறிஞர் நன்றாகச் சிந்திக்க வேண்டும். ஒரு கடமையைச் செய்யாமலிருப்பது கூட மன்னிக்கப்படும் தவறாக ஆகிவிடும். இதற்கு ஒரு உதாரணத்தைப் பாருங்கள்.

ஒரு நன்மையான காரியத்தை செய்யச் சொல்லி (அம்ரு பில் மஅரூப்) மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்தால் ஒரு பயங்கர பாவம் ஏற்பட்டு விடும். அந்தப் பாவம் பிரச்சாரத்தால் ஏற்படும் நன்மையை விட பெரியதாகிவிடும் என்றிருந்தால் நன்மையை ஏவும் இந்தக் கடமையை விட்டு விட வேண்டியதுதான்.

உதாரணமாக அநியாயக்கார ஆட்சி நடைபெறும் ஒரு நாட்டில் ஒரு குற்றவாளியை அரசிடம் பிடித்துக் கொடுத்தால் அவனை அரசு குற்றத்துக்கேற்ற தண்டனையை விடக் கூடுதலாக தண்டித்து விடும் என்ற சூழல் அவனை அரசிடம் ஒப்படைக்காமல் இருக்க வேண்டும்.

இது பாவத்தை அனுமதிக்கும் செயலோ தண்டனையைத் தள்ளுபடி செய்யும் செயலோ அல்ல. இதேபோல சில தீமைகளுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்தால் மிகப்பெரிய நல்லது ஒன்றை இழக்க நேரும் என்றால் அந்த தீமைகளுக்கு எதிரான பிரச்சாரத்தை விட வேண்டும் என்கிறார் அறிஞர் இப்னு தைமிய்யா. (நூல் : இப்னுதைமிய்யாவின் ஃபத்வா தொகுப்பு)

●

# அண்ணா போலிட் கோவ்ஸ்கயா விருது கவுரி லங்கேஷ் தேர்வு



பெங்களூரு, அக்.7 ரஷ்ய நாட்டைச் சேர்ந்த அண்ணா போலிட்கோவ் ஸ்கயா பெயரில் லண்டனைச் சேர்ந்த ரீச் ஆல் உமன் இன் வார் (ரா இன் வார்) என்ற அமைப்பு வழங்கும் விருதுக்கு அண்மையில் துப்பாக்கிசூட்டில் கொல்லப்பட்ட கவுரி லங்கேஷ் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

இதுகுறித்து பெங்களூருவில் வியாழக்கிழமை கவிதா லங்கேஷ், செய்தியாளர்களிடம் கூறிய தாவது:

எனது சகோதரியும், மூத்த பத்திரிகையாளரு மான கவுரி லங்கேஷ் கடந்த செப்.5- ஆம் தேதி அடை யாளம் தெரியாத நபரால் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். அவரது கொலை தொடர்பான விசாரணை நடந்து வருகிறது. விசாரணை திருப்தியாக இருக்கிறது என்பதை காட்டிலும் கொலைக்காரர்கள் யார்? கொலைக்கான காரணம் என்ன? என்பது குறித்து அறிந்துகொள்ளும் ஆர்வம் எங்களுக்கு உள்ளது.

கடந்தாண்டு மாஸ்கோவில் பாகிஸ்தான் செயல்பாட்டாளர் குலாலாய் இஸ்மாயிலுடன் இணைந்து ரஷ்ய நாட்டைச் சேர்ந்த புலனாய்வு பத்திரிகையாளர் அண்ணா போலிட் கோவ்ஸ்கயா நினைவாக அண்ணா போலிட் கோவ்ஸ்கயா விருது நிறுவப்பட்டுள்ளது.

இந்த விருதை லண்டனைச் சேர்ந்த ரீச் ஆல் உமன் இன் வார் (ரா இன் வார்) என்ற அமைப்பு வழங்குகிறது. இந்த விருக்கு கவுரி லங்கேஷ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக எனக்கு மின்னஞ் சல் வந்துள்ளது. இந்த விருதை பெறும் முதல் இந்தியர் கவுரி லங்கேஷ். எனது சகோதரியை போலவே அண்ணா போலிட் கோவ்ஸ்கயாவும் துணிச்சலான செயல்பாட்டு பெண் பத்திரிகை யாளர்.

2006, அக்.7- ஆம் தேதி மின் தூக்கியில் சென்று கொண்டிருந்த போது விஷம் கொடுத்து கொலை செய்யப்பட்டிருக்கிறார். ரஷ்யாவில் உள்ள செச்ன்யா மாகாணத்தில் மனித உரிமை மீறல்கள் குறித்து பேசியதற்காக அண்ணா போலிட் கோவ்ஸ்கயா என்ற பெண் பத்திரிகையாளர் கொலை செய்யப்பட்டிருக் கிறார்.

எனவே, அவரது பெயரில் பெண் பத்திரி கையாளர்களை அடையாளம் கண்டு கவுரவிக்க விருது நிறுவப்பட்டுள்ளது. இந்த விருதுக்கு கவுரி லங்கேஷ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது மிகவும் பொருத்தமானதாகும் என்றார். பேட்டியின் போது, கவுரி லங்கேஷின் தாய் இந்திரா, சகோதரர் இந்திரஜித் உள்ளிட்டோர் உடனிருந்தனர். ●

# கோவையில் அரசு அச்சகத்தை தொடர்ந்து பாஸ்போர்ட் அலுவலகத்தையும் மூட பாஜக அரசு முடிவு




கோவையில் செயல்படும் மத்திய அரசு அச்சகத்தை மூடு வது என மத்திய அரசு ஏற்கெ னவே அறிவித்திருந்தது. இந்நிலையில் அடுத்த நடவடிக்கையாக கோவையில் செயல்பட்டு வரும் மண்டல பாஸ்போர்ட் அலுவலகத்தையும் மூடும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

கோவை அவிநாசி சாலை சித்ரா அருகில்பாஸ்போர்ட் சேவா கேந்த்ரா செயல்படுகிறது. மத்திய அரசின் வெளியுறவுத் துறையின் கீழ் இவ்வலுவலகம் செயல்பட்டு வந்தாலும் ஏஜென்சிகள் மூலமாக ஒப்பந்த ஊழி யர்களைக்கொண்டே இவ்வலு வலகம் செயல்பட்டு வருகிறது.

இதில் கோவை, நீலகிரி, திருப்பூர், ஈரோடு, நாமக்கல் மற்றும் சேலம்ஆகிய ஆறு மாவட்டங்களை சேர்ந்தவர் களிடம் நாள் ஒன்றுக்கு 700 முதல் 800 வரையிலான விண்ணப்பங்கள் வரை பெறப்படுகிறது. சரிபார்க்கப்பட்ட விண் ணப்பங்கள் கோவை உப்பிலியபாளையத்தில் உள்ள மண்டல பாஸ்போர்ட் அலுவலகத்திற்கு அனுப்பப்படுகிறது. இத னைத் தொடர்ந்து விண்ணப்ப தாரர்கள் தொடர்பான காவல் துறை உள்ளிட்ட விசாரணைகள் நடைபெற்று இங்கேயே அச்சடிக்கப்பட்டு அஞ்சல் மூலமாக பாஸ்போர்ட் விநியோகிக்கப்படுகிறது.

மேலும், தட்கல் முறையிலான விண்ணப் பங்கள் மற்றும் சேவா கேந்தி ராவில் அளிக்கப்படும் குளறுபடியான விண்ணப்பங்கள் ஆகியவற்றை நேரடியாக மண்டல பாஸ்போர்ட் அலுவலகத்தில் சம்பந்தப்பட்ட நபர்கள் (நாள் ஒன்றுக்கு சுமார் ஐம்பது பேர்) நேர்காணல் நடத்தப் பட்டு பாஸ்போர்ட் வழங்கப்பட்டு வருகிறது.

**இந்நிலையில் கோவையில் இயங்கிவரும் மண்டல பாஸ் போர்ட்அலுவலகத்திற்கு மூடு விழா செய்யப்பட்டு சென்னை பாஸ்போர்ட் அலுவலகத்துடன் இணைப்பதற்கான முயற்சியை இந்திய வெளியுறவுத்துறை மேற்கொண்டு வருகிற அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது. ●**





# திருவாளபுத்தூர் தாவா நிகழ்ச்சி

தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் சார்பாக நவம்பர் 4-ந் தேதி திருவாள புத்தூர் எனும் கிராமத்தில் தாவா நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. நிகழ்ச்சியின் தொடக்கத்தில் சகோதரர் அப்துல் ரவூப் கடுமையான மழையையும் பொருட்படுத்தாமல் வந்தமர்ந்திருந்த மக்களுக்கு நிகழ்ச்சியின் நோக்கமே இங்கு வந்திருக்கின்ற தலீத் சமூக மக்களின் விடுதலைப் பற்றியான விழிப்புணர்வை ஏற்படுத்துவதுதான் என்று கூறி உற்சாகப்படுத்தினார்.

அதையடுத்து சிறப்புரையாற்றிய சகோதர் இம்தியாஸ் அவர்கள் தலீத் சமூகம் இன்று நாடு முழுவதும் சந்திக்கும் கொடுமைகளுக்கும் அவர்களுக்கு எதிராக நடத்தப்படுகின்ற வன்முறைகளுக்கும் காரணம் டாக்டர் அம்பேத்கர் கூறுவதுபோல் அவர்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கின்ற இந்து மதம் தான் என்றும் இந்து மதத்திலிருந்து இருந்துகொண்டு சமத்துவத்தை தேடுவது என்பது இருட்டு அறையில் குருட்டு மனிதன் இல்லாத கருப்பு பூனையை தேடினால் எப்படியோ அப்படிதான் என்றும் இந்து மதத்திலிருந்து வெளியேறி சமத்துவத்தைப் போதிக்கும் இஸ்லாமிய மார்க்கத்தை தழுவினால் மட்டுமே சமூக விடுதலையைப் பெற முடியும் என்பதை விளக்கினார்.

பிறகு பேசிய சகோதரர் நாசர் அவர்கள் மூடப் பழக்க வழக்கங்களிலிருந்தும் மதுவிலிருந்தும் அடிமைத் தனத்திலிருந்தும் மீண்டுவர எல்லா வாய்ப்புகளையும் தரும் மார்க்கம் இஸ்லாம் ஒன்றுதான் என்பதை விரிவாகக் கூறினார். அதையடுத்துப் பேசிய இஸ்லாத்தை ஏற்ற பேராசிரியர் அபூபக்கர் தலீத்கள் எல்லாத் துறைகளிலும் பின்தங்கி இருப்பதற்கு காரணம் அவர்களின் திறமை குறைவால் அல்ல, மாறாக மனு தர்மவாதிகளின் சதிகளால்தான் என்றும் சேரிக்கு வெளியே வாடகைக்கு வீடு மறுக்கப்படுவது என்பது சாதாரண தலீத் மக்களுக்கு மட்டுமல்ல படித்த மேதைகளுக்கும் அரசு பதவியில் இருப்பவர்களுக்கும் சேர்த்துதான். காரணம், நம்மை அடிமைப்படுத்தி ஏற்றத் தாழ்வுகளைத் திணிக்கும் ஜாதி அமைப்புமுறை. இவற்றிலிருந்து வெளியேறி தந்தை பெரியார் கூறிய இன இழிவிலிருந்து நீங்க இஸ்லாம் என்னும் நன் மருந்தை நாம் அருந்த வேண்டும் என்று சூளுரைத்தார். ●

**மறுப்பு செய்தி :** கடந்த நவம்பர் இதழில் 57-வது பக்கத்தில் தாலிபான் போராளிகள் குறித்து செய்தி வெளியிட்டுள்ளோம். அந்தி செய்தியானது விடுதலை என்னும் செய்திதாள் வெளியிட்ட செய்தி ஆகும். எனவே அதில் அவர்கள் தாலிபான்களை பயங்கரவாதிகள் என குறிப்பிட்டுள்ளனர். தாலிபான்களின் அமெரிக்காவுக்கு எதிரான வெற்றிகரமான தாக்குதல்களை எடுத்துக் கூறவே நாமும் அதே செய்தியை பிரசுரித்தோம். ஆனால் தாலிபான்கள் பயங்கரவாதிகள் அல்ல, அவர்கள் விடுதலைப் போராளிகள் என்பதை அன்றே நாம் நிறுவி நடத்தி வந்த விடியல் வெள்ளி தொடங்கி இன்றைய நமது வைகறை வெளிச்சம் வரை எழுதி வருகின்றோம். ஆப்கான் முஜாஹிதுகளின் தியாக வரலாறுகளையும், யுவானி ரிட்லியின் தாலிபானின் பிடியிலையும் தமிழ் கூறும் நல்லுலகிற்கு அறிமுகம் செய்தது நாமே. எனவே வைகறையின் மேன்மையான வாசகர்களை பயங்கரவாதிகள் என்று உள்ளதை போராளிகள் என்று படிக்குமாறும் கேட்டுக் கொள்கிறோம். பயங்கரவாதிகள் என்று வந்தத்தற்கு மறுப்பளிக்கவே இந்த செய்தியை வெளியிடுகின்றோம்.



# காலம் தரும் பாடங்கள்

## பாகம்-2

நாமெல்லாம் சொல்லக்கூடிய விஷயங்களும், சத்தியங்களும் இறைவன் கூறும் விஷயங்களோடு ஒப்பிடும்போது மலைக்கும் மடுவிற்கும் இடையே உள்ள வித்தியாசம். இறைவனின் வார்த்தை ஒவ்வொன்றும் மகத்துவ மிக்கது. மேன்மை ஆனது, அந்த அடிப்படையில் தான் "காலத்"தைப் பற்றி பார்த்தோம். போனால் திரும்பி வராததும், கோடி கொடுத்தாலும் யாரிடம் இருந்தும் திரும்ப பெற முடியாதது மாகிய அருமை மிக்க காலத்தின் மீது சத்தியம் இட்டு சத்தியத்தின் நிலைப்பாட்டையும், காலத்தின் அருமையும் இறைவன் நமக்கு உணர்த்து கிறான்.

இறைவன் அவன் படைத்த பொருட்கள் மீது சத்தியம் செய்கிறான். ஏனெனில் இந்த உலகமும் அதில் உள்ள அனைத்தும் அவன் படைத்ததே, ஆததால் எதை நாடுகிறானோ அதை கொண்டு அவன் சத்தியம் செய்கிறான். ஆனால் மனிதர்களாகிய நாமோ எதையும் படைக்கவுமில்லை, அதற்கு சக்தி படைத்தவர்களும் இல்லை. தேவையற்ற சத்தியங்களை நாம் தவிர்க்க வேண்டும், முடியாத பட்சத்தில் உண்மைக்காக மட்டும் நம்மை படைத்த இறைவன் மேல் மட்டுமே சத்தியம் செய்யலாம் என்பதை புரிய வைக்கிறார்.

அதேபோல் நாம் காலத்தின் அருமை உணர்ந்து நடக்க வேண்டும் என்று கூறும் இறைவன் இந்த வசனத்திலே பல பாடங்களை நமக்கு கற்றுத்தருகிறான்.

நாம் சில மனிதர்களை பார்த்தோமேயானல் நல்ல ஆரோக்கியம், உடல் வலிமை, இருக்கும் போது நல் அமல்களை செய்யாமலும், எல்லாம் போன பிறகும் காலத்தை குறைக்கூறிக் கொண்டு இருக்கிறார்கள்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், இறைவன் கூறியதாக

"ஆதமுடைய மக்கள் காலத்தை திட்டுகிறார்கள், அது என்னை வேதனைப் படுத்துகிறது. ஏனெனில் நானே காலமாக இருக்கின்றேன்" என்று நாம் ஒரு விஷயத்தை சிந்தித்துப் பார்க்க வேணடும். நம்மில் யாரிடமாவது காலம் வந்து நீ இதை செய், இப்படி செய் என்று சொன்னதா என்றால் இல்லை. நாமே தான் எல்லாம் செய்கிறோம். அதன் விளைவு நல்லதாக இருந்து விட்டால் எல்லாம் என்னால் வந்தது என்று பிதற்றிக் கொள்கிறோம். அதே செயலின் விளைவு, முடிவு தீயதாக இருந்து விட்டால், நம் நாவு சொல்லும் ஒரே வார்த்தை எல்லாம் என் நேரம் என்று ஒரே வார்த்தையில் காலம், நேரத்தை குற்றவாளிக் கூண்டில் ஏற்றி விடுகிறோம்.

இப்பேர்பட்ட மகிமைமிக்கதாக காலம் இருப்பதால் தான் இறைவன் தன் சத்தியத்திற்காக காலத்தை தேர்வு செய்துள்ளான். எனவே மனிதர்களாகிய நாம் எது சரி, எது தவறு என்பதை ஆய்ந்தறிந்து செயல்படுத்தி விட்டு, காலத்தை திட்டும் பழக்கத்தை கைவிட வேண்டும்.

இன்னும் மனிதர்களில் சிலரைப் பார்த்தால், குறிப்பாக இளம் வயதினர் அதிலும் பெண்கள் அதிகமாக சொல்லும் வார்த்தை என்னவென்று பார்த்தோமேயானால் "Bore" அடிக்கிறது நேரம்

போகவே இல்லை என்பதாகும்.

அன்பார்ந்த உள்ளங்களே!

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் "நாளை நிழலே இல்லாத மறுமை நாளில், மனிர்கள் எல்லாம் நிழலுக்காக அங்குமிங்கும் அலையும் போது, வெயில் கொடுமையில் ஏற்பட்ட வியர் வையின் காரணத்தால் வியர்வைகள் குலமாய் ஒவ்வொருவரையும் நிரப்பிக் கொண்டிருக்கும் அந்த வேளையிலே இறைவன் அவனுடைய நிழலை 7 வகையினருக்கு தருவதாக கூறுகிறான்.

**அதிலே ஒரு வகையினர் யார் தெரியுமா?**

தன்னுடைய இளமையை தன் இறைவனுக் காக இறைவழியிலேயே செலவிடும் ஒரு இளை ஞன். இறைப் பணிகள் எவ்வளவோ இருக்கிறது. இறைவனுக்காக இறைவனுக்கு செய்யும் பணிகள் எவ்வளவோ இருக்கிறது. இறைவனுக் காக மக்களுக்கு செய்யும் பணிகள் எவ்வளவோ இருக்கிறது. நாமே நமக்காக செய்யும் நற்பணிகள் எவ்வளவோ இருக்கிறது.

குர்ஆனை ஓதுவதோடு நிறுத்திக் கொள்ளா மல் அதை படியுங்கள், ஹதீஸ்களைப் படியுங்கள், முந்தைய வரலாறுகளை எல்லாம் படியுங்கள், இறைவன் எதற்காக நம்மைப் படைத்தான் என்பதை சிந்தித்துப் பாருங்கள், இந்த உலகை வீணும், விளையாட்டாகவுமே படைத்ததாக கூறும் இறைவன் மனிதர்களை வீணாகப் படைக்க வில்லை என்று இறைவன் கூறுகிறான் என்றால் எதற்காக இறைவன் நம்மை படைத்தான். அந்த நோக்கத்தை நாம் நிறைவேற்றினோமா, இல்லையா என்பதை அறிய முற்பட வேண்டும். அதற்கெல்லாம் ஒரு பயன்பாடாகத்தான் இறைவன் இந்த காலத்தையும் படைத்துள்ளான். எனவே சகோதர, சகோதரிகளே, இதுபோன்ற வீணான பாவங்களைப் பெற்றுத் தரும் "Bore" வார்த்தைகளை எல்லாம் கூறுவதை விட்டு விடுங்கள்.

இந்த 2 விஷயங்களையும் அடுத்து இறைவன் சொல்லும் அடுத்த வார்த்தையில் பொதிந்துள்ள முத்தான விஷயங்கள் என்னவென்றால்

"நிச்சயமாக மனிதன் நஷ்டவாளியாகவே இருக்கிறான்" (அல்குர்ஆன் - 103:2)

நாம் நினைக்கலாம், நாம் எங்கே நஷ்டத்தில் இருக்கிறோம், நன்றாக தானே இருக்கிறோம். கஷ்டப்படுபவர்கள் வேண்டுமானாலும் நஷ்டத் தில் இருக்கலாம். நமக்கென்ன இறைவன் நம்மை கூறவில்லை என்று சர்வ வசதியும் வாழ்க்கையில் கொண்டவர்கள் நினைக்கலாம்.

இந்த உலகில் வசதி வாய்ப்புகள் இல்லா விட்டாலும் ஆரோக்கியமாக, நிம்மதியாக சிலர் இருப்பார்கள். சிலர் ஏழ்மையாக இருப்பதோடு உடலாலும், மனதாலும் பல கஷ்டங்களையும் அனுபவித்துக் கொண்டும் இருப்பார்கள்.

அதிகம் செல்வம் இருக்கும். ஆனால் நிம்மதியே இல்லாமல் கஷ்டத்திலும் சிலர் இருப்பார்கள். கஷ்டமே இல்லாமல் நிம்மதியாக வும் சிலர் இருப்பார்கள். இவர்கள் நினைத்துக் கொள்ளலாம், நாம் தான் வெற்றியாளர்கள் என்று.

ஆனால் இந்த வரியிலே கேள்வியை சொல்லும் இறைவன் அடுத்த வரியிலே விடையையும் சொல்கிறான். தெளிவாகவே சொல்கிறான். யார் நஷ்டவாளிகள் என்று. வெற்றி எது? நஷ்டம் எது? என்று இதைவிட தெளிவாக யாராலும் கூற முடியாது.

"எவர்கள் நம்பிக்கை கொண்டு நல்லறங்கள் செய்கிறார்களோ, இன்னும் உண்மையைக் கொண்டும், பொறுமையைக் கொண்டும் ஒருவருக்கொருவர் உபதேசம் செய்கிறார்களோ அவர்களையும் தவிர" (மற்றவர்கள் நஷ்டத்தில் இருக்கிறார்கள்) ( அல்குர்ஆன் - 103 :3 )

எவர்கள் ஈமான் கொண்டு நல் அமல்கள் செய்கிறார்களோ அவர்களை தவிர என்று சூசக மாக அழகாக கூறுகிறான். ஈமான் கொண்டு விட்டால் மட்டும் போதாது, நல்அமல்கள் செய்தால் மட்டும் போதாது. ஒருவருக்கு ஒருவர் உபதேசிக்கவும் வேண்டும். அப்படி யார் நற்செயல்கள் செய்கிறார்களோ அவர்கள் நஷ்டவாளிகள அல்ல, அவர்கள் யார் என்பதை (அல்குர்ஆன் - 23:1 முதல் 11 வரை ) உள்ள வசனங்களில் கூறுகின்றான்.

நற்செயல்கள் செய்பவர்கள் வெற்றியாளர்கள் என்றும் எவர்கள் நற்செயல் செய்யவில்லை என்றும் இறைவன் அறுதியிட்டு கூறுகிறான்.

மற்றவர்களுக்கு நல்லுபதேசங்களை சொல் லிக்கொண்டே இருப்போம், ஊருக்கெல்லாம் பயான் சொல்கிக் கொண்டே இருப்பார்கள்.

ஆனால் தன் சொந்த வாழ்க்கையில் அதை செயல்படுத்த தவறிவிடுவார்கள் சிலர் சொல்வது வேறு, செயல் வேறு என்று இருந்து விடக்கூடாது என்பதற்காகவே இறைவன் இங்கே, யார் நல் அமல்கள் செய்யவில்லையோ அவர்களே நஷ்ட வாளிகள் என்று செயல்பாட்டிற்கு அதிமுக்கியத் துவம் கொடுக்கிறான். இதனைப்பற்றி இறைவன் இன்னொரு இடத்தில் கூறுகிறான்.

“நம்பிக்கைக் கொண்டோரே! நீங்கள் செய்யாததை ஏன் சொல்கிறீர்கள், நீங்கள் செய்யாததை சொல்வது அல்லாஹ்விடம் கடும் கோபத்திற்குரியது” ( அல்குர்ஆன் - 61:2. 3)

நீங்கள் செய்யாத ஒருகாரியத்தை பிறருக்கு செய்யும் படி கூறாதீர்கள், முதலில் நீங்கள் செய்யுங்கள் என்று சூசகமாக கூறிவிட்டு உபதேசம் செய்துவிட்டு நாம் கோட்டை விட்டு இருப்பது இறைவனின் கோபத்தை பெற்றுத் தரும் என எச்சரிக்கையும் செய்கிறான்.

இன்னொரு இடத்திலே திருமுறையிலே மனிதர்களில் அழகிய செயல் செய்பவர் யார் என்பதை சோதிப்பதற்காகவே வாழ்வு மற்றும் மரணத்தையும் படைத்திருப்பதாகவும் (அல்குர்ஆன் - 67:2) இறைவன் கூறுகிறான்.

இப்படி இறைவனை ஈமான் கொண்டுவிட்டு ஏதோ தொழுகிறோம், ஓதுகிறேன் இது மட்டும் போதும் என்று இருந்துவிடாமல் தொழுகை நமக்கு என்ன உணர்த்துகிறது. கட்டுப்படுதலை உணர்த்துகிறது. துஆ செய்கிறோம் அதனால் நமக்கு இந்த உலகிலே எல்லா சுக போகங்களும் கிடைத்துவிட்டது. இதுதான் வாழ்க்கை என்றும், இதுதான் வெற்றி என்றும் நாம் வாழ்ந்துவிட்டால் இறைவன் ஈருலகிலும் வெற்றியை கேட்க சொல்கிறானே அதன் அர்த்தம் என்ன?

நபி (ஸல்) அவர்களின் அடக்கஸ்தலத்திற்கு வலப்புறம் அபூபக்கரும் (ரழி), இடது பக்கம் உமர் (ரழி) அவர்களும் அடக்கப்பட்டுள்ளார்கள். இன்னும் நபி (ஸல்) அவர்கள் உடனே வாழ்ந்த ஸஹாபாக்கள் எல்லாம் எங்கே? அவர்கள் எல்லாம் எங்கே அடக்கப்பட்டார்கள், நம்மில் எத்தனை பேருக்கு இதுகுறித்து விவரம் தெரியும்? தெரியாது ஏனென்றால்,

இந்த மார்க்கத்தை இவ்வையகம் எங்கிலும் உள்ள மக்களுக்கு எத்தி வைக்க வேண்டும் என்ற எண்ணத்திலே தன் குதிரை எந்த திசை நோக்கி செல்கிறதோ அந்த திசை நோக்கியே தன் உள்ளத்தில் மார்க்கத்தை சுமந்தபடி தன் குடும்பம், தன் ஊர், தன் உறவு எல்லாவற்றை யும் விட்டு விட்டு சென்றார்களே, அந்த ஸஹா பாக்கள் எல்லாம் எங்கு மார்க்கப் பணி செய்தார் களோ அங்கேயே மடிந்தும் போய் இருப்பார்கள். காரணம் என்ன நாம் நஷ்டவாளிகள் ஆகிவிடக் கூடாது, மறுமையில் வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கமே அவர்களை உந்தித் தள்ளியது.

இன்று நாம் பார்க்கிறோம், நம்மில் எத்தனை பேருக்கு தன் சொந்த பொருள் மீது இருக்கும் அக்கறை போல், இறைவனுக்குச் சொந்தமான பொருள் மீது அக்கறை இருக்கிறது. ஆம், நமது வரலாற்றுச் சிறப்புமிக்க இறை இல்லமான “பாபரி மஸ்ஜித்” இடிக்கப்பட்டு ஆண்டுகள் பல நம்மை விட்டு ஓடோடி விட்டது.

ஆண்டுதோறும் டிசம்பர் மாதம் வந்து விட்டால் அந்த நாளில் கருப்பு நாளாக ஆக்கி ஆர்ப்பாட்டங்களும், போராட்டங்களும் நடந் துக் கொண்டே இருக்கிறது. ஆனால் இதனால் என்ன பலனை நாம் கண்டோம்? அங்கே எதை கட்ட பள்ளிவாசலை இடித்தார்களோ அதைக் கட்டவே பணிகள் தீவிரமாக நடந்துக் கொண்டி ருக்கிறது. இந்த நிலையிலும் கூட நாம் இறை வனும், இறைத் தூதரும் காட்டித் தந்த வழி முறைகளையே கையாள வேண்டும்.

இன்னும் வளர்ந்து வரும் சந்ததியினர்களுக்கு பாபரி மஸ்ஜித் என்றால் என்ன? அதன் வரலாறு என்ன என்பது கூட தெரியா வண்ணமே உள்ளது. நம்முடைய மக்களுக்கு குர்ஆன்,ஹதீஸோடு நம்முடைய வரலாறுகளையும் நாம் கற்றுக் கொடுக்க வேண்டும். ஈமான் கொண்டவர்களாய் முஸ்லிம்களாய் வாழ்ந்தால் மட்டும் சொர்க்கம் சென்று விட முடியாது. நம் வாழ்வு செயல் பாடுகள் நிறைந்த சிறந்த புத்தகங்கள் போல் இருக்க வேண்டும். மற்றவர்களும் பயன் பெறும் வகையில் வாழ்ந்து இரு உலகிலும் வெற்றி பெற வேண்டும். ●

**பிழை திருத்தம்:** அக்டோபர் மாத இதழில் வெளிவந்த கோரப்படாமல் இருக்கும் முஸ்லிம்களின் பணம் என்ற தலைப்பில் டெல்லி மாநில சிறுபான்மை ஆணையத்தின் தலைவர் ஜபருல் இஸ்லாம் கான் என்று குறிப்பிட்டதை சப்தர் ஹுசைன் கான் என்று படிக்கவும். (சப்தர் ஹுசைன் கான் முன்னாள் தலைவர் ஜபருல் இஸ்லாம் கான் தற்போதைய தலைவர்)

# மாற்றத்தை நோக்கி

ஜனநாயக போர்வையில் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்நாட்டு மக்கள் அனைவரும், அந்த ஜனநாயகத்தின் பெயராலயே பல துன்பங்களால் சிதைக்கப்படுகிறார்கள். நாம் தீர்வு என கருதி கையில் எடுத்த ஒன்றின் பெயராலயே நாம் நசுக்கப்படுகிறோம். ஆக இதற்கு நிரந்தரமான தீர்வு எது? எவற்றிலும் நம்மை சீர்ப்படுத்தக்கூடிய நேர்வழி பெற்றுத் தரக்கூடிய ஒரு மாற்றம் நிகழ வேண்டும். அம்மாற்றத்தை நோக்கி நாம் எவ்வாறு பயணிக்க வேண்டும். அம்மாற்றம் நமக்கு தரும் தீர்வு என்ன? நாம் எப்பேர்பட்ட இலக்கை நோக்கி அம்மாற்றத்தில் பயணிக்க வேண்டும் என்ற கேள்விகளை மக்கள் மத்தியில் பரவலாக காணப்படுகிறது.

இச்சமுதாயத்திற்கு நாம் தேர்ந்தெடுக்க வேண்டிய பாதை, நாம் அடைய வேணடிய இலக்கு இதுதான் என்று அம்மாற்றத்தை எடுத்துரைக்கும் விதமாக, “நீதி அமைதிக்கான மக்கள் இயக்கமும்“ மற்றும் “தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட்” சார்பாக “மாற்றத்தை நோக்கி” என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றபது.

இந்நிகழ்ச்சியில் வருங்கால சுன்னத் ஜமாஅத் செயலாளர் அல்ஹாஜ் கே.ஏ. அபுதாஹீர் அவர்கள் தலைமை வகித்தார். சகோதரர் சிக்கந்தர் அலி அவர்கள் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அனைவரையும் வரவேற்கும் விதமாக வரவேற்புரை நிகழ்த்தினார்.

**தாருல் இஸ்லாம்**

வைகறை வெளிச்சம் துணை ஆசிரியரும், சென்னை மந்தவெளி பள்ளிவாசலின் தலைமை இமாம் கே.எம். இல்யாஸ் ரியாஜி அவர்கள் சிறப்புரையாற்றினார். இன்று இந்நாட்டு மக்கள் சந்தித்து வரும் இன்னல்கள் பற்றியும், தனக்கு எதிராக வேலை செய்பவர்கள் யார் என்று கூட மக்கள் அறிய முன் வராமல் இருப்பதை சுட்டிக் காட்டினார்.

இந்த அரசு ஜனநாயகத்தின் பெயரை வைத்துக் கொண்டு செய்து வரும் வேடிக்கைகளும், மக்களுக்கு நிகழ்த்தும் துயரங்களும், அதில் நாம் பெற கூடிய படிப்பினையும் நாம் சிந்திக்கக் கூடிய விஷயத்தையும் முன் வைத்தார். இதற்கெல்லாம் தீர்வு இஸ்லாத்தில் தான் இருக்கிறது. அந்த மாற்றத்தை நோக்கி ஒற்றுமையுடன் பயணிக்க வேண்டும் என்று தன் உரையை முடித்தார்.

மேலும் தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் தலைவர் மற்றும் வைகறை வெளிச்சம் ஆசிரியருமான அண்ணன் மு. குலாம் முஹம்மது அவர்கள் உரையாற்றினார். இந்துத்துவா பயங்கரவாதத்தின் வெளியில் அறியப்படாத பல செய்திகளை வெளிப்படையாக தெரிவித்தார். இந்நாட்டு அரசு நம்மை எப்படியெல்லாம் ஏமாற்றுகிறது என்பதை சுட்டிக்காட்டினார்.

மத்திய அரசு கையில் எடுத்திருக்கும் ஆதார் அட்டையின் விளைவு, அதன்மூலம் மக்கள் எப்படி இன்னல்களை சந்தித்தார்கள் என்பதை மிக தெளிவாக எடுத்துரைத்தார்கள். இந்த அடையாள அட்டை மூலமாக இனப்படுகொலை (Genolide) எப்படி வழிவகுத்தது என்பதை உருக்கமாக பதிவிட்டார்.

சாதியின் பெராயல் அனுபவிக்கும் துயரங்களையும் அதற்கு தீர்வு இஸ்லாத்தில் மட்டும் தான் உள்ளது என்று பெரியாரின் சொல்லை முன் வைத்தார். இந்த சங்கப்பரிவாரத்தினர் முஸ்லிம்களுக்கு எதிராக நிகழ்த்திய இனப்படுகொலையையும், இன்னும் நிகழ்ந்த திட்டம் தீட்டியவர்களாக இருப்பதை இச்சமூகம் அதை புரிந்து அதை எதிர்கொள்ள தயாராக இருக்க வேண்டும் என்பதை தெளிவுபடுத்தினார்.

சங்கப்பரிவாரர்கள் அவர்களின் கொள்கை ரீதியாக எதிர்க்கிறார்கள். ஆகவே நாமும் நம் கொள்கை ரீதியாக அவர்களை எதிர்க்க வேண்டும் என வலியுறுத்தினார். எதிரிகள் எந்த வடிவில் வருகிறார்களோ அந்த வடிவில் எதிர்கொள்ள வேண்டும் என்றார்.

இஸ்லாமிய சமுதாயமாக இருந்தாலும் சரி, தாழ்த்தப்பட்ட சமுதாயமாக இருந்தாலும், இஸ்லாமிய ஆட்சியின் கீழ்தான் அனைவரும் நிம்மதியாக வாழ முடியும் என்பதை எடுத்துரைத்தார். சகோதரத்துவமும், சம நீதியும் இஸ்லாத்தில் மட்டும்தான் உள்ளது என்பதை கலிபா உமர் (ரலி) அவர்களின் வரலாற்றை முன் வைத்து, மக்கள் தேடும் மாற்றத்திற்கு பெயர் “இஸ்லாம்“ அந்த மாற்றத்தை நோக்கி நாம் பயணிக்க வேண்டும். அதுவே நமக்கு வெற்றி என்பதை தெளிவுபடுத்தினார். ●

# அன்பகத்தின்

## அன்பான வேண்டுகோள்!

**அன்பார்ந்த வாசகர்களே! அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)**

**எமது இஸ்லாமியப் பிரச்சாரப் பணிகள் 37 ஆண்டுகளைக் கடந்து, 38 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கின்றன. அல்ஹம்துலில்லாஹ்.**

ஒரு நீண்ட நெடும்காலம் கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும், எங்கள் பிரச்சாரங்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன. அல்லாஹ், எங்கள் வழி பல பிரபல்யங்களுக்கு, நேர்வழியைக் காட்டினான் அல்ஹம்துலில்லாஹ்.

அப்படி இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்களுக்கு இஸ்லாத்தின் செயல்முறை களையும் இஸ்லாத்தின் அனைத்துப் பகுதிகளையும் கற்றுத் தருவதற்கென மூன்று கல்வி நிறுவனங்களை நிறுவியுள்ளோம். அல்ஹம்துலில்லாஹ்.

இந்த மூன்று நிறுவனங்களிலும் பல்லாயிரக்கணக்கானோர் மார்க்க கல்வியை கற்று சென்றுள்ளார்கள். அவ்வாறு நிறுவப்பட்ட மூன்றாவது கல்விக்கூடமே அன்பகம். அதுவும் தன் 10 ஆம் ஆண்டை நிறைவு செய்கின்றது. எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே!

இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கல்வி கற்றுச் சென்றிருக்கின்றார்கள். அன்பகம் கடந்த 10 ஆண்டுகளாக ஒரு வாடகைக் கட்டடத்தில் தான் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இதையும் அடிக்கடி மாற்றிட வேண்டிய நிலை.

**இன்ஷா அல்லாஹ்** அதனை ஒரு சொந்தக் கட்டடத்திற்கு மாற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். அதற்கு உங்கள் நிதி உதவிகளை தாராளமாக வழங்கும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

**அல்லாஹ் உங்களுக்கு அளப்பரிய கூலிகளை வழங்கிடப் போதுமானவன்.**

இவண்,

**மு. குலாம் முஹம்மது,** பேராசிரியர் **இல்யாஸ் ரியாஜி**

ஹாஜி. **அப்துல் ரவூஃப்**

**செக், டி.டி. அனுப்புவோர்**

**DARUL ISLAM FOUNDATION TRUST**

என்ற பெயருக்கு எடுத்து பின்வரும் முகவரிக்க அனுப்பவும்

51/1, மண்ணடி தெரு, 4-வது மாடி, அறை எண்.7, மண்ணடி, சென்னை - 600 001.

website : www.darulislam.in, Email : darultrust@yahoo.com,

Please draw your cheques / **DD in Favour of DARUL ISLAM FOUNDATION TRUST**

**Canara Bank A/c. 1287101017301** Branch St.Mary's Road, R.A.Puram, Chennai.

and send to : 52/1, Mannadi Street, 4th Floor, Room No.7, Mannadi, Chennai - 600 001.

**Mobile : 81481 29887,** Email : darultrust@yahoo.com, website : www.darulislam.in

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001.
Editor M. Gulam Mohamed, Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFSET PRINTERS,**
19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.